# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 20 வெள்ளிக்கிழமை (05.08.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 252




13 மட்டக்களப்பில் காகங்கள் இறப்பு



14 மீண்டும் ஒரு தடவை பிளவுண்ட இலங்கை



20 நாடு பிரிவதை எவராலும் தடுக்க முடியாது



21 பொருளாதாரத் தடை விதிக்கவே முடியாது

# முறிந்தது பேச்சு

## கூட்டமைப்பின் நிபந்தனைகளை ஏற்க மறுத்தது அரசு

கொழும்பு, ஓகஸ்ட் 5

**அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நடைபெற்று வந்த அரசியல் தீர்வு தொடர்பான பேச்சு நேற்று நடந்த பத்தாவது சுற்றுடன் முறிந்தது. தொடர்ந்தும் இழுத்தடிக்காமல் தீர்வுக்கான அதிகாரப் பகிர்வு குறித்து இரு வார காலத்துக்குள் அரசு பதிலளிக்க வேண்டும் என்று கூட்ட மைப்பு நேற்று அரசுக்கு நிபந்தனை விதித்தது. அந்த நிபந்தனையை ஏற்க மறுத்துள்ள அரசு, கூட்டமைப்பு நடவடிக்கை காரணமாக தீர்வு குறித்து இனி நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஊடாகவே ஆராயப்படும் என்று நேற்றிரவு திடீரென அறிவித்தது.**

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் அரசு - கூட்டமைப்பு இடையிலான பேச்சு நடைபெற்று வந்தது. நேற்று ஜனாதிபதி செயலகத்தில் பத்தாவது சுற்றுப் பேச்சு மாலையில் இடம்பெற்றது. எனினும் இந்தப் பேச்சிலும் ஆக்கபூர்வமான முன்னேற்றம் ஏதும் ஏற்படவில்லை என்று கூட்டமைப்பு விசனம் அடைந்தது.

இதனை அடுத்து ஆட்சி அதிகாரக் கட்டமைப்பு, மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்கும் இடையில் மேற்கொள்ளப்படும் பங்கீடுகள் மற்றும் அவற்றின் செயல்பாடுகள், நிதி மற்றும் நீதி அதிகாரங்கள் ஆகிய மூன்று விடயங்கள் குறித்தும் அரசு தனது முடிவை அறிவிக்க வேண்டும் என்று

பக் 28

# ஜெகத் டயஸ் மீதும் போர்க் குற்றச்சாட்டு

ஜெனீவா, ஓக. 5

இலங்கை இராணுவத்தில் பணியாற்றிய மற்றொரு உயர் அதிகாரி மீதும் போர்க் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டுள்ளது. இறுதிப் போர் நடைபெற்ற காலப் பகுதியில் வன்னியில் கடமையாற்றியவரான மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் மீது சுவிஸில் உள்ள இரு அமைப்புக்கள் இந்தக் குற்றச்சாட்டைச் சுமத்தி உள்ளன.

ஜெகத் டயஸ் தற்போது ஜேர்மனி, சுவிஸ் மற்றும் வத்திக்கான் ஆகிய நாடுகளுக்கான பிரதித் தூதுவராக 2009 செப்ரெம்பர் முதல் கடமையாற்றி வருகின்றார். அதனால் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படி கோரி சுவிஸில் உள்ள அச்சுறுத்தப்பட்ட மக்கள் சமூகம் மற்றும் ட்ரெய்ல் ஆகிய அமைப்புக்கள் நாட்டின் சட்ட மா அதிபரிடம் முறைப்பாடுகளை வழங்கி உள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ-மூனினால் நியமிக்கப்பட்ட

பக் 27

# அதிகாரப் பகிர்வு பற்றி விளக்க அரசுக்கு இரு வார காலக்கெடு

## கூட்டமைப்பு நேற்று திடீர் அறிவிப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 5

அதிகாரப் பகிர்வை எந்த வகையில் மேற்கொள்ளப் போகிறது என்பதை அரசு விளக்கினால் மட்டுமே அதனுடன் மேற்கொண்டு பேச்சு நடத்த முடியும் என்று நேற்றிரவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திடீரென அறிவித்துள்ளது. நேற்றுப் பிற்பகலில் அரசுடன் நடத்திய 10ஆவது சுற்றுப் பேச்சின் பின்னர் கட்சி விடுத்த அறிக்கையில், ''பேச்சைத் தொடர்ந்து முன்னெடுப்பதாயின் - ஆட்சி அதிகாரக் கட்டமைப்பு, மத்திய அரசுக்கும் மாகாணத்துக்கும் இடையில் பங்கிடப்படும் விடயங்கள் மற்றும் அவற்றின் செயல்பாடுகள், நிதி மற்றும் நீதி அதிகாரங்கள் ஆகிய மூன்று தொடர்பிலும் இரண்டு வாரகாலத்துக்குள் பதிலளிக்க வேண்டும்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசு பதிலளிக்க மறுத்தால் கூட்டமைப்பு பேச்சுக்களில் இருந்து வெளியேறக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டது.

அரசு - கூட்டமைப்புப் இடையிலான பேச்சுக்களின் 10ஆவது

பக் 27

# விடுதலைப் புலிகளைப் போன்று நடந்து கொள்கிறது கூட்டமைப்பு

## பதில் அறிக்கை விடுத்தது அரசு

கொழும்பு, ஓக. 5

விடுதலைப் புலிகள் இயக்கம் போன்று நடந்து கொள்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று அரசு குற்றஞ்சாட்டி உள்ளது. நேற்றைய 10ஆவது சுற்றுப் பேச்சுக்களைத் தொடர்ந்து அரச பேச்சுக் குழுவின் செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அடுத்த சுற்றுப் பேச்சுக்கான திகதியைத் தீர்மானிக்க கூட்டமைப்பு மறுத்து விட்டது. அரசியல் தீர்வு தொடர்பான 3 கோரிக்கைகளுக்கு அரசு 10 நாள்களுக்குள் பதிலளிக்க வேண்டும் என்று அது தெரிவித்துள்ளது.

கூட்டமைப்பு குறிப்பட்ட 3 விடயங்கள் குறித்தும் விவாதிப்பதற்கு தன்னால் முடிந்த அனைத்து முயற்சி

பக் 27

# போர்க்குற்ற விசாரணை வலியுறுத்துகிறார் ராதிகா

ரொறன்டோ, ஓக. 05

இலங்கைக்கு எதிராக யுத்தக் குற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென கனடாவின் புதிய ஜனநாயகக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கை மீது யுத்தக் குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும். இது குறித்து ஐக்கிய நாடுகள் அமைப்பை கனடா வலியுறுத்த வேண்டும்.

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழுவால் வெளியிடப்பட்டுள்ள

பக் 27

# சமஷ்டிமுறைக்கு ஆதரவாகவே வடபகுதி மக்கள் வாக்களிப்பு

## ஜயலத் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, ஓக.05

வடக்கு மக்கள் சமஷ்டி முறைமையைக் கோரியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்துள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

வடக்கில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும், அரசிடமிருந்து அரசியல் தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என்பதற்காகவே வடக்கு மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்தனர் என்று மின்சக்தி அமைச்சரும், ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளருமான பாட்டாலி சம்பிக்க ரணவக்க அண்மையில் தெரிவித்திருந்தார்.

பக் 28



நல்லூர் கந்தன் ஆலய பெருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நேற்றைய கொடியேற்றத் திருவிழா வில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கலந்து கொண்டனர்.(த-7-86)

# ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டால் இளநீருடன் ஆஸ்பத்திரி செல்வேன்

## அது தான் என்னால் முடியும் என்கிறார் கெஹலிய

கொழும்பு, ஓக.05

ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டால் நான் செவ்விளநீருடன் சென்று அவர்களைப் பார்ப்பேன். ஆனால், ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டது தொடர்பான விடயத்தில், விசாரணையில் என்னால் தலையிட முடியாது. ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள், ஊடகவியலாளர்கள் கொலை குறித்து அரசு அசட்டையாக இருக்கவில்லை. போதுமான சாட்சியங்கள் இல்லாத காரணத்தாலேயே பொலிஸாரால் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. உதயன் செய்தி ஆசிரி

பக் 28

# இலங்கைத் தமிழர் நலனிலேயே இந்தியாவுக்கு இப்போது கவனம்

## வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா நாடாளுமன்றில் தெரிவிப்பு

புதுடில்லி, ஓக. 5

இந்தியாவைப் பொறுத்தவரையில் அது இலங்கைத் தமிழர்களின் நலன்களைக் கவனிப்பதில்தான் இப்போது முக்கிய கவனம் செலுத்துகிறது என்று வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா தெரிவித்துள்ளார். அதே வேளை, இலங்கையில் உள்ள சிறுபான்மையினர் உட்பட அனைத்து சமூகத்தினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய, நீடித்த அமைதிக்கான தீர்வு ஒன்றை கொழும்பு அரசு காண வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று தமிழக சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்றியது, இலங்கை நாடாளுமன்றக் குழுவுக்கு இந்திய நாடாளுமன்றத்தில் அதிமுகவினர் எதிர்ப்புத் தெரிவித்தது மற்றும் சனல்-4

பக் 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானம் காணப்படும் சாத்தியம்.

# உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவருக்கு தேசிய அடையாள அட்டை கட்டாயம்

கொழும்பு, ஓக.5

எதிர்வரும் 8 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் கட்டாயம் தேசிய அடையாள அட்டையையே சமர்ப்பிக்க வேண்டும் எனப் பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

இந்த மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் கட்டாயம் தேசிய அடையாள அட்டையை வைத்திருக்க வேண்டும். இவ்வாறு வைத்திருக்காதவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்பட மாட்டாது - என்றார்.

இந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஆள்பதிவுத் திணைக்களப் பணிப்பாளர் ஜகத் விஜயவீர-

இந்த முறை உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் பெரும்பாலான மாணவர்களிடம் தேசிய அடையாள அட்டைகள் உள்ளது. அவ்வாறு இல்லாதவர்கள் எம்மால் தற்போது வழங்கப்பட்டுவரும் விசேட சேவையின் மூலம் அவற்றை விரைவாகப் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான விசேட கரும பீடங்களையும் நாம் திறந்து வைத்துள்ளோம். தேசிய அடையாள அட்டையை மாணவர்களே நேரடியாக வந்து பெற்றுக்கொள்ள முடியும்.

இது தொடர்பான மேலதிக தகவல் ஏதாவது தேவைப்படின் 011 2585043 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்- என்றார். (த-15)

## மின்தடை

உயரழுத்த மின்விநியோக மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் யாழ்.மாவட்டங்களில் பல இடங்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என மின்சார சபையின் யாழ்.மாவட்ட பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

நாளை சனிக்கிழமை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர் பாதுகாப்பு வலயப் பகுதிப் பிரதேசங்களிலும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். குடாநாடு முழுவதும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# இராமாவில் நலன்புரி நிலையம் நேற்றுடன் முற்றாக மூடப்பட்டது

## இறுதியாக இருந்த 24 குடும்பங்களும் மீள்குடியமர்வு

யாழ்ப்பாணம், ஓக.5

இராமாவில் நலன்புரி நிலையம் நேற்று வியாழக்கிழமையுடன் மூடப்பட்டதாக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

இராமாவில் நலன்புரி நிலையத்தில் இறுதியாகத் தங்கியிருந்த முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, கரைத்துறைப்பற்று ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த 24 குடும்பங்களில் உள்ள 94 பேர் சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்காக முல்லைத்தீவு அரச அதிபரினால் பொறுப்பேற்கப்பட்டனர்.

இதனையடுத்து இராமாவில் நலன்புரி நிலையம் மூடப்பட்டதாக யாழ்.அரச அதிபர் நேற்று அறிவித்தார்.

இந்த நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்காக ஒத்துழைப்பு வழங்கிய அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அரச அதிபர் நன்றி தெரிவித்துள்ளார். (த)



நாவற்குழி அ.த.க.பாடசாலைக்கு 'வேள்ட் விஷன்' நிறுவனம் 'பான்ட்' வாத்தியக் கருவிகளை வழங்கியது. இந்த நிறுவனத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ஏ.ஜி.றொசைறோ, திட்ட உத்தியோகத்தர் அபிராமி சண்முகநாதன் ஆகியோர் 'பான்ட்' வாத்திய உபகரணங்களை வட மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் முத்துஇராதாகிருஷ்ணன், பாடசாலை அதிபர் சி.சோமசுந்தரம் ஆகியோரிடம் கையளிக்கின்றனர். (த)

# அகில இலங்கை சைவ மாநாடு இன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

## சென்னைப் பல்கலைக்கழக முனைவர் சரவணன் பங்கேற்கிறார்

யாழ்ப்பாணம், ஓக.5

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நடத்தும் அகில இலங்கைச் சைவ மாநாடு இன்று முதல் 3 தினங்கள் யாழ்ப்பாணம் நீராவியடியில் உள்ள மேற்படி சபையின் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமைவரை நடைபெறும் இந்த மாநாடு சென்னைப் பல்கலைக்கழக சைவ சித்தாந்தத் துறையின் முன்னாள் வருகைப் பேராசிரியர் முனைவர் நல்லூர் சா.சரவணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இன்றைய நிகழ்வில் அகில இலங்கைத் திருமுறை மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்ப நாயகத்தின் திருமுறை ஓதுதலும், துறைசை ஆதீன திருமுறைத் தோன்றல் இராசையா திருஞான சம்பந்தனின் பண்ணிசையும், சைவ பரிபாலன சபை சமயப் பிரசார அமைச்சர் சைவப் புலவர் மு.திருஞானசம்பந்தப் பிள்ளையின் வரவேற்புரையும் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் அருளுரையும் இடம்பெறவுள்ளது.

நாளை காலை நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறைப் பேராசிரியர் கலைவாணி இராமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அகில இலங்கைத் திருமுறை மன்றம் சி.கிருஸ்ணமூர்த்தியின் திருமுறை ஓதலும், சபை உறுப்பினர் இராசையா குகதாசனின் வரவேற்புரையும் இடம்பெறும். 'சைவமும் பெண்மையும்' மகளிர் கருத்தரங்கில் 'சமூக வாழ்வியலில்' என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் திருமதி மனோன்மணி சண்முகதாசும், 'நாளாந்த வாழ்வியலில்' என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகமும், 'கல்வி வாழ்வியல்' என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் திருமதி சுகந்தினி ஸ்ரீமுரளிதரனும் உரை நிகழ்த்தவுள்ளனர். 'சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வரலாற்று வாய்மை' எனும் சிறப்புரையினை முனைவர் நல்லூர் சா.சரவணன் நிகழ்த்துவார்.

நாளை மாலை நிகழ்வு சைவ பரிபாலன சபையின் துணைத் தலைவர் சைவப் புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளையின் தலைமையில் நடைபெறும். இதில் 'சுந்தர் செந்தமிழ்' கருத்துரையினை யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் அ.சண்முகதாஸும், 'செந்தமிழ்பாடு' கருத்துரையினை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனும், 'சுந்தரமூர்த்தி சுவாமிகளின் மெய்பொருட் செம்மை' கருத்துரையினை முனைவர் நல்லூர் சா.சரவணனும் நிகழ்த்தவுள்ளனர்.

நாளைமறுதினம் காலை நிகழ்வு யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும். இதில் 'சைவநெறிகாட்டும் வாழ்வியல்' என்ற கருத்தரங்கில் 'உடல் உள மேம்பாட்டுக்கு' என்ற தலைப்பில் கிழக்குப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.முகுந்தனும், 'ஆன்ம ஈடேற்றத்துக்கு' என்ற தலைப்பில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் மு.கௌரிகாந்தனும், 'சமூக இணைப்புக்கு' என்ற தலைப்பில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனும், 'மனித நேயத்துக்கு' என்ற தலைப்பில் சரவணை நாகேஸ்வரி மகா வித்தியாலய ஆசிரியர் கு.பாலசண்முகமும் உரையாற்றவுள்ளனர்.

மாலை நிகழ்வில் சைவபரிபாலன சபைத் தலைவர் சிவநெறிப் புரவலர் த.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்தநிகழ்வில் 'சைவமும் நாமும்' என்ற தலைப்பில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஓய்வுநிலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசும், 'சைவசித்தாந்த மேம்பாட்டுக்கு ஈழத் தமிழரின் பங்களிப்பு' என்ற தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் மா.வேதநாதனும், 'பொய் காட்டா மெய்' என்ற தலைப்பில் சிறப்புரையினை முனைவர் நல்லூர் சா.சரவணனும் நிகழ்த்தவுள்ளனர்.

இந்த மாநாடு 16 வருடங்களின் பின்னர் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-எ)

# நிகழ்வுகள்

### பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஓக 5

ஆனைக்கோட்டை, உயரப்புலம் குணபாலன் வித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும் யுனிசெவ் செயற்றிட்டத்தின் கற்றல் ஓவியங்கள் அங்குரார்ப்பண நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.15 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரனும் சிறப்பு விருந்தினர்களாக யுனிசெவ் செயற்திட்டத்தின் இணைப்பாளரும் வலிகாமம் கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளருமான எஸ். கணேசலிங்கமும், ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர் கே. தனபாலசிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். [illegible]

### மருத்துவநூல் அறிமுக விழா

பேராசிரியர் மருது கந்தப்பு எழுதிய "மூளை நரம்பியல் சிகிச்சை" என்னும் மருத்துவப் புத்தக அறிமுக விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முன்னாள் வடக்கு மாகாண சுதேச மருத்துவப் பணிப்பாளரும், யாழ்.பல்கலைக் கழகத்தின் இளைப்பாறிய சித்த மருத்துவத்துறைத் தலைவருமான பேராசிரியர் சு.பவானி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் ஆயர் கலாநிதி இராயப்பு யோசப்பு கலந்து கொள்வார். (ற-311)

* * *

### தினமும் ஆன்மிகச் சொற்பொழிவு

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் [illegible] ஏற்பாட்டில் நல்லூர் கந்தன் மகோற்சவத்தை முன்னிட்டு தினமும் ஆன்மிகச் சொற்பொழிவுகளை நடத்தத் தீர்மானித்துள்ளார்.

தினமும் மாலை 6.30 மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள அறுபத்து மூன்று நாயன்மார் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

'திருமுறையும் சைவவாழ்வும்' என்ற தலைப்பில் இன்று வெள்ளிக்கிழமை சைவப்புலவர் கு.சுமுகலிங்கம் சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.

நேற்று 'வெற்றிவேல்' என்னும் தலைப்பில் சைவப் புலவர் செ.கந்தசத்தியநாதன் சொற்பொழிவாற்றினர்.

சைவமும் தமிழும் தழைத்தோங்கிடச் செய்திடல் வேண்டும் என்ற நோக்கில் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கும் ஆன்மிக சொற்பொழிவுகளில் சைவத்தமிழ் மக்களை கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. (ற-311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் மீதான தொடர் கொடூர வன்மங்களுக்கு குகாவின் தாக்குதலுடன் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்

## அரசு நடவடிக்கை எடுக்குமா? பொது ஊழியர் சங்கம் கண்டனம்

உதயன் மீதான தொடர்ச்சியான தாக்குதல்களுக்கும் கொடூர வன்மங்களுக்கும் செய்தியாசிரியர் குகநாதன் மீதான தாக்குதலுடன் முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். அரசு இனியாவது ஊடகச் சுதந்திரத்தைக் காக்க நடவடிக்கை எடுக்குமா?

- இவ்வாறு கேள்வி எழுப்பி கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம்.

கல்முனையில் நடைபெற்ற அகில இலங்கைப் பொது ஊழியர் சங்கத்தின் முகாமைத்துவ சபைக் கூட்டத்தில் இதற்கான கண்டனத் தீர்மானம் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்முனை சனச சமாஜ வெளி மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி முகாமைத்துவக் கூட்டத்துக்குத் தலைமை வகித்த சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன் கண்டனத் தீர்மானத்துக்கான பிரேரணையை முன்மொழிந்தார்.

தலைவர் லோகநாதன் பிரேரணையை முன்மொழிந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

''யாழ்ப்பாணத்தில் இருந்து கடந்த 25 வருடங்களுக்கு மேலாக வெளிவந்து கொண்டிருக்கும் உதயன் நாளிதழின் செய்தி ஆசிரியர் குகநாதன் சிரேஷ்ட ஊடகவியலாளராகத் திகழ்வதுடன் துணிச்சல் மிக்க நடுநிலை பிறழாத ஊடகவியலாளர் ஆவார்.

இத்தகைய சிரேஷ்ட ஊடகவியலாளர் மீது கையாலாகாதனமாகவும், கோழைத்தனமாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ள தாக்குதல் வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும்.

அன்றிலிருந்து இன்றுவரை வடக்கு மக்களுக்கெதிராகத் திணிக்கப்பட்ட அடக்கு முறைகளுக்கு எதிராகவும், அநீதிகளுக்கு எதிராகவும் குரல் கொடுத்து வரும் உதயன் நாளிதழ், தமிழ்த் தேசியத்தைக் காக்கும் பெரும் சக்தியாகவும் திகழ்ந்து வருகின்றது.

### கருத்தைக் கருத்தால் வெல்ல திராணியற்ற கும்பலின் வன்மம்

ஆனால் கருத்தைக் கருத்தால் வெல்லத் திராணியும், தகுதியும் அற்ற ஓர் கும்பல் உதயன் நிர்வாகம் மீதும், அதன் ஊடகவியலாளர்கள், ஊழியர்கள் மீதான தமது காட்டுமிராண்டித்தனச் செயலைத் தொடர்ந்தும் கட்டவிழ்த்துவிட்டு வருகின்றது.

இலங்கையின் ஊடக சுதந்திரம் பற்றி சர்வதேசமே கேள்வி எழுப்பிக் கொண்டிருக்கும் நிலையில் குகநாதன் மீதான இந்தத் தாக்குதல் ஊடக சுதந்திரம் தொடர்பிலான இலங்கையின் நிலைப்பாட்டை மேலும் கேள்விக்குறியாக்கியுள்ளது.

'இனந்தெரியாதோர்' என்ற சொற்பதத்துள் மறைந்து நிற்கும் சமூக விரோதிகளான இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சூத்திரதாரிகள் இனம்காணப்பட்டு சமூகத்தின் முன் வெளிக்காட்டப்படுவதுடன், தயவு தாட்சண்யமற்ற வகையில் நீதியின் தண்டனைக்கும் உட்படுத்தப்பட வேண்டும்.

மேலும் உதயன் மீது தொடர்ந்து வரும் இத்தகைய கொடூர வன்மத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க, ஊடக சுதந்திரம் பற்றி மேலோங்கிப் பேசும் அரசு காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வரவேண்டும்''- என்றார்.

சங்கச் செயலாளர் எம்.எம்.ஏ. வகாப் பிரேரணையை வழிமொழிந்ததைத் தொடர்ந்து ஏகமனதாக இந்தக் கண்டனப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

மேலும் இந்தக் கண்டனத்தில் தீர்மானத்தின் பிரதிகளை உதயன் நிறுவனம், ஊடகவியலாளர் குகநாதன் குடும்பத்தினர் உட்பட ஜனாதிபதி மற்றும் ஊடக அமைச்சருக்கும் அனுப்பிவைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒ-30)

# ஊடகத்துறைக்கு எந்தவித சுதந்திரமும் இல்லை குகா மீதான தாக்குதல் இதனையே நிரூபிக்கிறது

## இலங்கை ஆசிரியர் சங்கம் கூறுகிறது

''உதயன் செய்தி ஆசிரியர் ஞா.குகநாதன் மீது மேற்கொள்ளப்பட்ட கோழைத்தனமான தாக்குதல் இலங்கையில் ஊடகத்துறைக்கு எந்தவிதமான சுதந்திரமும் இல்லை என்பதையும்; அரசு அடக்குமுறை ஊடாக வங்குரோத்து தனமான முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ளது என்பதை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தியுள்ளது''

- இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் யோசேப் ஸ்ரான்லின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பயங்கரவாதத்தை இல்லாமல் ஒழித்துவிட்டோம் என கூறிக் கொண்ட ஜனாதிபதி உட்பட அமைச்சர் பட்டாளமும் உயர் அதிகாரி குழாமும் யாழ்ப்பாணத்தில் முகாமிட்டு உள்ளூராட்சி தேர்தல் பரப்புரைகளை மேற்கொண்டனர். எதிர்பார்த்த வெற்றியை எட்டவில்லை என்பதற்காக வங்குரோத்துத் தனமான முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ளது. பயங்கரவாதத்தை அழித்துவிட்டோம் என கூறும் அரசு அடாவடித்தனமான அடக்கு முறை மூலம் ஊடகத்துறை மீது தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது.

அரச பயங்கரவாதம் மேலோங்கி வருகின்றது. இதனை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாக கண்டிப்பதுடன் இதற்கு எதிரான விழிப்புணர்வு ஏற்பட வேண்டும் எனவும் வேண்டிக் கொள்கின்றது.

உதயன் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களும் குகநாதன் மீது பகிரங்கமான இடத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மூலம் இலங்கையில் ஊடக சுதந்திரம் இல்லை என்பதை உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளது எனத்தெரிவித்துள்ளார்.

(ஒ-11)

# தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறது யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்


உதயன் செய்தி ஆசிரியர் ஞா.குகநாதன் தாக்கப்பட்டது தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:

எமது சமூகத்தின் கருத்துகளை கருத்துகளால் எதிர்கொள்வதற்கான பக்குவம் வளர்த்தெடுக்கப்படுதல் வேண்டும். 30 வருட கால உள்நாட்டு யுத்தத்தினை எதிர்கொண்ட எமது சமூகத்தின் மன அழுத்தங்களுக்கான வடிகால்கள் மிகவும் அவசியம். எழுத்துச் சுதந்திரமும் பேச்சுச் சுதந்திரமும் எமது சமூகத்தின் மன அழுத்தங்களுக்கு வடிகால்களாக அமையும். அந்த வகையில் பத்திரிகைச் சுதந்திரத்தினைப் பாதுகாப்பது எமது சமூகத்தின் அக்கறை கொண்ட அனைவரினதும் கடமையாகும்.

உதயன் செய்தி ஆசிரியர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் மிகவும் வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியது. யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மற்றும் பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் ஆகியன பத்திரிகையாளர் குகநாதன் மீதான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றன - என்றுள்ளது.

(ஒ)



நன்றி: 'டெய்லி மிரர்'.

# பத்திரிகைச் சுதந்திரத்தை அச்சுறுத்தும் மிலேச்சத்தனம் விஸ்வரூபம்

## மாநகர சபை உறுப்பினர் நிஷாந்தன் கண்டனம்

உதயன் செய்தியாசிரியர் ஞா.குகநாதன் மீதான மிலேச்சத்தனமான தாக்குதலை யாழ். மாநகர சபையின் ஆளும்கட்சி உறுப்பினரான சு.நிஷாந்தன் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உதயன் . பத்திரிகையின் செய்தி ஆசிரியர் ஞானசுந்தரம் குகநாதன் இனம்தெரியாத இருநபர்களால் அவரது வீட்டுக்கு அருகில் வைத்து கொடூரமான முறையில் தாக்கப்பட்டார்.

இவ்வாறே கடந்த மே மாதம் 28 ஆம் திகதி செ.கவிதரன் என்பவரும் தாக்கப்பட்டிருந்தார். இவை யாழ்.குடாநாட்டில் பத்திரிகைச் சுதந்திரத்தை அச்சுறுத்தும் மிலேச்சத்தனமான செயல்கள் விஸ்வரூபம் எடுத்திருப்பதையே காட்டுகின்றன.

இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான வேலைகளை யார் செய்திருப்பார்கள் என்பதை எம்மக்கள் நன்கறிவர். ஆனால் வெளிப்படையாக எவருமே கூறமாட்டார்கள். காரணம் அச்சம்தான் என்றபோதிலும் அண்மையில் எம் மக்கள் துணிச்சலுடன் அந்தக் கும்பலுக்குத் தேர்தல் மூலம் மறைமுகமாகப் பாடம் புகட்டி விட்டார்கள்.

ஜனநாயகத்தின் உயிர்நாடியாக விளங்கும் ஊடகச் சுதந்திரத்தையும் மற்றும் ஊடகவியலாளர்களையும் பாதுகாக்க வேண்டிய முக்கிய பொறுப்பு அரசிடமே உள்ளது. பொலிஸார் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எவராக இருந்தாலும் உடனடியாகக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். எமது ஜனாதிபதி இந்தத் தாக்குதலைக் கண்டித்தது மட்டுமன்றி உடனடியாகச் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அறிவித்திருந்தார். அதன்படி பொலிஸார் தாக்குதல் நடத்தியவர்களைத் தேடிப் பிடித்து சட்டத்தின் முன்நிறுத்த வேண்டும் - என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழரை நாடு கடத்துவதில் இலங்கையுடன் மலேசிய அமைச்சருக்கு மறைமுகமான தொடர்பு

## பினாங்கு துணை முதலமைச்சர் குற்றச்சாட்டு

சர்வதேச பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களை நாட்டுக்குத் திருப்பி அனுப்புவதில் மலேசிய உள்துறை அமைச்சர் ஹிஷாம்டீன் ஹூசைனுக்கு இலங்கையுடன் -மறைமுகமான தொடர்பு இருப்பதாக பினாங்கு துணை முதலமைச்சர் பி.ராமசாமி குற்றம்சுமத்தியுள்ளார்.

மேலும், 2009 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கம் முற்றாகத் தோற்கடிக்கப்பட்ட நிலையில், ஏன் மலேசியா முன்னாள் போராளிகளை கைது செய்து தடுத்து வைத்து நாட்டுக்கு திருப்பி அனுப்புகிறது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:

மலேசியா அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் மறைமுகமான தொடர்பு இருக்கலாம். எப்படியிருப்பினும் அவ்வாறான தொடர்புகள் தெளிவுபடுத்தப்படவில்லை.

யுத்தத்தில் இருந்து தப்பி வந்தவர்களை மலேசியா மீண்டும் அந்த நாட்டுக்கு அனுப்புவது என்பது கவலைக்குரிய விடயமாகும்.

ஏனெனில் தமிழர்கள் அனைவருமே விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் எனும் கண்கொண்டுதான் இலங்கை அரசு பார்க்கின்றது.

இதேவேளை, இவ்வாறு திருப்பி அனுப்பப்படுபவர்கள் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைப் படுத்தப்பட்டு கொலை செய்யப்படக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவுக்குச் சென்ற சிங்கள சுற்றுலாப் பயணிகள் மீது தாக்குதல்

## மூவர் காயம்

இலங்கையில் இருந்து இந்தியாவுக்குச் சென்ற சிங்கள சுற்றுலாப் பயணிகள் மீது சென்னையில் நேற்று முன்தினம் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ஊடகங்களில் தகவல் வெளியாகியுள்ளன.

இதுதொடர்பாக மேற்படி வெளியான தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

எல்பிட்டியவில் இருந்து புத்தகயாவுக்குச் சென்ற 84 பேர் கொண்ட சிங்கள சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்குத் திரும்புவதற்காக சென்னைக்கு வந்திருந்தனர்.

நேற்று இவர்கள் கொழும்பு திரும்பவிருந்த நிலையில் சென்னையில் பொருள்களை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போதே தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர்.

இலங்கைக்கு எதிரான பேரணி ஒன்றை கடந்துகொண்டு சென்ற போதே தாம் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்பதைத் தெரிந்து கொண்டு தம் மீது தாக்குதல் நடத்தியதாக இந்தத் தாக்குதலில் காயமடைந்தவர்களில் ஒருவரின் மனைவி தெரிவித்துள்ளார்.

தாக்குதல் நடத்தியவர்கள் தமது பொதிகளைப் பறித்து தீயிட்டு எரித்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்தத் தாக்குதலில் மூவர் காயமடைந்துள்ளதாகக் கூறப்படுகின்ற போதும், இலங்கை வெளிவிவகார அமைச்சின் பொதுமக்கள் உறவு அதிகாரி சரத் திசநாயக்க அவ்வாறான சம்பவம் பற்றிய தகவல் ஏதும் தமக்குத் தெரியாது என்று கூறியுள்ளார்.

இதனிடையே தாக்குதலுக்குள்ளானதை அடுத்து இலங்கையைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பாக வேறு விடுதி ஒன்றுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இவர்களை பாதுகாப்பாக இன்று கொழும்புக்கு அனுப்பி வைப்பதாக சென்னையில் உள்ள இலங்கைத் துணைத்தூதரகம் உறுதிமொழி அளித்ததாகவும் வெளியான தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கும் யாழ். வணிகர் கழகத்தின் உதவிகள்

யாழ்ப்பாணம், ஓக 5

வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட கிளிநொச்சிப் பகுதி மக்களுக்கும் வாழ்வாதார உதவிகளை யாழ் வணிகர் கழகம் வழங்கவுள்ளதாக அதன் தலைவர் ஆர்.ஜெயசேகரம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட 60 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

அந்த மாவட்டத்தின் நான்கு உதவி அரச அதிபர் பிரிவுகளில் இருந்து தலா 15 குடும்பங்கள் இதற்கென தற்போது பயனாளிகளாகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளன. இந்தக் குடும்பங்களுக்கு தலா 30 ஆயிரம் ரூபா பெறுமதியான கோழி வளர்ப்பதற்கான உதவிகள் வழங்கப்படவுள்ளன. கோழிக்குஞ்சுகள், கோழிக்கூடு, கோழித் தீவனம் அதற்கான உபகரணம் என்பன ஒவ்வொரு குடும்பத்துக்கும் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கும் இவ்வாறான வாழ்வாதார உதவிகளைத் தற்போது வணிகர் கழகம் வழங்கிவருகிறது.

இதுவரை 12 பிரிவுகளிலுள்ள 120 குடும்பங்களுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட கோழிகள் நோய் காரணமாக இறக்க நேரிட்டால் அதற்குப் பதிலீடாக கோழிக்குஞ்சுகள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தெல்லிப்பழைப் பிரதேச செயலகங்கள், வேலணை, நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஆகியவற்றிலுள்ள குடும்பங்களுக்கு இந்த உதவிகள் சில தினங்களில் வழங்கப்பட்டு விடும் - என்றார்.

(த-14)

# சன் சீ கப்பலில் சென்ற மற்றொரு தமிழரை நாடு கடத்துகிறது கனடா

சன் சீ கப்பல் மூலம் கடந்த ஆண்டு கனடாவைச் சென்றடைந்த மற்றொரு தமிழரையும் நாடுகடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

இலங்கையில் போர்க் குற்றம் புரிந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளதாலேயே அவரை கனடாவை விட்டு வெளியேற்றுமாறு பணிக்கப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினராக இருந்த இவர், தற்போது மல்பே றிட்ஜ் ஆண்கள் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். குறிப்பிட்ட விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்த போது போர்க் குற்றங்களைப் புரியுமாறு ஏனைய உறுப்பினர்களுக்கு ஆலோசனை கூறினார் எனவும், இதனால் அவரை கனடாவை விட்டு வெளியேற்றுமாறும் குடி வரவு மற்றும் அகதிகள் பாதுகாப்புச் சபை வெளியிட்டுள்ள திருத்தப்பட்ட முடிவில் கூறியுள்ளது.

போர்க்குற்றங்களில் பங்கேற்றதை விட ஏனையவர்களை போர்க்குற்றங் களில் ஈடுபடத் தூண்டியுள்ளார் எனவும் அவருக்கு நாடுகடத்தல் உத்தரவை வழங் கிய தீர்ப்பாளர் ஜியோவ் ரெம்பெல் தெரிவித்துள்ளார்.சன் சீ கப்பல் மூலம் கனடா சென்ற 492 அகதிகளில் சுமார் 50 பேர் புலிகள் என்றும் குற்றம் சாட்டப்பட்டது.

அவர்களில் 6 பேர் நாடு கடத்தப்பட்டுள்ளதுடன் மேலும் 8 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

## பொன். ஸ்ரீ வாமதேவன்
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



தென்மராட்சிக்கோர் திலகமாய்
வந்துதித்த இசையரசே!
இன்னிசையால் இதயத்தை
உருக வைக்கும் இசை மணியே!
என்பையும் உருக்கிடும்
இனிமைக் குரல் வித்தகனே!
முப்பத்திரண்டாண்டு
முத்தான ஆசிரியப்
பணியாலும்
இன்னிசையாய்
பல்கலையில்
இன்றும் தொடரும் பணியாலும்
இசையுலகில் என்றென்றும்
நின்றொளிரும்
இசைவேந்தே நீடூழி வாழி, வாழி.

தென்மராட்சி,
சாவகச்சேரி.
தென்மராட்சிக் கல்விச் சமூகத்தினர்
(1982)

## காணவில்லை
இளஞ்சிவப்பு, கொம்பு முன்பாக வளைந்தது கழுத்திலும் கொம்பிலும் கயிறுகட்டப்பட்ட பால்மாட்டை கடந்த வியாழக்கிழமையில் இருந்து காணவில்லை. கண்டவர்கள் தகவல் தரவும். சன்மானம் வழங்கப்படும்.
B.பிரேமன், பாரதி வீதி, நாயன்மார்கட்டு.
0770782270, 0779073808

## தேவை
Studio ஒன்றுக்கு Video, Photo எடுக்க Editing செய்யத் தெரிந்தவர்கள் பகுதிநேரமாகவோ அல்லது முழு நேரமாகவோ தேவை
தொடர்புக்கு :- 0772832504

## வேலை ஆள் தேவை
திருநெல்வேலியில் இயங்கும் எமது நிறுவனத்துக்கு பலசரக்கு விற்பனையில் அனுபவமுள்ள, அனுபவமற்ற வேலை ஆள்கள் தேவை.
அற்புதாஸ் களஞ்சியம்
திருநெல்வேலி
T.P-0775993038, 0770751139

## நற்செய்திக் கூட்டம்
சத்திய வசனத்தின் அனுசரணையுடன்
தென் இந்தியாவின் நற்செய்தியாளர்
கவி. சுசி பிரபாகரன் பங்குபற்றும் நற்செய்திக் கூட்டம்
நாளை 6 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு
கட்டைவேலி தேவாலய முன்றிலில் நடைபெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
மெதடிஸ்த திருச்சபை
பருத்தித்துறை, கட்டைவேலி சேகரம்.
(சி/2408)

## மனமார்ந்த நன்றிகள்
உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல் - 2011
வலிவடக்குப் பிரதேச சபை



மேற்படி தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு (தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு) அமோக வெற்றியை ஈட்டிக் கொடுத்ததுடன் விருப்பு வாக்குகள் மூலம் இலக்கம் 26 இல் போட்டியிட்ட என்னையும் ஓர் உறுப்பினராகத் தெரிவு செய்த அன்பு உள்ளங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.
என்றும் நன்றியுடன் -
செல்லத்துரை செல்வராசா,
இலங்கைத் தமிழரசுக்கட்சி.
(6535)

## கணினி மற்றும் வர்த்தகத் துறைகளில் பட்டதாரியாக அரிய சந்தர்ப்பம்!
1. B.Sc. in Computer Science
2. B.Com. with Computer Application
காலம்– 01-03 வருடங்கள்
தகமை– HND/HNDA / Adv. Diploma அல்லது A/L அல்லது O/L
3. Post Graduate Diploma in Computing >> M.Sc.
தகமை– Any Degree
காலம்– 01 வருடம்
மிகக் குறைந்த கட்டணத்தில் BRITISH அரச அங்கீகாரமுடைய பல்கலைக்கழக சான்றிதழைப் பெறுங்கள்!
வங்கிக் கடன் வசதிகள், வேலைவாய்ப்பிற்கான ஆலோசனைகள் நேரில்!
NEW BATCH ஆரம்பம்!
NORTH LANKA IIT
#113, Laxan Plaza, Navalar Road, Jaffna.
Phone: 0215677774

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# காணாமற்போன தமிழ்ச் சிறுவர்களை கண்டுபிடிக்க கரிசனை காட்டப்படுமா?

வன்னிப் பகுதியில் நடைபெற்ற இறுதிப் போரின் போது காணாமற்போன தமிழ்ச் சிறுவர்களில் அறுநூற்று முப்பது பேரை அவர்களது பெற்றோர்கள் இன்னமும் - இரண்டேகால் வருடங்கள் கடந்தும் - இருபத்தேழு மாதங்கள் சென்றும் - தேடிக்கொண்டே இருக்கின்றனர்.

ஓடினான் ஓடினான் வாழ்க்கையின் ஓரத்துக்கே ஓடினான் என்று முந்திய காலத்துத் தமிழ்ச் சினிமா படத்தில் கேட்ட வசனத்தை ஒத்து, காணாமற்போய் தம்மிடம் இன்னும் வந்து சேராத, கிடைக்காத பிள்ளைகள் குறித்து அவர்களின் பெற்றோர்கள் அல்லும் பகலும் அனவரதமும் துடிதுடித்து, மனம் வெதும்பி, வாழ்க்கை வெறுத்து, விரக்தி நிலைக்கு வந்திருக்கிறார்கள். மிகக் குறிப்பாகக் கன்றைப் பிரிந்த பசு போன்று அந்தச் சிறுவர்களின் தாய்மார்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்கள் எழுத்தில் வடிக்க அடங்காதவை.

இந்தப் பெரும் மனிதாபிமான, மனிதநேய விவகாரம் குறித்து இவ்வாரத்தில் 'மனிதாபிமான நடவடிக்கை: உண்மைப் பகுப்பாய்வு அறிக்கை' வெளியிட்ட அரசாங்கத்துக்கு அனுதாபமோ அக்கறையோ இருப்பதற்கான அறிகுறி எதுவும் வெளிப்படவில்லை!

பொதுமக்களின் மரணங்கள் இன்றி, அதாவது அவர்கள் கொல்லப் படாமல், ஒருபோரை நடத்த முடியாது என்ற தத்துவத்தை வெளிப்படுத்திய, உண்மையை இரண்டு வருடங்களின் பின்னர் கண்டுபிடித்த அரச தரப்பு, காணாமற்போன சிறுவர்கள் குறித்து அக்கறைகொண்டு அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க நடவடிக்கை எதனையும் தனது சொந்தத்தில் மேற்கொண் டிருப்பது குறித்த தகவல் எதுவும் உத்தியோகபூர்வமாக வெளிவரவில்லை.

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியத்தின் (யுனிசெவ் நிறுவனத்தின்) ஆதரவுடன் வவுனியா அரச அதிபர் காணாமற்போன தமிழ்ச் சிறுவர்களை கண்டு பிடிக்கும் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகிறார் என்பது தெரியவந்துள்ளது.

'யுனிசெவ்'வின் ஏற்பாட்டில் நடைபெறும் மனிதநேயத் தொண்டின் மூலம் மிக அநேகமாக இறுதிப்போரின் போது காணாமற்போன சிறுவர்களில் அறுநூறு பேர் அவர்களின் பெற்றோர்களுடன் இணைக்கப்பட்டுள்ளனர். இன்னமும் கண்டுபிடிக்கப்படாத சிறுவர்களின் பெற்றோர், நாளும்பொழுதும் பிரிவுத் துயரினால் கணத்துக்குக் கணம், நெஞ்சு கனத்து, தமது வாழ்க்கையை உருக்கிக் கொண்டி ருக்கிறார்கள்.

இறுதிப்போரில் சிக்குண்ட சுமார் மூன்று லட்சம் தமிழ்மக்கள், வன்னியிலிருந்து தமது உயிரைப் பிடித்துக்கொண்டு வெறுங்கையுடன் வவுனியாவுக்குச் சென்று, அங்கு அமைக்கப்பட்ட நலன்புரி முகாம்களில், முட்கம்பி வேலிகளுக்குள் தங்கியிருந்து சொல்லொண்ணாக் கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்தமை பழைய பரிதாபமாகி விட்டது.

அவர்களின் மிகப் பலரை சுமார் ஒரு வருடத்துக்குப் பின்னரே மீளக்குடியமர்த்த அரசு நடவடிக்கை எடுத்தது. இரண்டேகால் வருடங்கள் கழிந்தும் இன்னும் பலர் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்ப முடியாத நிலை உண்டு என்பதனை மறந்துவிட முடியாது. வன்னியில் பல பிரதேசங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டவர்கள் இன்னும் தகரக்கொட்டகைகளில் விஷஜந்துக்களுடன் 'சகவாழ்வு' நடத்த நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது வேறு ஓர் அத்தியாயம்.

போரின் போது காணாமற்போன சிறுவர்களில் 64 சத வீதமானோர் விடுதலைப் புலிகளால் அவர்களது அணிகளில் சேர்க்கப்பட்டவர்கள் என்றும் அவர்களில் மிகப்பலர் போரின் இறுதிக் கட்டத்தில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்றதாகவும் யுனிசெவ் அமைப்பின் புள்ளிவிவரங்கள் தகவல் தருகின்றன.

காணாமற்போன குறிப்பிட்ட ஒரு சிறுவன் குறித்து நம்பத் தகுந்த தகவல் கிடைத்ததும், தமது நிறுவனத்தின் வசமுள்ள, காணாமற்போனதாகப் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்ட சிறுவர்களின் விவரப் பட்டியலுடன் ஒப்பிட்டுப் பார்க்கப்படுகிறது. அது ஒத்துவரும் போது, நிறுவன அதிகாரிகள், பெற்றோரையும் சம்பந்தப்பட்ட சிறுவனையும் தனித்தனியே விசாரித்து அவர் களின் உறவு முறை சரிதானா என்று நிர்ணயித்துக் கொள்கிறார்கள், நிச்சயித்துக் கொள்கிறார்கள். இறுதி ஏற்பாடாக நீதிமன்றத்தின் ஊடாக அவர்கள் குடும்பத்துடன் இணைக்கப்படுகிறார்கள் - என்று யுனிசெவ்வைச் சேர்ந்த குழந்தைகள் பாதுகாப்பு விசேட அதிகாரி ஒருவர் தமது நடைமுறையை விஸ் தாரமாக விளக்கி உள்ளார்.

எது எப்படியோ,இது வரை கண்டுபிடிக்கப்படாத சிறுவர்களை கண்டுபிடிக்கும் யுனிசெவ்வின் மனிதநேயச் சேவையும், அந்த அமைப் பின் அலு வலர்களின் அர்ப்பணிப்பும் தொடர வேண்டும் எனப் பாதிக் கப்பட்ட தமிழ்ப் பெற்றோர்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

காணாமற்போய் இதுவரை கண்டுபிடிக்கப்படாத அறுநூறு தமிழ்ச் சிறு வர்களும் எங்கள் மண்ணின் செல்வங்கள். அவர்களில் மிகப் பலர் வருங்காலச் சந்ததியினரின் தலைவர்களாக வளர்ந்து வரவும் கூடும்.

ஆகையால், அரசாங்கம் தமிழ் மக்களின் வருங்காலச் சந்ததியினரான சிறுவர்களைத் தேடிக் கண்டு பிடிப்பதில் தனக்குரிய கடப்பாட்டையும் கடமையையும் அக்கறையுடன் ஆற்றவேண்டும். அவர்களின் போக்கிடம் கண்டறியப்பட்டுப் பெற்றோரிடம் கையளிக்கப்பட வேண்டும். அதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் அரசு கரிசனையுடன் மேற் கொள்வது அதன் தட்டிக்கழிக்க முடியாத கடமை. நாம் இதனை இங்கு வலியுறுத்திச் சொல்வதற்கு தக்க காரணங்கள் உள்ளன. அவற்றில் பின்வரும் இரண்டு துளிகளைச் சுட்டிக் காட்டுவது பொருத்தமாகும்;

★ தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னாள் போரா ளிகளில் 900 பேர் விடுதலை செய்யப்படுவர் என யாழ் .வீரசிங்கம் மண் டபத்தில் வைத்து அரசாங்கத்தின் சார்பில் உறுதிமொழி அளித்தார் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் சந்திரசிறி கஜதீர . ஆனால் குறிப்பிட்ட தினத்தில் 337 பேர் மட்டுமே விடுதலை செய்யப்பட்டனர். இதனால் ஏமாற்றம் அடைந்த பெற்றோரும் உறவினர்களும் கண்ணீர் சிந்தியவாறு வவுனியாவில் வீதி மறியல் போராட்டம் நடத்தினர்.

★ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் அரசுக்கும் இடையிலான பேச்சுக்களின் போது தடுப்பு முகாம்களிலும் சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப் பட்டிருப்பவர்களின் பெயர் விவரங்கள் பகிரங்கமாக பார்வைக்கு வைக்கப் படும் என உறுதியளிக்கப்பட்டது. இதனை நம்பி வவுனியாவுக்குச் சென்ற தடுத்து வைக்கப்பட்டோரின் உறவுகள் விரட்டி யடிக்கப்பட்டனர். இதுவும் தமிழ் மக்களில் பாதிக்கப்பட்ட ஒரு சாராருக்கு அரசாங்கத்தினால் உண்டாக் கப்பட்ட மன உளைச்சலும் ஏமாற்றப்பட்ட நிலையுமே ஆகும்.

இதே பாணியில் -

அறுநூறு சிறுவர்களையும் கண்டுபிடிப்பதில் அரச தரப்பில் உரிய அக்கறையும், தக்க செயற்பாடும் இல்லாவிடில், தமிழ் மக்களின் பல சந்ததிகளை அற்றுப்போகச் செய்யும் சூழ்ச்சி என்றே கொள்ள நேரிடும். ஏனைய உலக நாடுகளில் நடைபெற்ற போர்களில் காணாமற்போனவர்கள், உரிய நியமங்களுடன் கண்டுபிடிக்கப்பட்ட முன்னுதாரணங்கள் பலவுண்டு. இலங்கை அரசு இது விவகாரத்தில் உரிய நடவடிக்கை எடுக்காவிடில் தமிழர்கள் மீதான காழ்ப் புணர்வே காரணம் என்று சரித்திரம் பழி தூற்றும். இறுதிப்போரில் பல் லாயிரக் கணக்கான தமிழர்களைக் கொன்றொழித்தது மட்டுமன்றி அவர்களின் இனிவரவுள்ள பல சந்ததிகளை கருக்கிவிடும் புலப்படாத மறைமுகத் திட்டமோ இது என்ற ஐயமும் ஏற்பட அதிக வாய்ப்பு உண்டு...!

5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சை

# மாணவர்களின் அனுமதிப் பத்திரங்கள் தபாலில் பாடசாலை அதிபர்களுக்கு

கொழும்பு, ஓக 5

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் அனைத்தும் தபாலில் அனுப்பப்பட்டு விட்டன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுரஎதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த வாரத்தில் அனுமதிப்பத்திரங்கள் பாடசாலை அதிபர்களுக்குக் கிடைக்கும் எனவும் அவை கிடைத்ததும் உடனடியாக பெற்றோர்களை வரவழைத்து கையளிக்குமாறும் அவர் அதிபர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

பரீட்சை மண்டபம், சுட்டிலக்கம் போன்றவைப்பற்றி பெற்றோர்களுக்குத் தெளிவாக எடுத்துக் கூறுவது அத்தியாவசியம் என அவர் அதிபர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சைக்கான உரிய வயதை அடைந்த மாணவர்களின் பெயர்கள் ஏதாவது காரணத்தால் பட்டியலில் இடம்பெறாமல் இருந்தால் அதுபற்றி உடனடியாக பரீட்சைகள் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளுமாறும் அவர் அதிபர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை மாணவர்களின் அனுமதிப் பத்திரங்கள் நேற்று மாலைவரை யாழ். பாடசாலைகளுக்கு கிடைத்திருக்கவில்லை.

பெரும்பாலும் இன்று வெள்ளிக்கிழமை வந்து சேரலாம் என்று யாழ்.நகரிலுள்ள பாடசாலைகளின் அதிபர்கள் தெரிவித்தனர். (ஒ-ச-5-313)

# ஐ.தே.கட்சியின் கட்சிப் பிணக்கை தீர்த்துக்கொள்ள ரணில் பிரயத்தனம்

## நிலைப்பாட்டை விட்டுக்கொடுக்க கரு மறுப்பு

கொழும்பு, ஓக.5

ஐ.தே.கட்சியில் ஏற்பட்டுள்ள தலைமைப் பதவிக்கான பிணக்கினைச் சுமுகமாகத் தீர்த்துக்கொள்வதற்கான முயற்சியில் அந்தக் கட்சியின் தலைவர் ரணில்விக்கிரமசிங்க இறங்கியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க வெளிநாடுகளிலிருந்த வேளையில் தலைமைப் பதவியைக் கைப்பற்றுவதற்கு அவருக்கு எதிரான தரப்பினர் முயற்சியில் ஈடுபட்டிருந்தமையை அறிந்ததும் அவர் பயணத்தை இடைநடுவில் குறைத்துக்கொண்டு நாடு திரும்பினார்.

கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைத் திரட்டிக்கொள்வதற்காக அவர்களை குழுக்கள் குழுக்களாகச் சந்தித்துப் பேசுவதற்கு அவர் முடிவு செய்திருப்பதாகத் தெரிகின்றது.

கடந்த செவ்வாயன்று நாடு திரும்பிய அவரைச் சந்தித்துப் பேசியுள்ள கட்சி எம்.பிக்களில் பலரும் சஜித் பிரேமதாசவுடனான முரண்பாடுகளை தீர்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டதாகத் தெரிகின்றது. சஜித் பிரேமதாசாவையும் ஒரு கூட்டு பிரதித் தலைவராக நியமித்ததன் பின்னர் அவரை ஓரங்கட்டியதால் தான் தலைமைப் பதவிக்கு மீண்டும் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. இது ஒரு தவறான செயற்பாடு என்று அவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

**ஜெயசூரியா மறுப்பு**

இதற்கிடையில் இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த கருஜய சூரியா நாடு திரும்பிய கையோடு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை அவரது இல்லத்தில் போய்ப் பார்த்தார். பின்னர் அவர் வெளியேறிச் சென்றபோது சந்தித்த பத்திரி கையாளர்களிடம் தமது சந்திப்புப் பற்றிய தகவல் எதனையும் தெரிவிக்க மறுத்துவிட்டார். கட்சியில் ஏற்பட்டுள்ள பிணக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்க்கப்படும் முடிவுகள் மிக விரைவில் தெரிய வரும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேசமயம் கட்சி சீர்திருத்தவாதிகளுக்கு முன்னர் அளித்துள்ள வாக்குறுதியிலிருந்து தாம் மாறப்போவதில்லையென்று உறுதியளித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

மத்தும பண்டார தலைமையிலான கட்சியின் சீர்திருத்தவாதிகள் குழுவினர் நேற்று முன்தினம் கருஜயசூரியாவை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார்கள். கட்சியின் இன்னொரு கூட்டுப் பிரதித்தலைவரான சஜித் பிரேமதாச இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளவில்லை. அம்பாந்தோட்டையில் சில நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக அவர் அங்கு சென்றிருந்தார்.

நடந்து முடிந்த தேர்தலிலும் அதற்கு முந்திய தேர்தல்களிலும் கட்சிக்கு ஏற்பட்ட பின்னடைவுகளுக்கு காரணமாய் இருந்துள்ளவர்கள் மீது யார் நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்று அம்பாந்தோட்டையில் ஒரு கூட்டத்தில் பேசும் போது பிரேமதாச கேள்வி எழுப்பியுள்ளார். கட்சியின் சீரமைப்புக்காகப் போராடியவர்களான நாடாளுமன்ற உறுப்பினர்களை ஓரங்கட்டி செயல்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பவர்கள் யார் என்றும் அவர் கேள்வி எழுப்பியதாகத் தெரியவருகின்றது.


இதே சமயம் கட்சி சீரமைப்புக் குழுவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மத்தும பண்டார தெரிவிக்கையில் கட்சியின் தற்போதைய தலைமைத்துவத்தை பதவி விலகச் செய்வதற்கான அழுத்தங்கள் அதிகரிக்கப்படும். அவர்களுக்கு எமது நிலைப்பாட்டினை அறிவித்துவிட்டோம். அவர்களின் பிரதிபலிப்பைப் பொறுத்து எமது அடுத்தகட்ட நடவடிக் கையை மேற்கொள்வோம்என்று கூறியுள்ளார்.

இதற்கிடையில் கட்சியின் தலைமைப் பதவியைப் பெறுப்பேற்கத் தயாராயிருப்ப தாகத் தாம் கூறிய கருத்தை திரும்பப் பெற்றுக்கொள்ள கருஜயாசூரியா மறுத்துவிட்டதாகவும் தகவல் கிடைத்துள்ளது. முன்னைய சந்திப்பின் போது அவ்வாறு செய்யுமாறு ரணில் விக்கிரமசிங்க ஜயசூரியாவை கேட்டுக் கொண்டதாகத் தெரிகின்றது. (ப)

## அறம்

மனிதராகத் தோன்றிய அனைவருமே மனித இயல்புகளோடு வாழ்ந்திடுவதில்லை. ஆனால் ஒவ்வொரு மனிதனும் மனிதனுக்குரிய உயர்ந்த தன்மைகளோடு வாழ்ந்திட வேண்டும் என்பதுதான் படைத்த இறைவனின் பெருநோக்கமாகும். இதனை உணர்வதற்காகவே தெளிந்த அறிவுடைய சான்றோர் பெருமக்கள் அவ்வவ்போது அறநெறிகளைப் போதித்து மக்களை மேன்மைப்படுத்தி வந்திருக்கிறார்கள்.

உண்மையில் அறம் என்பது மாசற்ற மனத்தில் உதிப்பதாகும். மனிதகுலம் அனைத்துக்கும் இந்தக் கருத்து பொதுவான ஒன்றாகும். எண்ணற்ற மதங்களும், மார்க்கங்களும் முடிவில் இதைத் தான் சிறப்பாக உணர்த்தி நிற்கின் றன. இதனையே உலகப்பொது மறை தந்த தெய்வப் புலவர் திருவள் ளுவர்,




''மனத்துக்கண் மாசிலன் ஆதல்
அனைத்து அறன்
ஆகுல நீர பிற''

எனக் கூறியுள்ளார்.

கல்வி கற்பதும், சமயநெறிகளில் தோய்வதும், ஆசாரச் சடங்குகளைக் கடைப்பிடிப்பதும் போன்றயாவும் மன அழுக்கினைப் போக்குவதற்கான நல்ல பயிற்சியாகும். இந்த உயரிய நோக்கத்தை நெஞ்சினில் நிறுத்தி நடைமுறைப்படுத்தி வந்தால் நிச்சயமாக அறத்தின் பயனை அடையலாம்.

நன்றி; ஞானச்சுடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பேருந்து நிலையத்திலிருந்து இரவு 8 மணிக்கு இறுதிச் சேவை

யாழ்ப்பாணம், ஓக.5

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சாலைகளால் யாழ். குடாநாட்டில் சேவையில் ஈடுபடும் உள்ளூர் பேருந்துச் சேவைகளின் இறுதி நேரப் பேருந்துச் சேவை யாழ்.பஸ் நிலையத்தில் இருந்து இன்று வெள்ளிக்கிழமை முதல் இரவு 8 மணிக்கு இடம்பெறும்.

யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து புறப்படும் தூர சேவைப் பேருந்து தவிர்ந்த ஏனைய உள்ளூர்ப் பேருந்து சேவைகளின் இறுதி நேரப் பேருந்து சேவை சகல பாதைகளிலும் இரவு 8 மணிக்கு சேவையில் ஈடுபடும்.

எனினும் விசேட தினங்கள், வேண்டுதல்கள் எதுவும் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பங்களில் மட்டும் நேரமாற்றம் செய்யப்படும் என்று இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதான பிராந்திய முகாமையாளர் கே.கேதீசன் அறிவித்துள்ளார். (ம-313)

# கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் சுயதொழில் நன்கொடை வழங்கல்

நாவற்குழி, ஓக.5

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 4 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் சுயதொழில் நன்கொடையை அங்கவீனமுற்றோருக்கான தேசிய செயலகம் அனுப்பி வைத்துள்ளது.

இந்தக் கொடுப்பனவைப் பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட இராசையா மரியதவராசா-புத்தூர், நாகலிங்கம் வனஜா- நீர்வேலி மேற்கு, பாலசிங்கம் தில்லைநாதன்- கோப்பாய் வடக்கு, கந்தன் இரவிச்சந்திரன்- கோப்பாய் ஆகியோரை இன்று வெள்ளிக்கிழமை தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் வருமாறு கூறப்பட்டுள்ளது. (ம-121)

# நாகர்கோயில் மக்களுக்குப் படையினர் உதவி



யாழ்ப்பாணம், ஓக.5

மக்கள் அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட நாகர்கோயிலில் படையினரால் வாழ்வாதார உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உதவிப் பொருள்கள் 512 பிரிக்கேட் படையினரால் கடந்த மாதம் வழங்கப்பட்டுள்ளன.

படையினரால் மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் உதவிப் பொருள்களின் ஓர் அங்கமாகவே இவை வழங்கப்பட்டுள்ளன. உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட நாகர்கோயில் பிரதேசத்தில் உள்ள 100 குடும்பங்களுக்கே இவை வழங்கப்பட்டுள்ளன.

உணவுப் பண்டங்கள் அடங்கலாக இந்தப் பொதிகள் ஒவ்வொன்றினதும் பெறுமதி ஆயிரம் ரூபாவாகும். இதற்கான நிதி உதவியைத் தென்பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் எம்.என்.எம். மொஹமட் வழங்கியுள்ளார். (ம-15)

# பாஷையூர் கடற்றொழிலாளர்களின் உபகரணங்கள் திருடப்படுவதாகப் புகார்

யாழ்ப்பாணம், ஓக.5

பாஷையூர் கடற்றொழிலாளர்களின் சிறகு வலைப்பாடுகளில் கடல் உணவுகள், உபகரணங்கள் என்பன திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகப் பாஷையூர் புனித அந்தோனியார் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் விசனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக இந்தச் சங்கம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்தப் பிரதேசக் கடற்றொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்லாத வெள்ளிக்கிழமை நாள்களில் 90 வீதமான களவுச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

யாழ்.குடாக் கடலில் சகல வலைப்பாடுகளிலும் கடலுணவுகள் களவாடப்படுவதுடன் மறுநாள் தொழில் செய்ய முடியாதவாறு வலைகள், தடிகள் என்பன கடுமையாகச் சேதமாக்கப்படுகின்றன. அத்துடன் அவற்றைத் திருடிச் செல்லும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன.

இதனால் கடற்றொழிலின்களின் வருமானத்தை அன்றாட வாழ்க்கைச் செலவுக்குப் பயன்படுத்தும் குடும்பங்கள் தொழில் செய்ய முடியாமல் பெரிதளவு பாதிப்படைந்துள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து பாஷையூர் கடற்றொழிலாளர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத் தருமாறு இந்தச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (ம-313)

# இயற்கைப் பசளை விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக.5

நல்லூர் பிரதேச சபையால் தயாரிக்கப்பட்ட இயற்கைப் பசளை யாழ். மாவட்டத்தில் முதன்முறையாக விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

நல்லூர் பிரதேச சபையின் காரைக்கால் (இணுவில்) திண்மக் கழிவு இயற்கைப் பசளைத் திட்டத்தின் மூலம் உள்ளூராட்சி மட்டத்தில் தயாரிக்கப்பட்டு இது விநியோகம் செய்யப்படுகின்றது.

ஐந்து கிலோகிராம் நிறையுடைய பைக்கற்றுகளில் அடைக்கப்பட்டு இந்த உரம் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

நல்லூர் பிரதேச செயலகத்தில் இதனைப் பெற்றுக்கொள்ளலாம். (ம-313)

# யாழ். சிறுவர் புற்றுநோய்ப் பிரிவுக்கு ரூ.5 லட்சம் பெறுமதியான காசோலை

## மக்கள் வங்கி வழங்கியது

யாழ்ப்பாணம், ஓக.5

யாழ்.போதனா வைத்திய சாலையின் சிறுவர் புற்றுநோய் பிரிவுக்கென 5 லட்சத்து 35 ஆயிரம் ரூபா பெறுமதியான சேமிப்பு நிதியை மக்கள் வங்கி வழங்கியுள்ளது.

மக்கள் வங்கியின் 50 ஆவது நிறைவு தினத்தை முன்னிட்டு சிறுவர் புற்றுநோய் சிகிச்சை நிலையம் அமைப்பதற்கான இந்த நிதியை மக்கள்வங்கி வழங்கியுள்ளது.

யாழ்.போதனா வைத்திய சாலைக்கு வருடந்தோறும் பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுக்கும் மக்கள்வங்கி சேமிப்பு நிதியை வழங்கியது. அது மட்டுமல்லாது யாழ்.புற்று நோய் சிகிச்சை நிலையத்தின் கட்டடப் புனரமைக்கும் ஒரு லட்சத்து பத்தாயிரம் ரூபா நிதியை வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் அங்கவீனமடைந்து சிகிச்சை பெறமுடியாமல் இருந்த வறுமைக் கோட்டுக்குட்பட்ட பயனாளிகள் 10 பேருக்கு யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்தின் உதவியுடன் யாழ்.போதனா வைத்திய சாலையின் அனுமதியுடனும் ஊன்றுகோல், முச்சக்கர வண்டி என்பவற்றையும் வழங்கியுள்ளது. (ம-313)

# பாதிக்கப்பட்ட மாணவருக்கு பல்வேறு உதவிகள் வழங்கல்

யாழ்ப்பாணம், ஓக.5

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு நிதியுதவி, உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் இராம கிருஷ்ண வித்தியாலயத்தின் பிரார்தனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இடம்பெயர்ந்த, வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், போசாக்கு உணவுப் பொருள்கள் என்பன வழங்குவதுடன் யாழ்.பல்கலைக்கழகத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு நிதியுதவி என்பன வழங்கப்படவுள்ளன.

அத்துடன் கொழும்பு இராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த ஸ்ரீமத் சுவாமி இராஜேஸ்வரானந்தர் ஆன்மிக உரையையும் வழங்கவுள்ளார். (ம-313)

# வேம்படி மகளிரின் 'வேம்பு' மலர் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக.05

யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் தமிழ் மன்றத்தின் ''வேம்பு'' மலர் வெளியீட்டு விழா செவ்வாய்க்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ் மன்றத்தின் தலைவி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியர் திருமதி என்.சிவலிங்கராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

விருந்தினர்களின் மங்கல விளக் கேற்றலைத் தொடர்ந்து பாடசாலைக் கீதம் இசைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தமிழ் மன்றத்தின் காப்பாளரும் பாடசாலை அதிபருமான திருமதி பொன்னம்பலம் சிறப்புரை வழங்கினார். அதனைத் தொடர்ந்து பிரதமவிருந்தினர் உரையும் மலர் வெளியீடும் இடம்பெற்றது.

மலரின் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைப் பேராரிசியர் இ.விசாகரூபன் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் பாடசாலையின் மாணவர்கள், ஆசிரியர்கள் உட்படசிறப்புப் பிரதிகளைப் பெறுவதற்காக வைத்தியர்கள், வேறு பாடசாலை ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

இந்த மலரின் முதல் பிரதியை பிரபல தொழிலதிபர் பி.நாகரட்ணம் பெற்றுக்கொண்டார். (ம-313)

# குரக்கன் செய்கை இம்முறையும் வீழ்ச்சி

நாவற்குழி, ஓக.5

யாழ்.குடாநாட்டில் இந்த முறையும் குரக்கன் பயிர்ச்செய்கையில் விவசாயிகள் நாட்டம் செலுத்தவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

2006-2007 ஆம் ஆண்டுகளில் பெரும் அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து குரக்கன், தினை, சாமை செய்கையில் விவசாயிகள் மிகப் பெருமளவில் ஈடுபட்டனர்.

தற்போது அரிசி தராளமாகக் கிடைப்பதால் இவற்றின் செய்கைகளில் விவசாயிகள் நாட்டம் குறைந்துள்ளது. (த-121)

# நீண்டகாலமாக இயங்காதுள்ள ச.ச.நிலையத்தை இயக்க ஏற்பாடு

வலி-வடக்கு, ஓக.5

கடந்த பல வருடங்களாக இயங்காது இருக்கும் சுன்னாகம் அம்பேத்கார் சனசமூக நிலையத்தை இயங்க வைப்பதில் மானிப்பாய் தொகுதி தமிழரசுக் கட்சி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்தம், மக்கள் இடப்பெயர்வு போன்ற பல்வேறு காரணங்களால் அம்பேத்கார் சனசமூக நிலையம் இயங்கமுடியாத நிலமை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் செயலாளருமான மாவை சேனாதிராசா தனது பன்முகப்படுத்திய வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒரு தொகுதி நிதியை வழங்கியுள்ளார்.

சனசமூக நிலையத்தின் செயற்பாடுகள் முடங்கிக் கிடக்கும் நிலையில் மீண்டும் இயங்கச் செய்யும் முகமாக புதிய நிர்வாகத் தெரிவு உட்பட ஏனைய செயற்பாடுகளையும் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-86)

# பொதுமக்களுக்கு நெருக்கடி தரும்வகையில் செயற்பட்ட நபருக்கு அபராதம்

பொது இடத்தில் மது அருந்திய நிலையில் பொது மக்களுக்கு இடைஞ்சல்தரும் வகையில் செயற்பட்ட சாவகச்சேரி வாசிக்கு 6 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த நபருக்கு 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத்தவறின் இரண்டு மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (ம-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலயச் சூழலில் 400 பொலிஸார் கடமையில்

யாழ்ப்பாணம், ஒக. 5

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில் ஆலய சுற்றாடலில் சுமார் 400 பொலிஸார் சுழற்சி முறையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

அங்கு செல்லும் பக்தர்களின் பாதுகாப்பு நலன் கருதி அசம்பாவிதங்கள் ஏற்படாதிருப்பதற்காக திருவிழா நடைபெறும் 25 நாள்களும் 24 மணி நேரமும் அங்கு பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருப்பர்.

வழமைபோன்று யாழ்.மாநகர சபைக்கு அண்மையில் தற்காலிக பொலிஸ் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு இயங்கும். பக்தர்கள் தமது பிரச்சினைகள் தொடர்பான முறைப்பாடுகளை அங்கு பதிவு செய்யமுடியும் .

கடந்த சில வருடங்களைப் போன்று இம்முறையும் குடாநாட்டிலிருந்து மட்டுமன்றி தென்பகுதியிலிருந்தும் அதிகளவானோர் திருவிழாவில் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை பொது மக்களின் உடைமைகள் பாதுகாப்பு விடயத்தில் பொலிஸார் அக்கறை காட்டத் தொடங்கியுள்ளனர்.

நேற்று முன்தினம் முதல் பொலிஸார் ஒலிபெருக்கி பூட்டிய வாகனங்கள் மூலம் இரவு நேரங்களில் கிராமப்புறங்களில் வீடுகளில் பாதுகாப்பு சம்பந்தமாக ஒலிபரப்பை மேற்கொண்டனர்.

ஆலயத்துக்குச் செல்லும் பொது மக்கள் கூடியளவு அனைவரும் ஒன்றாக ஆலயத்துக்குச் செல்லாது ஒருவரையேனும் வீட்டில் காவலுக்கு நிறுத்திவிட்டுச் செல்லுமாறும் இரவு நேரங்களில் வீட்டின் வெளிப்புறத்தில் மின்குமிழ்களை எரியவைக்கும்படியும் பெறுமதி மிக்க நகைகளை பாதுகாப்பான முறையில் உரிய இடங்களில் வைக்குமாறும் அறிவுறுத்தப்பட்டு வருகின்றது.

கடந்த பல மாதங்களாக யாழ்ப்பாணத்தில் திருடர்களின் தொல்லை குறைவடைந் திருந்த போதிலும் தற்போது பரவலாக சிறிய திருட்டுக்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-86-26)

## பட்டப் பகலில் 14 பவுண் திருட்டு

யாழ்ப்பாணம், ஒக.5

பட்டப்பகலில் வீட்டில் யாருமற்ற வேளையில் வீட்டுக்கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த 14 பவுண் நகைகள் மற்றும் 30 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் இருபாலை ஜி.பி.எஸ் ஒழுங்கையில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. என். ஜெயரட்ணராஜா என்பவரது வீட்டிலேயே இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வெளியே சென்றவர்கள் வேலை முடிந்து பிற்பகல் வீடு திரும்பிய போதே சம்பவம் இடம்பெற்றிருந்ததை அறிந்தனர். இது தொடர்பாக கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ம-4)

## சிகிச்சை பயனின்றி இளம் தாய் மரணம்

யாழ்ப்பாணம், ஒக.5

மண்ணெண்ணெய் குக்கர் வெடித்ததால் உடலில் தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளம் தாய் சிகிச்சை பயனளிக்காது ஐந்தாவது நாள் யாழ் போதனா வைத்தியசாலையில் மரணமானார்.

இந்தச் சம்பவத்தில் முத்தையன் கட்டைச் சேர்ந்த தெ.சிறிரஞ்சினி (வயது-21) என்பவரே மரணமானார்.

கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்த நிலையில் அது பயனளிக்காது நேற்று முன்தினம் மரணமானார். விசாரணையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.(ம-4)

## வடமராட்சி மின்சார அலுவலகத்துக்கு பாவனையாளர்கள் பெரும் சிரமம்

வடமராட்சி, ஒக. 5

நெல்லியடியில் உள்ள இலங்கை மின்சார சபையின் வடமராட்சி அலுவலகத்துக்கு போதிய தொலைபேசி வசதிகள் இன்மையால் மின் பாவனையாளர்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதில் நாளாந்தம் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றார்கள்.

வடமராட்சி அலுவலகத்துடன் பொதுமக்கள் தொடர்பு கொள்ளவும், அலுவலகத் தேவைக்கும் என ஒரேயொரு தொலைபேசி இணைப்பு மாத்திரமே உள்ளது.

இந்த ஒரே ஒரு தொலைபேசி அநேகமான வேளைகளில் ஏதோ ஓர் அழைப்பில் இருந்த வண்ணமே உள்ளது.

இதனால் வீடுகள், கடைகள், வர்த்தக நிலையங்கள் உள்ளிட்ட அனைத்துக்கும் மின்சாரம் தடைப்பட்டால் மின்பாவனையாளர்கள் அவசரமாக மின்சார சபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு முறையிட முடியாத நிலை இருந்து வருகின்றது.

பல மணிநேரம் முயற்சித்தும் தொலைபேசித் தொடர்பினைப் பெற முடியாமல் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

அத்துடன் பொதுவாக மின்சாரம் தடைப்பட்டாலும் அது குறித்த தகவலையும் மின் பாவனையாளர்கள் பெறமுயற்சித்தால் அது முடியாத காரியமாகவே இருந்து வருகிறது.

பல மணிநேரம் முயற்சித்தும் தொலைபேசித் தொடர்பை பெறமுடியாமல் இருப்பதாகக் கூறப்படுகிறது.

மின் பாவனையாளர்களின் வசதி கருதி அவர்கள் தகவல்களைப் பெற்றுக்கொள்ள வதியாக தனியான தொலைபேசி இணைப்பை வடமராட்சி மின்சாரசபை அலுவலகத்துக்கு ஏற்படுத்தி மின்பாவனையாளர்களுக்கு வசதிகளை வழங்க இலங்கை மின்சார சபை முன்வரவேண்டும் என்று மின் பாவனையாளர்கள் கேட்டுக் கொள்கின்றார்கள்.

(ம-236)

## 'இணக்கமும் இசையும்' ஓவியக் கண்காட்சி



யாழ்ப்பாணம், ஒக. 5

இந்தியத் தூதரகத்தின் ஏற்பாட்டில் கொழும்பு - இந்திய கலாசார மையத்தின் அனுசரணையுடன் 'இணக்கமும் இசையும்' என்னும் தலைப்பிலான ஓவியக் கண்காட்சி நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடமாகாண ஆளுநர் ஜி. ஏ.சந்திரசிறியால் நேற்று நண்பகல் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய தூதரகத்தின் பதில் துணைத் தூதுவர் கோரகுராம், வடமாகாண கலை, கல்வி, விளையாட்டு அமைச்சின் செயலர் இ.இளங்கோவன் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் அதிபர் வீ.கணேசராசா, வடமாகாண கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் ஸ்ரீதேவி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கண்காட்சி எதிர்வரும் 6 ஆம்திகதி வரை இடம்பெறவுள்ளது. முற்பகல் 10.30 மணிமுதல் மாலை 4 மணி வரை பார்வையிடமுடியும். இதில் இந்தியப் பெண்களால் வரையப்பட்ட ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

சோனியா அகர்வால், ருச்சி, கோயல் கயூரா, பீபா செத் பகன்டோ, சந்தியா சில் ஆகியோரினால் வரையப்பட்ட ஓவியங்களே காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (ம-15)

## ஓய்வூதியத் திட்டத்தினுள் சமுர்த்தி அலுவலர்களும்

யாழ்ப்பாணம், ஒக.5

நாடு தழுவிய ரீதியில் கடமையாற்றும் 23 ஆயிரத்து முந்நூறு சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் ஓய்வூதிய திட்டத்தில் உள்வாங்கப்படவுள்ளனர்.

இதற்கான முன்னேற்பாட்டு திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கான ஆலோசனையைப் பெற்று வருவதாக பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

1995 இல் வறுமை ஒழிப்புத் திட்டத்தை ஒழிப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தில் சேர்ப்பதற்காக 23 ஆயிரத்து 300 பேர் விரைவில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதற்குச் சார்பாகவும் எதிராகவும் பல கருத்துக்கள் முன்வைக்கப்படுவதால் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு இந்தத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

விரைவில் இதற்கான அனுமதி கிடைத்ததும் தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-302)

## உலக வங்கிக்குழு பருத்தித்துறைக்கு

யாழ்ப்பாணம், ஒக.5

பருத்தித்துறை பொதுச் சந்தை புனரமைப்பு வேலைகளைப் பார்வையிட உலக வங்கியின் குழு ஒன்று எதிர் வரும் 10 ஆம் திகதி பருத்தித் துறைக்கு விஜயம் செய்யவுள்ளது.

பருத்தித்துறை நவீன சந்தை பல்வேறு நவீன வசதிகளுடன் என்றிப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இது சுமார் 175 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது. இங்கு இடம்பெறும் புனரமைப்பு வேலைகளைப் பார்வையிட உலக வங்கியில் இருந்து குழு ஒன்று பருத்தித்துறைக்கு எதிர்வரும் 10ஆம் திகதி விஜயம் செய்து சந்தை அபிவிருத்தி வேலைகளை பார்வையிடவுள்ளது.(ம-319)

## கட்டுடை- இடிகுண்டுப் பகுதிக்கு மின் இணைப்பு வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக.5

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கட்டுடை-இடிகுண்டு வீதிக்கும் தூக்குனி வைரவர் ஆலயத்துக்கும் மின்சார இணைப்புக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்ட போதும் இதுவரை இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இந்தப் பிரதேசம் இருளில் மூழ்கியிருப்பதாக பல தடவைகள் மின்சார சபைக்கு சுட்டிக்காட்டப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டன.

எனினும் நான்கு மாதங்கள் கழிந்துள்ள நிலையிலும் மின்சார கம்பங்கள் இடப்படவுமில்லை, மின் இணைப்பு வழங்கப்படவுமில்லை. ஆனால் சண்டிலிப்பாய் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் மின்சார சபை பொறியியலாளர் ஒரு மாதத்தில் மின்சார ஒளி ஏற்றுவோம் என்று கூறியும் எதுவும் இடம்பெறவில்லை.

பெரும்போக மழைகாலம் நெருங்குவதால் இடிகுண்டு பிரதேசம் ஆபத்தானதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ம-302)

## தொடர்ந்து வீசும் கடுங்காற்று வடமராட்சிக்கு மின் தடை

வடமராட்சி, ஒக. 5

கடந்த இரு தினங்களாக வீசிய கடும் காற்றால் வடமராட்சிப் பிரதேசத்துக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டிருந்தது.

இந்தக் கடும் காற்று வல்லை வெளியில் மிக மோசமாக வீசியதால் உயர் அழுத்த மின் வழித்தடங்களில் மின் கம்பங்களில் பொருத்தப்பட்டிருந்த மாபிள் கேபிள்களுக்குள் உப்புக் காற்றும், மணலும் உட்புகுந்ததால் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு முதல் மின் விநியோகம் தடைப்பட்டது.

குறிப்பிட்ட கேபிள்கள் துப்புரவு செய்யப்பட்டு சீர்செய்யப்பட்டதைத் தொடர்ந்து மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பின்னர் வடமராட்சிப் பிரதேசத்துக்கு மின்சாரம் கிடைத்தது.

மீண்டும் வல்லை வெளியில் அதே நிலைமை ஏற்பட்டதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 5 மணியுடன் மின்சாரம் தடைப்பட்டது.

காலை மீண்டும் சீர் செய்யப்பட்டு நேற்று காலை 8 மணிக்கு மீண்டும் மின்சாரம் கிடைத்தது.

கடந்த இரு தினங்களாக இரவு நேரம் முழுவதும் உட்பட பல மணி நேரம் மின்சாரம் தடைப்பட்டதால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதுடன் பொதுமக்களின் அன்றாட கருமங்களும் பாதிப்படைந்தன. (ம-236-319)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்களின் திருக்காட்சிகள்




காரைநகர், வியாவில் ஐயனார் ஆலயத்தில் இடம் பெற்ற தேர்த்திருவிழாவில் சுவாமி வீதியுலா வருகிறார். (ம-250)




சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலய ஸ்ரீ சுவர்ணாம்பிகா தேவியின் தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்றது. அம்பாள் தேரில் ஆரோகணித்து வருகிறார். (ம-38)



காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் ஆனி உத்தர நடேசர் அபிஷேகம் இடம்பெறுகிறது. (ம-250)



வண்.வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா அண்மையில் இடம் பெற்றது. (ம)



திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ நீலாயதாஷி அம் பாள் ஆலய தேர்த்திருவிழாவில் அம்பாள் தேரில் ஆரோ கணித்து வீதியுலா வருகிறார். (7)



அளவெட்டி, தவளகிரி அம்மன் ஆலய தேர்த்திரு விழாவில் அம்மன் தேரில் பக்தர்கள் புடைசூழ ஆரோ கணித்து வருகின்றார். (ம)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திருமதி அ.மரியகொறற்றி** (கினிஸ்ரா) **பா.வின்சென்ற்** (அன்ரனி)

அகில இன நல்லுறவு ஒன்றியத்தால் கல்முனை திரு இருதயநாதர் மண்டபத்தில் 26.06.2011 இல் சாமஸ்ரீ தேசமானிய விருதுபெற்றதை வாழ்த்துகின்றோம்

பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

தண்டர்ஸ் கழகம்


## மயில்வாகனம் சுவாமிகளின் 26 ஆவது குருபூசை

ஸ்ரீமத் முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளின் 26 ஆவது குருபூசைத் தினம் இன்று 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்னாரின் நினைவாக செல்வச் சந்நிதி முருகன் கோயிலில் இடம்பெறும் விசேட அபிஷேக, பூசை ஆராதனைகளைத் தொடர்ந்து ஆச்சிரம மண்டபத்தில் குருபூசைத்தின நிகழ்வுகள் இடம்பெறும். நிகழ்வில் சிறப்பம்சமாக அன்னைதாசன் ச.ஆனந்தராசா பக்கவாத்தியங்கள் சகிதம் 'மனிதருள் புனிதர்' என்னும் தலைப்பில் இசைச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

தொடர்ந்து வாராந்த ஆன்மிக நிகழ்வு வரிசையில் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்வுநடைபெறும்.

(ம-236)


## மனமார்ந்த நன்றிகள்



**வலி.தென்மேற்கு - மானிப்பாய் பிரதேச சபைத் தேர்தல் - 2011**

தமிழ் இன உணர்வோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உங்கள் முழு ஆதரவையும் வழங்கி பெரும் வெற்றியீட்டித் தந்ததுடன் **08 ஆம்** இலக்கத்தில் போட்டியிட்ட எனக்கு அதிக விருப்பு வாக்குகளை அளித்து என்னை முதலாவதாக வெற்றிபெறச்செய்த என் அன்புமிகு நண்பர்கள், ஆதரவாளர்கள் மற்றும் அனைவருக்கும் என் உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

என்றும் மக்கள் சேவையில் அ.ஜெபநேசன்
இலங்கைத் தமிழரசுக் கட்சி (தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு)





மிருசுவில் படித்த மகளிர் திட்டம் - "துர்க்காபுரம்"

## ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் ஆலய அலங்கார உற்சவம் -2011

அலங்கார உற்சவம் கர வருடம் ஆடி மாதம் 20ஆம் நாள் இன்று (05.08.2011) வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி ஆடி மாதம் 29 ஆம் திகதி (14.08.2011) ஞாயிற்றுக்கிழமை இறுதி நாள் தீர்த்த உற்சவத்துடன் 10 நாள்கள் நடைபெறவுள்ளது. 9 ஆம் நாள் ஆடி 28 ஆம் நாள் (13.08.2011) சனிக்கிழமை விசேடமாக ஆலயத்தின் வாக்களிக்கும் தாயானவள் ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மனின் தெய்வீக அருட்கலையுடன் கூரிய வாள்களின் மீது ஏறி நின்று துர்க்காதேவியுடன் சேர்ந்து வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறும். அத்துடன் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமி அவர்கள் வருகை தந்து அம்பிகையினுடைய பக்த அடியார்கள் அனைவருக்கும் அருளாசி வழங்கவுள்ளார்.

தினந்தோறும் காலை 9.00 மணி தொடக்கம் ஸ்நபன அபிஷேகம், பூசை, திருவிழா என்பனவும் அதனைத் தொடர்ந்து அம்பாள் வீதியுலா வருதலும் மகேஸ்வர பூசையும் நடைபெறும்.

ஆலய பிரதமகுரு: சிவஸ்ரீ நவரத்தினம் முகுந்தன் குருக்கள்
(ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் ஆலயம் -படித்த மகளிர் திட்டம், மிருசுவில்)

துர்க்காபுரம்,
படித்த மகளிர் திட்டம்,
மிருசுவில்.

ஆலய தர்மகர்த்தா
சிவத்திரு.சி. நவரத்தினம் ஐயா.
T.P- 021 321 3574


## விவசாயக் கண்காட்சி

யாழ்.திருநெல்வேலி விவசாய பயிற்சி நிலையத்தின் விவசாய கண்காட்சி எதிர்வரும் 18 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியில் விவசாயிகள், மாணவர்கள் கலந்து கொள்ளுமாறு விவசாய பணிப்பாளர் எஸ். சிவகுமார் அறிவித்துள்ளார்.

(ம-207)


## ජාතික සම්පත

சீட்டிழுப்பு இலக்கம் - 145
திகதி - 03.08.2011

ஜாதிக சம்பத Jathika Sampatha

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து **P** அதிர்ஷ்ட இலக்கம் **01** வெற்றி இலக்கம் **2 8 3 1 4**

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | P | 01 | 2 | 8 | 3 | 1 | 4 | ரூ. | 23,627,127.00 | பரிசு | - |
| 1 பரிசு | | 01 | 2 | 8 | 3 | 1 | 4 | ரூ. | 2,000,000.00 | பரிசு | 01 |
| 2 பரிசு | | | 2 | 8 | 3 | 1 | 4 | ரூ. | 100,000.00 | பரிசு | 04 |
| 3 பரிசு | | | | 8 | 3 | 1 | 4 | ரூ. | 10,000.00 | பரிசு | 39 |
| 4 பரிசு | | | | | 3 | 1 | 4 | ரூ. | 1,000.00 | பரிசு | 398 |
| 5 பரிசு | | | | | | 1 | 4 | ரூ. | 50.00 | பரிசு | 3,973 |
| 6 பரிசு | | | | | | | 4 | ரூ. | 20.00 | பரிசு | 38,116 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 2 | 8 | 3 | 1 | | ரூ. | 1,000.00 | பரிசு | 39 |
| 8 பரிசு | | | 2 | 8 | 3 | | | ரூ. | 100.00 | பரிசு | 400 |
| 9 பரிசு | | | 2 | 8 | | | | ரூ. | 50.00 | பரிசு | 3,969 |
| 10 பரிசு | P | | | | | | | ரூ. | 20.00 | பரிசு | 15,810 |
| 11 பரிசு | P | 01 | | | | | | ரூ. | 100.00 | பரிசு | 1,709 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,913,520.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு
ரூ.23,627,127.00


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியளம் கேட்டீர்களா?

## ஊர்க்குளங்களில் மீன்வகைகள் வளர்த்து பசிலுக்கு சவால் விடலாமே சபைகள்!

குளம் வற்றும் எனக் காத்திருந்து குடல் வற்றிச் செத்ததாம் கொக்கு என்றொரு பழமொழி நம் மத்தியில் உள்ளது. பொருத்தமற்ற எதிர்பார்ப்பு பயனற்றது என்பது அதன் கருத்தாகும். ஆனால் நமது பிரதேசத்தில் கோடை காலத்தில் குளங்கள் வற்றி, பாளம் பாளமாக வெடித்து விடும்.அந்த வெடிப்புக்களுக்குள் விரால் மீன்கள் நுழைந்திருக்கும். கிராமத்து மக்கள் அவற்றை இலகுவாகப் பிடித்து உணவாக்குவர்.

யாழ்ப்பாணக் குடாநாடு காற்றொதுக்கு வலயத்துக்குள் உள்ளதால் வடகீழ் பருவக் காற்றின் செல்வாக்குக்கு உட்படுவதில்லை. வடக்கு, கிழக்கின் ஏனைய பிரதேசங்கள்தான் பருவக் காற்றின் மூலம் மழையைப் பெறுகின்றன. யாழ்ப்பாணம் பிரதானமாக நவம்பர்,டிசெம்பர் மாதங்களில் வங்காள விரிகுடாவில் ஏற்படும் தாழமுக்கத்தின் விளைவாகவே மழையைப் பெறுகின்றது. எனவே,குறுகிய கால மழையை நம்பியே இங்கு நெற்செய்கை இடம்பெறுகின்றது. ஏனைய பிரதேசங்களில் குளத்து நீர்ப்பாசனம் மூலம் சிறுபோகப் பயிர்ச்செய்கை இடம்பெறுவது போல இங்கு இடம்பெறுவதில்லை. அதற்கான நீரும் இங்கில்லை.

யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் சுண்ணக்கற்பாறைகளாலானது. இவை நீரை உட்கசிய விடும் தன்மை வாய்ந்தன. பெறப்படும் மழைநீர் உட்கசிந்து யாழ்ப்பாணத்தின் நன்னீர் மட்டத்தை உயர்த்துகின்றது. மேலதிக நீர் கடலுள் கலக்கிறது. கோடை காலத்தில் இந்த நீர்மட்டம் தாழ்ந்து போகிறது. சில இடங்களில் இல்லாது போக அந்த இடத்தைக் கடல்நீர் நிறைக்கின்றது. இதனால் கிணறுகள் உவரடைகின்றன. யாழ்ப்பாணத்தின் அரைவாசிப் பகுதியில் கோடை காலத்தில் நன்னீர்த் தட்டுப்பாடு பொதுவான பிரச்சினையாக உள்ளமை இதனால்தான்.

மன்னராட்சி நிலவிய காலத்தில் இராஜகாரிய முறை இருந்தது. அரசனின் கட்டளைக்கேற்ப குளங்களைத் தூர்வாருதல் முதலிய பொது வேலைகளைக் குறிப்பிட்ட காலத்துக்கு மக்கள் செய்ய வேண்டும். அதனால் பல குளங்கள் அமைக்கப்பட்டன. அவை ஆண்டுதோறும் புனரமைக்கப்பட்டன. தரையில் விழும் ஒருதுளி நீரையேனும் கடலில் கலக்க விடேன் எனச் சபதமிட்டுச் செயற்பட்ட மகாபராக்கிரமபாகு முதல் இலங்கையின் மன்னர்கள் நீர்வளம் பெருக்கி ஏர்வளம் சிறக்கப் பாடுபட்டார்கள். அவர்களிட்ட பிச்சையில் நாமின்று குளிர் காய்கின்றோம்.

நமது பிரதேசத்தில் குளப் புனரமைப்பு மிகக் குறைந்து விட்டது.சில திட்டங்கள் மூலம் அண்மை நாள்களில் குளப் புனரமைப்பு நடந்தாலும் அது முழுமையானதல்ல. தூர்வாரி, ஆழப்படுத்தி, அணை கட்டி அச்செயற்பாட்டைப் பூரணப்படுத்துவதே பொருத்தமானதாகும். நமது பிரதேசத் தேவைக்கு ஏற்ப சரியான தூரநோக்குடன் இச்செயற்பாடுகள் திட்டமிடப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் மதுரை மாவட்டத்தின் அரைவாசிப் பிரதேசம் எமது பிரதேசத்தை ஒத்த காலநிலைத் தன்மை உடையது. அங்கு கலைஞர் கருணாநிதி தலைமையிலான தமிழக அரசாங்கம் கிராமங்கள் தோறும் குளங்களை அமைத்தது. அவை கண்மாய்கள் என அழைக்கப்பட்டன. கால்வாய்கள் மூலம் இந்தக் கண்மாய்கள் ஒன்றுடன் ஒன்று தொடுக்கப்பட்டன.

இவை உள்ளூராட்சி அமைப்புக்களிடம் கையளிக்கப்பட்டன. ஊராட்சி, பேரூராட்சி எனப்படும் இத்தகைய உள்ளாட்சி அமைப்புக்கள் ஆண்டு தோறும் கிராம மக்களின் உதவியுடன் இவற்றைப் புனரமைக்க வேண்டும். மாரிகாலத்தில் கண்மாய்கள் நிறைந்து விடும். எனவே, உள்ளாட்சி அமைப்புக்கள் கண்மாய்களை ஏலத்தில் விடும்.ஏலம் எடுப்பவர் நன்னீர் மீன் குஞ்சுகளை விட்டு வளர்த்துச் சம்பாதிப்பார். அந்த ஆண்டு முழுவதும் அக்கண்மாயில் அவர் மட்டுமே மீன் பிடிக்கலாம். ஆனால் நீர்ப்பாசனம் உள்ளாட்சி அமைப்பினால் செயற்படுத்தப்படும். ஏலத்தொகையைப் பயன்படுத்தி கோடை காலத்தில் உள்ளாட்சி அமைப்பு கண்மாயைப் புனரமைப்புச் செய்யும்.

நமது பிரதேசத்திலும் இது போன்று உள்ளூராட்சி அதிகார சபைகளும் அரசாங்கமும் சிந்திக்கலாம். தெருவிளக்குகளைப் பொருத்துவதற்கும், தண்ணீர்க் குழாய்களை அமைப்பதற்குமே உள்ளூராட்சி சபைகளுக்கு அதிகாரம் உண்டு என்று "பெரும் களம்" அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கிண்டல் அடித்திருக்கிறார். அவற்றோடு நிற்காதுஅந்தந்தக் கிராமங்களில் ஆதாயம் தரும் மீன் வளர்ப்புத் திட்டங்களை ஆரம்பித்தால் மாமிச உணவுத் தேவையைப் பெற்றுக்கொள்ள வழிபிறப்பதோடு வருமானமும் கிடைக்கும். அமைச்சருக்குச் சவால் விட்டதாகவும் முடியும் அல்லவா? அங்கு கடல் மீனை விட குளத்து மீனுக்கே மவுசு அதிகமாம்.இங்கு சுற்றி வரக் கடல் உள்ளதால் குளத்து மீன்பிடி சாதகமற்றதாக இருக்கலாம். ஆனால் முயற்சி எடுத்து குளத்தில் மீன் வளர்ப்பை ஆர்வத்துடன் ஈடுபட்டால் ஆதாயந் தரும்.நமது பிரதேசத்தின் உவராதலைத் தடுக்கவும், விவசாயத்தை விருத்தி செய்யவும் குள ஆழப்படுத்தல் இன்றியமையாததாகும். விவசாய சம்மேளனங்கள் கூட இதில் அக்கறையெடுக்கலாம்.

விழிச்சான் குஞ்சு.

# யாழ். மாவட்ட எம்.பிக்கள் குறைப்புக் குறித்து தேர்தல் ஆணையாளரின் அறிக்கை இவ்வாரம்

## எண்ணிக்கை குறைக்கப்பட்டதற்கான காரணம் அறிக்கையில் விளக்கப்படும்

கொழும்பு, ஓக. 5

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கைக் குறைப்புத் தொடர்பாக இவ்வார இறுதிக்குள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய விசேட அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளார்.

- இவ்வாறு பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ஒன்பதிலிருந்து ஐந்தாக அண்மையில் குறைக்கப்பட்டது. இந்த நிலையில், இது தொடர்பாக பல்வேறு கட்சிகள் அதிருப்தி வெளியிட்டன.

இதனைக் கவனத்தில்கொண்ட தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கைக் குறைப்புத் தொடர்பாக விசேட அறிக்கை ஒன்றை இவ்வார இறுதிக்குள் வெளியிடவுள்ளார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டமைக்கான காரணம் குறித்தும், குறைக்கப்பட்ட அந்த மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின்எண்ணிக்கையை ஏனைய மாவட்டங்களில் பகிரப்படும் விதம் தொடர்பாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்படும்.

2010ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வாக்காளர் கணக்கெடுப்பில் சுமார் மூன்று லட்சம் பேர் குறைந்துள்ளனர். அதனால், இதற்குச் சமனாக அந்த மாவட்டங்களில் இருந்து தெரிவாகும் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவ எண்ணிக்கையை ஏனைய மாவட்டங்களில் பகிர்வதற்கு அரசமைப்பில் இடமுள்ளது - என்று பிரதித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (சி)

# மத்திய ஆட்சியிலும் அதிகாரம் வேண்டும்


கொழும்பு,ஓக.5

தமிழர்களுக்கு மாகாண மட்டத்தில் மாத்திரம் இன்றி, மத்திய ஆட்சியிலும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ வித்தாரண தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற பிரதானிகளின் பதவிப் பிரமாண நிகழ்வு நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

நாட்டில் பொருளாதார அபிவிருத்தி அவசியமாகும். எனினும் வடக்கு மக்களைப் பொறுத்தவரையில் தமக்கு அரசியல் தீர்வு ஒன்று தேவை என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்ததன் மூலம் நிரூபித்துள்ளார்கள்- என்றார். (ச)



2600ஆவது புத்தரின் பிறந்த தினத்தை முன்னிட்டு பிக்குகள் தானம் பெற்றுச் செல்லும் ஊர்வலம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் ஆரம்பமானது. இந்த நிகழ்வில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பிக்குகளுக்குத் தானம் வழங்குகிறார்.

# கைதிகளின் விவரங்கள் கணினி மயப்படுத்தப்படும்

கொழும்பு, ஓக. 5

தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து கைதிகளினதும் தகவல்களை கணினி மயப்படுத்துவதற்கு புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுவரை சிறைச்சாலைகளில் இருந்து சுமார் 254 கைதிகள் தப்பிச்சென்றுள்ளனர் என்று அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்தார்.

அவர்களில் 14 பேர் மாத்திரமே மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தடுப்பதற்காக தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்துக் கைதிகளினதும் கைரேகை மற்றும் அங்க அடையாளங்களை கணினி மயப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

மன்னார், பேசாலை கடற்பகுதியில் ஒரு கிலோகிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப் பொருளுடன் ஒருவரை கடற்படையின் விசேட குழு கைது செய்துள்ளதாக கடற்படை பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ண குலசூரிய தெரிவித்துள்ளார்.

இந்தப் போதைப்பொருளை இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டுவர முற்பட்ட போது இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (ச)

# கருவைத் தலைவராக்கினாலும் ஐ.தே.க. வெல்ல முடியாது

## தயாசிறி ஜயசேகர கூறுகிறார்



கொழும்பு, ஓக.5

ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படாத பட்சத்தில் கட்சியின் தலைவராக கரு ஜயசூரியவை நியமித்தாலும் தேர்தல்களில் வெல்லமுடியாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று முன்தினம் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

கட்சிக்குள் இப்போது எழுந்திருக்கும் பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கமுடியும். அவ்வாறு தான் செய்யவும் வேண்டும்.

வீழ்ந்து கிடக்கும் கட்சியை நாம் தூக்கி நிமித்த வேண்டும். கட்சியை வெற்றிபெறும் நிலைக்குக் கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கையை நாம் மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும்.

யார் தலைவராக வந்தாலும் பரவாயில்லை. கட்சியின் வெற்றிக்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடரவேண்டும். அதை இடைநடுவில் நிறுத்திவிடவோ அல்லது குழப்பிவிடவோ கூடாது.

கட்சிக்குள் நாம் ஒன்றிணைந்து செயற்படாவிட்டால் ரணில் விக்கிரமசிங்கவை நீக்கிவிட்டுகருஜயசூரியவைத் தலைவராக நியமித்தாலும் எம்மால் தேர்தல்களில் வெற்றி பெற முடியாது.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தமது கடமையை சரிவரச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்து விட்டு வீட்டில் இருப்பது நல்லது - என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 5

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களம் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தும் சமய சொற்பொழிவுகளும், கலைநிகழ்வு களும் இரண்டாம் திருவிழாவான இன்று வெள் ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

இதில் சிறப்புச் சொற்பொழிவை " செஞ்சொற் புனை மாலை" எனும் தலைப்பில் சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் நிகழ்த்துவார்.

அதனைத் தொடர்ந்து ஓட்டுமடம் ஞான வைரவர் அறநெறிப்பாடசாலை, சித்தங் கேணி சிவசக்தி அறநெறிப் பாட சாலை ஆகியன பங்குபற்றி நடத் தும் கலை நிகழ்வு களும் இடம்பெற வுள்ளன.

(ம-313)

* * *

யாழ்ப்பாணம், ஓக.5

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆல யத்தின் அனுசர ணையுடன் நல் லூர் இளங் கலை ஞர் மன்றம் நடத் தும் தெய்வீக இசையரங்கில் இன்று வெள்ளிக் கிழமை மாலை 6.30 மணிக்கு நல் லூர் துர்க்காதேவி மண்டபத்தில் எஸ்.தில்லைமணி, கே.பத்மநாதன், சதாவேல்மாறன், எ.செல்வரத்தினம் ஆகியோர் பங்கு பற்றும்திருமுறைக் கச்சேரி இடம்பெற வுள்ளது.

(ம-313)


## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.07.2010 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதியில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல. | கிளை | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் விடப்படும் இடம் |
|---|---|---|---|
| 01 | யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளையும், மானிப்பாய் சேவை நிலையமும் நாவலர் வீதி சேவை நிலையமும் | 25.09.2011 மு.ப. 8.30 | மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளை - 030 |
| 02 | காங்கேசன்துறைக் கிளையும் மல்லாகம் சேவை நிலையமும் | | |
| 03 | யாழ்.பிரதான வீதிக்கிளையும் உரும்பிராய் சேவை நிலையமும் | | |
| 04 | ஊர்காவற்றுறை | | |
| 05 | நெல்லியடி | | |
| 06 | அச்சுவேலி | | |
| 07 | சங்கானைக்கிளையும் பண்டத்தரிப்பு சேவை நிலையமும் | | |
| 08 | சுன்னாகக் கிளையும் கோப்பாய் சேவை நிலையமும் | | |
| 09 | சாவகச்சேரிக் கிளையும் கொடிகாமம் சேவை நிலையமும் | | |
| 10 | வல்வெட்டித்துறை | | |
| 11 | யாழ். பல்கலைக்கழகக் கிளையும் திருநெல்வேலி சேவை நிலையமும் கல்வியங்காடு சேவை நிலையமும் | | |
| 12 | யாழ்.கன்னாதிட்டிக்கிளையும் இணுவில் சேவை நிலையமும் | | |
| 13 | பருத்தித்துறைக் கிளையும் புலோலி சேவை நிலையமும் | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி, பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

2011.08.04 (சி/ 2405)



## காணி விற்பனைக்கு

ஓட்டுமடச் சந்திக்கு அருகில் மானிப்பாய் வீதியில் இருந்து 50 மீற்றர் தூரத்தில் 17½ பரப்பு நெற்காணி விற்பனைக்கு உண்டு. தேவைக் கேற்பப் பிரித்தும் கொடுக்கப்படும். தொடர்பு: 0774030493, 0217903585



## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2245 திகதி 03-08-2011

ஆங்கில எழுத்திற்கும் M

வெற்றி எண்கள் 31 57 63 69

போனஸ் இல: 45

ஜக்பொட் பரிசு ரூ. 17,511,200/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 216264 | 20/- | 4,325,280/- |
| 2 இல | 15397 | 100/- | 1,539,700/- |
| 3 இல | 313 | 1,000/- | 313,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8722 | 40/- | 348,880/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 672 | 1,000/- | 672,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 11 | 10,000/- | 110,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 17,511,200/- | - |
| 1 இல + போனஸ் இல | 10307 | 100/- | 1,030,700/- |
| 2 இல + போனஸ் இல | 477 | 500/- | 238,500/- |
| 3 இல + போனஸ் இல | 03 | 100,000/- | 300,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 415 | 200/- | 83,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 18 | 1,500/- | 27,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 01 | 150,000/- | 150,000/- |
| மொத்தம் | 252601 | | 10,138,060/- |
| ரத்தரங்வரம மொத்த பரிசு | 336 | | 267,500/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 252937 | | 10,405,560/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2011 ஓகஸ்ட் 06 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 18,101,250/-

ரத்தரங் வரம

தங்கக்காசு பரிசுப்பொதி வெல்லப்படவில்லை

வெற்றி எண்கள் 19 29 37 48

ஆங்கில எழுத்திற்கும் S

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 3 இல | 335 | 500/- | 167,500/- |
| 4 இல | 01 | 100,000/- | 100,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | ஒரு பவுன் தங்கக்காசு 39 | - |

இந்த சனிக்கிழமை தங்கக் காசுப் பொதி 41 தங்க நாணயங்கள்

அபிவிருத்தி லொத்தர் சபை

356, தகாநிதி கொலவின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே. 2333546/7


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் புண்ணியமூர்த்தி மனோகரி



தோற்றம்
03.07.1958

மறைவு
16.08.2010


அன்புள்ள எம் தாயே...
உங்கள் ஆயுள் முடிந்து
ஆண்டு ஒன்று கடந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்...
தாய் என்னும் வார்த்தைக்கு
இலக்கணமாய் வாழ்ந்தவரே....!
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
விண்ணுலகம் சென்றதேனோ....?
ஆயிரம் உறவுகள் அருகில்
இருந்தென்ன
அம்மா உங்களைப் போல் வருமா....?
அன்பையும், பாசத்தையும்
அமுதாய் ஊட்டிய எம் தாயே...
மீண்டும் ஒரு முறை உங்கள்
கருவினில் வளர்ந்திட
ஆசைப்படுகின்றோம்
எம்மைச் சுமக்க மறுமுறை
எமக்காய் பிறந்து வாரீரோ...!
எம் தாயே.....
ஆண்டு ஒன்றல்ல ஏழு ஜென்மங்கள்
கடந்தாலும்
உங்கள் நினைவுகள்
எம்மவர் இதயத்தில்
பசுமையாய் வாழும்.......

ஈரவிழிகளுடன்
பிள்ளைகள்-
பு.சஞ்சீவ், பு.கீர்த்திகா,
பு.கோபிராஜ்
பெறாமக்கள்-
ம.அகிலன், ம.கபிலன்
சகோதரர்கள்
சி.சுபாஸ்கரன், ஸ்ரீ.நந்தினி

வளாக வீதி,
திருநெல்வேலி.

## நீங்கா நினைவலைகளில்

1 ஆம் ஆண்டு



13 ஆம் ஆண்டு



அமரர் முருகேசு சண்முகம்

அமரர் சண்முகம் இரத்தினம்

தோற்றம் -1926.04.18
மறைவு - 2010.08.15
(திதி:ஆடி மாத வளர்பிறை ஷஷ்டி)

தோற்றம் -1934.04.13
மறைவு - 1998.05.11
(திதி:சித்திரைப் பௌர்ணமி)

ஆயிரம் பிறை கண்ட ஐயாவே
நேரிலே நாம் கண்ட நிலவெங்கே
தாயினும் மேலாக தயை கொண்டீர்
ஆயினும் பிரிந்து ஆனதே ஓராண்டு

ஐயனுக்கு ஆண்டு ஒன்று அம்மைக்கு
ஐயிரண்டோடு மூவாண்டு – எமை
உய்ய வழி சமைத்து ஓங்கி நீவிர் உயர்ந்து
பொய்யில்லா மெய்வாழ்வு பெற்றீர்
வையகம் உள்ளவரை மறவோம் உம் நினைவை.

57, மருதடி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(6532)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வாதார உதவிகள் வழங்குவதில் பாகுபாடு காட்டுவது குறித்து விசனம்

கிளிநொச்சி, ஓக 5

கிளிநொச்சியின் பல பகுதிகளிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் வாழ்வாதார உதவிகளில் பாகுபாடுகள் காட்டப்படுவதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

கொடிய யுத்தம் ஒன்றுக்கு முகம் கொடுத்து இடம்பெயர்ந்து பல்வேறு இன்னல்களை அனுபவித்து மீள்குடியமர்ந்த இந்த மக்கள் அனைவருக்கும் வழங்கப்படும் வாழ்வாதார உதவிகளிலும் பாகுபாடு காட்டப்படுவதால் மிகுந்த விசனம் அடைந்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்குவதாகக் கூறி நீர் இறைக்கும் இயந்திரம், தையல் இயந்திரம் என்பன வழங்கப்பட்டன. ஆனால் பாதிக்கப்பட்டவர்கள் புறக்கணிக்கப்பட்டு வசதியுள்ளவர்களுக்கு இவை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதிலும் இவர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்கள் வழங்கப்பட்டுள்ளமைதான் வேதனையளிப்பதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவென வழங்கப்பட்ட பொருள்கள் அந்தப் பகுதி கிராம சேவையாளருக்குத் தெரியாமல் நேரடியாகக் கிராமத் தலைவர், செயலாளர் என்போரிடம் வழங்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இவர்கள் இப்பொருள்களைத் தாம் நினைத்த படி வழங்குவதாகவும் கூறப்படுகின்றது. இவ்வாறு வழங்கவெனப் பெறப்பட்டு வைக்கப்பட்டிருந்த நீர் இறைக்கும் இயந்திரங்களில் சில களவு போய் விட்டதாக உரியவர்கள் கூறியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. கிளிநொச்சியில் பல பகுதிகளிலும் இவ்வாறான சம்பவங்கள் நடந்துள்ளதாக இங்குள்ள மக்கள் கூறுகின்றனர்.

உண்மையில் பாதிக்கப்பட்டவர்களைப் புறமொதுக்கித் தமது சுய இலபத்துக்காகச் சிலர் முறை கேடாகச் செயற்படுவது அநீதியானதாகும்.

உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் தலையிட்டுப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ வேண்டும் என்பதே மக்களின் வேண்டுகோளாக உள்ளது. (க-426)

# முதலாம் வகுப்புக்குப் பதில் இரண்டாம் வகுப்பு ஏமாற்றப்படும் வடபகுதி ரயில் பயணிகள்

நாவற்குழி, ஓக.5

ஓமந்தையிலிருந்து கொழும்பு வரையில் ஈடுபடும் ரயில் முதலாம் வகுப்புக்குரிய பெட்டிகள் பெரும்பாலும் இணைக்கப்படுவதில்லையெனப் பயணிகள் குறைகூறுகின்றனர். இரண்டாம் வகுப்புப் ரயில் பெட்டிகளில் முதலாம் வகுப்பு என எழுதிவிட்டு அதில் பயணிகளை ஏற்றுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. முதலாம் வகுப்புக்குரிய ரயில் ஆணைச் சீட்டுக்களைப் பெற்றுவிட்டு இரண்டாம் வகுப்புக்குரிய வசதிகளையே தாம் அனுபவிக்க வேண்டியுள்ளதாகவும் அரச உத்தியோகத்தர்களும், ஓய்வூதியர்களும் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை நாட்டின் ஏனைய பகுதிகளுக்கிடையேயான ரயில் சேவைகளில் முதலாம் வகுப்பு பெட்டிகளை இணைப்பதில் அக்கறை காட்டும் ரயில் திணைக்களம் வடபகுதிக்கு மட்டும் இவ்விதம் புறக்கணிப்பு செய்வது கவலை தருவதாகவும் இவர்கள் கூறுகின்றனர்.

ஓமந்தை-கொழும்பு ரயில் சேவையில் முன்னர் செயற்பட்ட சிற்றுண்டிகளை விநியோகிக்கும் நிறுவனம் தரமான சேவைகளை வழங்கியது. அண்மைக்காலமாக சேவையை வழங்கும் நிறுவனத்தின் சேவைத் தரம் குறைவாக உள்ளதாகவும் பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

(க-121)

# இராமநாதபுரத்தில் முன்பள்ளிக் கட்டடம்

வட்டக்கச்சி, ஓக. 5

கிளிநொச்சி இராமநாதபுரம் புதுக்காட்டுப் பகுதியில் எட்டு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட முன்பள்ளிக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முதலில் இந்தக் கட்டடம் அமைவதற்கு நிதியுதவி புரிந்த தென்பகுதியைச் சேர்ந்த அன்பர்களான ஸ்ரீபன் கெவின், ஜானக வடு, இரணைமடு விமானப் படைத் தளபதி ரூபசிங்க மற்றும் விருந்தினர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், அருட்சகோதரிமார் ஆகியோர் முன்பள்ளிச் சிறார்களின் வரவேற்பு நடனத்துடன் பிரதான வீதியிலிருந்து முன்பள்ளி வளாகத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

பின்னர் ஸ்ரீபன் கெவின் முன்பள்ளியின் பெயர்ப் பலகையைத் திரை நீக்கம் செய்து வைத்தார். பின்னர் நாடாவை வெட்டிக் கட்டடத்தைத் திறந்து வைத்ததுடன் மாணவர்களின் வரவைப் பதிவேட்டில் பதிந்து முன்பள்ளியை ஆரம்பித்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து முன்பள்ளிச் சிறார்களுக்குப் பரிசில்களும், கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. இந்த முன்பள்ளிக் கட்டடம் இரணைமடு விமானப் படையினரின் முழுமையான பங்களிப்புடன் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (க-450)

## சிறந்த கட்டமைப்பு...



ஆர்வத்துடன் விருந்தினர்கள்: திருமுறிகண்டி இந்துபுரம் அமெரிக்கன் இலங்கைமிசன் திருச்சபையின் கீழுள்ள புனித பவுல் முன்பள்ளியின் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகளின் போது முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட அதிபர் ஆ.சூசைநாதர் வன்னிப் பிராந்திய குருமுதல்வர் டி.எஸ். குகனேஸ்வரன் மற்றும் விருந்தினர்கள் அமர்ந்திருக்கின்றனர்.

# அதிபர் இல்லாத பாடசாலை

முல்லைத்தீவு, ஓக. 5

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் கரைதுறைப்பற்று கோட்டத்தில் அமைந்துள்ள வற்றாப்பளை மகாவித்தியாலயம் கடந்த ஐந்து மாதங்களுக்கும் மேலாக அதிபரின்றி இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடாசலையில் முன்னர் அதிபாராகக் கடமையாற்றியவர் கடமை நிறைவேற்றுப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பணிக்காக முல்லைத்தீவு கல்விப் பணிமனைக்குச் சென்றுள்ளார். இவர் சென்றது தொடக்கம் இன்று வரை பிரதி அதிபரே நிர்வாகப் பொறுப்புக்களை ஆற்றி வருகின்றார்.

இந்த நிலையில் வெளிவாரி மேற்பார்வைக் குழுவினர் பாடசாலைத் தரிசிப்புக்காக கடந்த மாதம் வலயக் கல்விப் பணிமனையிலிருந்து சென்றுள்ளனர். அப்போது இந்தப் பாடசாலை மாணவர்கள் அமைதியான முறையில் கதவடைப்புப் போராட்டமொன்றை நடத்தினர்.

அப்போது மேற்பார்வை அணியில் சென்றவர்களால் அடுத்த வாரமே புதிய அதிபர் நியமிக்கப்படுவாரென உறுதி மொழி வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் நேர்முகப் பரீட்சையும் நடத்தப்பட்டது.

ஆனால் பல வாரங்கள் சென்றுவிட்ட நிலையில் இன்னமும் அதிபர் நியமிக்கப்படவில்லை.

தேர்தல் திருவிழா முடிவடைந்த நிலையில் இனியாவது வழிபிறக்குமா எனப் பெற்றோர்களும் ஆசிரியர்களும், மாணவர்களும் காத்திருக்கின்றனர். (க-ரி)

# கிளிநொச்சியில் நகைகள் திருட்டு

கிளிநொச்சி, ஓக.5

கிளிநொச்சி பிரமந்தனாறு தருமபுரம் பகுதியில் பத்துப் பவுண் பெறுமதியான நகைகள் களவாடப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 30 ஆம் திகதி சனிக்கிழமை இரவு வீட்டில் உள்ளவர்கள் நித்திரைக்குச் சென்ற பின்னர் வீட்டுக்குள் புகுந்த திருடர்கள் நகைகளைத் திருடியுள்ளனர். நகை வைக்கப்பட்டிருந்த கைப்பை வீட்டு முற்றத்தில் வீசி எறிந்த நிலையில் காணப்பட்டது.

நகைகளைப் பறிகொடுத்தவர் பிரமந்தனாறு, தருமபுரத்தைச் சேர்ந்த முத்துராசா ஐயம்மா என்பவர் கிளிநொச்சியில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து முகாமி வாழ்ந்து கடந்த 2010 ஆம் ஆண்டு மே மாதம் மீள்குடியமர்ந்துள்ளார்.

இவர் தகரம், தரப்பாள் என்பனவற்றால் அமைக்கப்பட்ட கொட்டகையில் வாழ்ந்து வருகின்றார்.

திருட்டுச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-426)

# கிளிநொச்சி சமூக விஞ்ஞான போட்டி முடிவுகள்

கிளிநொச்சி, ஓக. 5

கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்ற சமூக விஞ்ஞானப் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

**501-1000 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்**

**தரம்-6**

முதலாமிடம்-ரு.கம்சியா-தருமபுரம் ம.வி,2ஆம் இடம்-சி.யானுசன்-பூநகரி ம.வி, 3ஆம் இடம்-தி.சங் கவி-பூநகரி ம.வி.

**தரம்-7**

முதலாமிடம்-வி.கிருஜா-புனித திரேசா பெண்கள் கல்லூரி, 2 ஆம் இடம்- சே.மயூரன்- வட்டக்கச்சி ம.வி, 3ஆம் இடம்-ஜெ.கஜனி - வட்டக்கச்சி ம.வி

**தரம்-8**

முதலாமிடம் -கே.திவாரகா-பளை மத்திய கல்லூரி, 2ஆம் இடம்-சி.டிலக்சிகா- கிளிநொச்சி இந்துக் கல்லூரி, 3ஆம் இடம்-சு.பிரமிலன்- வட்டக்கச்சி ம.வி

**தரம்-9**

முதலாமிடம்-ப.மிருனிஷா-புனிததிரேசா பெண்கள் கல்லூரி, 2ஆம் இடம்-ந.நதுர்சா-புனித திரேசா பெண்கள் கல்லூரி, 3ஆம் இடம்- பா.சிந்துஜன்-முழங்காவில் ம.வி

**தரம்-10**

முதலாமிடம்-சி.நிறோஜனா-முழங்காவில் ம.வி,2ஆம் இடம் - ஜே.நிதுஜா-புனித திரேசா பெண்கள் கல்லூரி, 3ஆம் இடம் - ல.மேகலா-தருமபுரம் ம.வி.

**தரம்-11**

முதலாமிடம்-ந.மிதுசா-முழங்காவில் ம.வி,2ஆம் இடம்-யோ.தர்சனன்-முழங்காவில் ம.வி, 3ஆம்இடம்-பெ.பிறின்சியா-புனித திரேசா பெண்கள் கல்லூரி

**தரம்-12,13**

முதலாமிடம்-ம.கேசவன்-கிளிநொச்சி இந்துக்கல்லூரி, 2ஆம் இடம்-சு.கபிலன் - வட்டக்கச்சி ம.வி, 3ஆம் இடம்-சி.கிப்சி பிறை டியா- தருமபுரம் ம.வி.

**1000இற்கு மேற்பட்ட மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகள்.**

**தரம்- 6**

முதலாமிடம்-ஸ்ரீ.கௌதமன் -கிளிநொச்சி ம.வி, 2ஆம் இடம்-[illegible]-கிளிநொச்சி ம.வி, 3 ஆம் இடம்- சி.கௌதமன்- கிளி நொச்சி ம.வி.

**தரம்- 7**

முதலாமிடம்- சி.பவித்திரன்- கிளிநொச்சி ம.வி, 2ஆம் இடம்- பு.அபிநயா-கிளிநொச்சி ம.வி, 3ஆம் இடம்-ம.கீர்த்திகா-கிளிநொச்சி ம.வி.

**தரம்- 8**

முதலாமிடம்-ஜெ.சத்தியதரண்யா -கிளிநொச்சி ம.வி, 2ஆம் இடம்- இ.ஆதித்தன்-கிளி நொச்சி ம.வி, 3ஆம் இடம் -த.டர்சி கன்-கிளிநொச்சி ம.வி.

**தரம்-9**

முதலாமிடம்-சு.ஜதுர்சன்-கிளிநொச்சி ம.வி, 2ஆம் இடம்-வி.சலயன் -கிளிநொச்சி ம.வி, 3ஆம் இடம் - க.பவித்திரா-கிளிநொச்சி ம.வி.

**தரம்- 10**

முதலாமிடம்-ந.சாம்பவி-கிளிநொச்சி ம.வி, 2ஆம் இடம்-சி.கௌத மன்-கிளிநொச்சி ம.வி, 3ஆம் இடம் -ந.கோபிகா- கிளிநொச்சி ம.வி.

**தரம்- 11**


முதலாமிடம்-வி.டினுசியன்-கிளிநொச்சி ம.வி, 2ஆம் இடம்-லோ.கவிந்தன்- கிளிநொச்சி ம.வி, 3ஆம் இடம்-ஜெ.கிசோபர்-கிளிநொச்சி ம.க.

**தரம்-12,13**

முதலாமிடம்- அ.குணசாந்தினி-கிளிநொச்சி ம.வி, 2ஆம் இடம்- சு.நித்திலா-கிளிநொச்சி ம.வி, 3ஆம் இடம்-நா.சுதன்-கிளிநொச்சி ம.க. (க-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னஞ்சலுக்கு வரும் Zip கோப்புக்களை ஒன்லைனிலேயே திறந்து பார்க்கலாம்



கூகுள் வழங்கும் இலவச மின்னஞ்சல் சேவை நிறுவனமான ஜிமெயில் வாசகர்களின் பயன்பாட்டிருக்கு ஏற்ப புதிய வசதிகளை அறிமுகப் படுத்திக் கொண்டே இருக்கின்றன.

எமக்கு யாராவது மின்னஞ்சலில் புகைப் படங்கள் (jpg, png, gif), ஆவணங்கள் (doc,xls,ppt) மற்றும் PDF கோப்புக்கள் அனுப்பினால் நாம் இந்தக் கோப்புகளை எம்முடைய கணினியில் தரவிறக்கம் செய்து பின்னர் open செய்து பார்க்க வேண்டிய அவசியம் இல்லை.

கூகுள் டாக்ஸ்(Google Docs) உதவியுடன் ஒன்லைனிலேயே பார்த்துக் கொள்ளும் வசதியை ஜிமெயில் எமக்கு வழங்கி உள்ளது. இதனால் எமக்குத் தரவிறக்கம் செய்யும் நேரம் குறைகிறது.

ஆனால் எமக்கு அனுப்பப்படும் கோப்புக்கள் கம்ப்ரெஸ்(.zip .rar) கோப்புக்களாக இருந்தால் எம்மால் ஒன்லைனில் அந்தக் கோப்புக்களைப் பார்க்க முடியாது. தரவிறக்கம் செய்துதான் பார்க்க முடியும்.

தற்பொழுது கூகுள் இந்த பிரச்சினையைத் தீர்க்க புதிய வசதியாக .Zip .Rar கோப்புக்களை இனித் தரவிறக்கம் செய்யாமலே ஒன்லைனிலேயே பார்த்து கொள்ளும் வசதியையும் வழங்கி உள்ளது.

இதன்படி உங்களுக்கு Rar, zip கோப்புக்களை யாராவது அனுப்பினால் அதை ஒன்லைனில் பார்க்க அந்தக் கோப்புக்கு அருகில் உள்ள View என்பதை க்ளிக் செய்தால் உங்களுக்கு அந்த Zip, rar கோப்புக்களில் உள்ள அனைத்துக் கோப்புக்களையும் காட்டும். அதில் உங்களுக்குத் தேவை யானதை open செய்து பார்த்துக் கொள்ளலாம்.

உங்களுக்கு அனுப்பிய .Zip, .Rar கோப்புக்களுக்கு உள்ளே இன்னொரு Zip(or)Rar கோப்புக்கள் இருந்தாலும் Actions என்பதை க்ளிக் செய்தால் இன்னொரு சிறிய விண்டோ வரும். அதில் View கொடுத்தால் அதனையும் பார்த்துக் கொள்ளலாம். இதுபோல எத்தனை Rar, Zip கோப்புக்கள் இருந்தாலும் அதனைத் தரவிறக்கம் செய்யாமலே பார்த்துக் கொள்ளலாம்.

# உங்கள் கணினியை தாக்கியுள்ள வைரஸை எளிதாகக் கண்டறியும் கூகுளின் புதிய சேவை




நாம் பயன்படுத்தும் கணினியில் நுழைந்து மால்வேர்களும், வைரஸ்களும் செய்யும் அட்டகாசம் அறிந்தவைகள்தான்.

எமக்குத் தெரியாமலே எமது கணினிக்குள் நுழைந்து எம்முடைய முக்கிய கோப்புக்களை அழித்து உச்சக்கட்டமாக எமது கணினியையே இவை முடக்கிவிடும். இதில் வேடிக்கையான விடயம் என்னவென்றால் எம்முடைய கணினி பாதிக்கபட்டிருக்கிறதா இல்லையா என்று கூட எம்மால் சுலபமாகக் கண்டறிய முடியாது.

சில வைரஸ்களை அழிப்பதற்கு ஆன்ட்டி வைரஸ் மென் பொருள்களும் தவறி விடுகின்றன. பெரும்பாலான வைரஸ்கள் இணையம் மூலமே எமது கணினியில் பரவுகிறது. இந்த நிலையில் மால்வேர்களால் பாதிக்கப்பட்ட கணினிகளைக் காட்டிக் கொடுக்க கூகுள் ஒரு புதிய வசதியை அதன் தளத்தில் புகுத்தியுள்ளது.

நீங்கள் கூகுள் தளத்துக்குச் செல்லும் பொழுது குறிப்பிட்ட சில மால்வேர்களால் உங்கள் கணினி தாக்கப்பட்டிருந்தால் கூகுள் ஒரு எச்சரிக்கையான செய்தியை அளிக்கும். இந்த குறிப்பிட்ட மால்வேர்களால் உலகில் சுமார் 2 மில்லியன் கணினிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இது போன்ற எச்சரிக்கையான செய்தி வந்தால் உங்கள் கணினி அந்த மால்வேரால் பாதிக்கப்பட்டுள்ளது என்று கருதலாம்.

அதைத் தீர்ப்பதற்கான வழிமுறையையும் கூகுள் அங்கேயே கொடுத்துள்ளது. Learn how to fix this என்ற லிங்கை க்ளிக் செய்தால் அந்த மால்வேரை நீக்குவதற்கான வழிமுறைகள் கொடுக்கப்பட்டிருக்கும்.

# கூகுள்+ பேஸ்புக்குக்கு போட்டியாக மைக்ரோசொப்டின் இணையம்

Leaked screenshot of Microsoft's Social Network




பேஸ்புக் மற்றும் கூகுள் வரிசையில் மைக்ரோசொப்டும் சமூக வலையமைப்பொன்றை உருவாக்கி வருவதாக ஆதாரங்கள் கசிந்துள்ளன.

இதற்கான ஆதாரமாக www.socl.com என்ற இணையத்தள முகவரி வெளியாகியுள்ளது.

இந்த முகவரியை மைக்ரொசொப்ட் அண்மையில் கொள்வனவு செய்ததாகத் தெரிவிக்கப் படுகின்றது. இது மைக்ரொசொப்டின் சமூக வலையமைப்பின் முன்வடிவம் எனவும் தவறுதலாக வெளியாகியிருக்கலாம் எனவும் இணையத்தளங்களில் தகவல் வெளியாகியுள்ளன.

மேலும் இந்தச் சமூக வலையமைப்பின் பெயர் டுலாலிப் ஆக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்கான காரணம் அந்தப்பக்கத்தில் "With Tulaip you can find what you need and share what you know easier than ever" எனக் குறிப்பிடப்பட்டுள்ளமையாகும்.

இதேவேளை இந்தப்பக்கம் அந்தத்தளத்திலிருந்து பின்னர் அகற்றப்பட்டுள்ளதுடன் வேறொரு பக்கம் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. அதில் ஒரு தகவலும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இது மைக்ரொசொப்டின் சமூக வலையமைப்பு என்பதை உறுதி செய்யும் பல ஆதாரங்கள் உள்ளதாக இணையத்தளங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அதாவது இதன் பெயர் டுளாலிப் என்பது அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் உள்ள ரெட்மொண்ட் நகரின் பூர்வீகப் பழங்குடியினரைக் குறிக்கும் பெயர் இங்கேயே மைக்ரொசொப்ட்டின் தலைமையகமும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மைக்ரோசொப்டின் தேடல் பொறியான bing நான்கு எழுத்துக்களைக் கொண்டதுடன் தற்போது அது socl.com தளமும் 4 எழுத்துக்களைக் கொண்டதாகும்.


சமூக வலையமைப்புகளுக்கிடையிலான போட்டியில் ஏற்கனவே ஜாம்பவானாக பேஸ்புக் உள்ள நிலையில் கூகுள் தனது கூகுள் + தளத்தை அண்மையில் அறிமுகப் படுத்தியது. இந்தநிலையில் மைக்ரோசொப்டின் இரகசிய முயற்சியும் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அறிமுகமாகியது மைக்ரோசொப்டின் (office) 365

அலுவலகத் தொகுப்புகளைப் பொறுத்தவரை மைக்ரோசாப்ட் எம்.எஸ். அலுவலகம் மூலம் தன் உறுதியான இடத்தைத் தொடர்ந்து தக்க வைத்து வருகிறது. இணையத்தில் கூகுள் தன் சாதனங்களை அளித்து இணையப் பயனாளர்களில் பெருமளவான மக்கள் தொகையைத் தன் பக்கத்தில் வைத்துள்ளது. இதனைப் பயன்படுத்திக் கூகுள் டாக்ஸ் (Google Docs) என்ற வசதியை இணையத்தில் தந்து ஆவணத் தொகுப்புப் பயன்பாட்டில் புதிய திசையையும் பயன்பாட்டு வழியையும் கூகுள் வழங்கி வருகிறது. மைக்ரோசாப்ட் பதிலுக்கு இணையம் இணைந்த அலுவலக மற்றும் ஏனைய வசதிகளை அளிக்கும் வகையில் அலுவலகம் 365 என்ற ஒரு இயக்கத்தை அண்மையில் அறிமுகப்படுத்தியது.

கிளவுட் கணினி இயக்க முறையில் அலுவலகம் 365, டெஸ்க்டொப் கணினி வசதிகளை மக்களுக்குக் கொண்டு வந்துள்ளது. சிறிய தொழில் நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களின் தகவல் தொழில்நுட்பத்திற்கான செலவினங்களை 50% அளவில் குறைக்கும் வகையில் மைக்ரொசாப்ட் நிறுவனம் இந்த அலுவலகம் 365 என்ற புதிய வசதியைத் தந்துள்ளது. இதன் மூலம் இணையம் வழியாக மைக்ரொசாப்ட் வழங்கும் நிறுவனத்திற்கு மட்டுமேயான தனியான மின்னஞ்சல் எக்சேஞ்ச் தொடர்பு வசதி, சேவர் பயன்பாடு ஆகியவை கிடைக்கின்றன. கோப்புக்கள், அழைப்புகள் சேர்ந்து விவாதம் செய்வது போன்ற நிர்வாக நடவடிக்கைகளை இதில் மேற்கொள்ளலாம். நிறுவனம் ஒன்றின் வேலையை அதில் பணியாற்றுபவர் உலகின் எந்த மூலையிலிருந்தும் செயற்படுத்தலாம். இதனால் இவற்றை நிறுவ ஒரு நிறுவனம் செலவழிக்கும் மூலதனச் செலவு குறைகிறது. ஒரு பயனாளர் மாதம் ஒன்றுக்கு இரண்டு டொலர் கட்டணம் செலுத்தி இந்த வசதியைப் பெறலாம். கூடுதல் வசதிகளுக்கேற்ப கட்டணம் அதிகரிக்கும்.

ஏற்கனவே சோதனை அடிப்படையில் 12,000 நிறுவனங்கள் இதனைக் கடந்த 45 நாள்களாகப் பயன்படுத்தி வந்துள்ளனர். உலக அளவில் இரண்டு லட்சம் பேர் பதிந்து பயன்படுத்துகின்றனர். இந்த வசதி 40 நாடுகளில் 20 மொழிகளில் ஏற்கனவே கிடைக்கிறது. அலுவலகம் 365 மற்றும் கூகுள் டாக்ஸ் இரண்டுமே இணையத்தில் மட்டுமே கிடைக்கும் கணினிச் சாதனங்களாகும். கூகுள் டாக்ஸ் இணையத்திலேயே முழுமையாக இயங்குகிறது. அலுவலகம் 365 இயக்க உங்கள் கணினியில் எம்.எஸ். ஆபீஸ் (அலுவல கம் 2010 உகந்தது) இருந்தால் நல்லது. இல்லாமலும் இயக்கலாம். இணைய வழி தயாரித்த கோப்புக்களை கணினியில் ஒப்லைனில் இயக்கிப் பார்க்க எம்.எஸ்.அலுவலகத் தொகுப்பு கணினியில் இருப்பது அவசியம். அலுவலகம் 365இல் இணைபவர்கள் நிச்சயம் இதனை உணர்ந்து அலுவலகத் தொகுப்பு ஒன்றைத் தங்கள் கணினியில் வைத்துக் கொள்வார்கள். அலுவலகம் 365 இற்கான உரிமக் கட்டணத் திலேயே எம்.எஸ். அலுவலகத் தொகுப்பினையும் இயக்கலாம். நிறுவனங்களுக்காக மைக்ரோசொப்ட் எக் சேஞ்ச் மற்றும் ஷேர் பொய்ண்ட் ஆகியவற்றை இயக்கி அதனை நிர்வகிப்பதில் சிக்கல்களை எதிர்கொண்டு வருபவர்கள் கவலையை விடுத்து அலுவலகம் 365 இயக்கத்தில் இணையலாம். எந்தக் கவலையும் இன்றி எக்சேஞ்ச், ஷேர் பொய்ண்ட் மற்றும் ஓர் அலுவலகத்துக்குத் தேவையான அனைத்து வசதி களும் கிடைக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பந்த அடிப்படை ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரிக்கை

நாவிதன்வெளி, ஓக. 5

கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கவேண்டும் என கிழக்கு மாகாண ஒப்பந்த ஆங்கில ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

மணித்தியாலத்துக்கு 125 ரூபா வீதம் இரண்டு மணித்தியாலங்களுக்கு மட்டும் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. எனினும் முழுநேரமும் பாடசாலையில் கற்பிக்கின்றோம் என்றும் இந்த ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

2005,2006 ஆம் ஆண்டுகளில் காலங்களில் தங்களைப் போல் சேவை புரிந் தவர்களில் 180 நாள்கள் சேவை புரிந்தவர்கள் நிரந்தர ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டுள்ளனர். ஆனால், 6 வருடங்களாக சேவை புரிந்துவரும் தங்களை ஏன் ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்க்காமல் இருக்கின்றனர் என்றும் அவர்கள் அங்கலாய்க்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் ஆங்கில ஆசிரியர்களின் தேவை இருப்பதனாலேயே தங்களின் நியமனம் வருடாவருடம் புதுப்பிக் கப்படுகிறது. இந்தநிலையில் நிரந்தர நியமனம் வழங்குவதில் எவரும் அக்கறை செலுத்துவதில்லை. இதனால் கவலையடைகின்றோம் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

சகல திணைக்களங்களிலும் தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்களை அரசு நிரந்தர சேவைக்குள் உள்ளீர்க்கிறது. ஆனால், ஆசிரியர்களான எமக்கு ஏன் இந்தப் புறக்கணிப்பு என்றும் அவர்கள் வினவுகிறார்கள்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள், பலம் படைத்த அரசியல்வாதிகள் ஆகியோர் விரைவில் நிரந்தர ஆசிரியர் சேவைக்குள் இவர்களை உள்ளீர்க்க ஆவன செய்யவேண்டும் என கிழக்கு மாகாண ஒப்பந்த ஆங்கில ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

# அரச கல்விசார் உத்தியோகத்தர்களுக்கான விளையாட்டுப் போட்டி நுவரெலியாவில்

கொழும்பு, ஓக.5

கல்வி அமைச்சினால் நடத்தப்படும் ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி நிர்வாக அலுவலர்களுக்கான விளையாட்டுப் போட்டி நுவரெலியா மக்கள் விளையாட்டரங்கில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ளது.

சகல போட்டிகளும் வயது ரீதியாக 25 - 30, 30 - 35, 35 - 40, 40 - 45, 45 - 50, 50 வயதுக்கு மேல் என்ற அடிப்படையில் நடைபெறும்.

இந்தப்போட்டிகளில் பங்குகொள்ளும் ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி நிர்வாக அலுவலர்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன் கல்விப் பணிப்பாளர், உடற்கல்வி விளையாட்டுப் பிரிவு, கல்வி அமைச்சு, இசுறுபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

தடகளப் போட்டியில் 100 மீற்றர், 200 மீற்றர், 400 மீற்றர், 1500 மீற்றர் போட்டிகளில் 25 - 30 வயதுப் பிரிவினர் மட்டுமே பங்குகொள்ள முடியும்.

அஞ்சலோட்டம், உயரம் பாய்தல், நீளம் பாய்தல், முப்பாய்ச்சல், ஈட்டி எறிதல், குண்டெறிதல், தட்டெறிதல் ஆகிய போட்டிகளும் இடம்பெறும்.

பெரு விளையாட்டுக்களாக வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், துடுப்பாட்டம் ஆகிய போட்டிகளும் இடம்பெறும். கடந்த வருடம் இப்போட்டிகள் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கட்டடப் பொருள்கள் விநியோகம்

வெல்லாவெளி, ஓக.5

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிழக்கு மாகாண இராணுவத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் வீடுகளை நிர்மாணிப்பதற்கான கட்டடப்பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்த மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 25 லட்சம் ரூபா பெறுமதியான கட்டடப்பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன. இதில் 89 பயனாளிகளுக்கு கொடுப்பனவுப் பத்திரங்களும் கட்டடப் பொருள்களும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விருப்பு வாக்குகளை மீண்டும் எண்ணுமாறு கோரி மனு

நுவரெலியா, ஓக. 5

அண்மையில் நடந்துமுடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் ருவன்வெல்ல பிரதேச சபைக்கான வாக்குகளில் விருப்பு வாக்குகளை மீண்டும் எண்ணுமாறு உத்தரவிடவேண்டும் எனக் கோரி மனுவொன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு தெரிவு செய்யப்படாத ஐந்து வேட்பாளர்கள் நேற்று முன்தினம் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனுவில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மகிந்த தேசப்பிரிய, கேகாலை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர், சட்டமா அதிபர் உட்பட ஒன்பது பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அளிக்கப்பட்ட வாக்குகளில் விருப்பு வாக்குகளை தெரிவு செய்தபோது பல்வேறு மோசடிகள் நடந்ததாகவும் அவற்றை கடமையில் இருந்த அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டி வாக்குகளை மீண்டும் எண்ணவேண்டும் என்று தாங்கள் விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது எனவும் மனுதாரர்கள் தமது மனுவில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அதன் அடிப்படையில் விருப்பு வாக்குகளை மீண்டும் எண்ணுமாறு தேர்தல் ஆணையாளருக்கு நீதிமன்றம் உத்தரவிட வேண்டுமென மனுதாரர்கள் கோரியுள்ளனர். (ச-5)

## மட்டக்களப்பில் காகங்கள் திடீர் இறப்பு விசாரிக்கக் குழு



மட்டக்களப்பு,ஓக.5

மட்டக்களப்பு, கோயில் போரதீவு கிராமத்தில் நேற்று முன்தினம் முதல் நூற்றுக்கும் மேற்பட்ட காகங்கள் இறந்து காணப்படுகின்றன.

இது தொடர்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எஸ்.சதுர்முகத்திடம் வினாவிய போது, இந்தக் காகங்களின் இறப்புக்கான காரணத்தைக் கண்டறிவதற்காக பொது சுகாதார பரிசோதகர்கள் அடங்கிய குழுவொன்றை அந்த இடத்துக்கு அனுப்பிவைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, களுவாஞ்சிக்குடி பொலிஸ் குழுவொன்றும் விசாரணைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி தென்னக்கோன் தெரிவித்துள்ளார். (ச)

## கண்டி மாவட்ட வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு

கண்டி, ஓக.5

கண்டி மாவட்டத்தில் இயங்கும் பெரும்பாலான கிராமிய வைத்தியசாலைகளில் மருந்துத் தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இந்தக் கிராமிய வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைக்கு வருகின்ற நோயாளிகள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், நரம்பு சம்பந்தமான நோயாளிகளே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

இது மாத்திரமன்றி இந்த வைத்தியசாலைகளில் நிலவும் உபகரணத் தட்டுப்பாடுகள் காரணமாக சிறுநீர் மற்றும் இரத்தப் பரிசோதனைகளை மேற்கொள்வதிலும் பெரும் சிரமம் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### உரிமையைக் கோரி...




தாதியர் சேவையில் கலைத்துறை மற்றும் வர்த்தகத்துறையில் சேர்ந்தவர்களையும் இணைத்துக்கொள்ளும் அரசின் திட்டத்துக்கு எதிராக தாதியர்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## எசல பெரஹரவுக்கு விசேட போக்குவரத்துச் சேவைகள்

கண்டி, ஓக 5

கண்டி எசல பெஹரவைக் கண்டுகளிப்பதற்காக நாடெங்குமிருந்து கண்டிக்கு வரும் லட்சக்கணக்கான மக்களின் வசதிக்காக நேற்று முதல் விசேட போக்குவரத்துச் சேவைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்கமைய கண்டி இலங்கை போக்குவரத்து சபையும் மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையும் விசேட பஸ்சேவைகளை ஆரம்பித்துள்ளன. அவ்வாறே ரயில்வே திணைக்களம் மேலதிக ரயில்களை சேவையில் ஈடுபடுத்தியுள்ளது.

முதன்முறையாக யாழ்ப்பாணத்துக்கும் மட்டக்களப்புக்கும் விசேட பஸ்சேவையொன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக மத்திய மாகாண இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிரதேச முகாமையாளர் மஹிந்த பஸ்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முதல் பெரஹரவின் இறுதி நாளான எதிர்வரும் 14 ஆம் திகதி வரை சுமார் 500 இலங்கைப் போக்குவரத்து சபை பஸ்கள் குறுகிய தூர சேவையிலும் நீண்டதூர சேவையிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என அவர மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

# பொருள்களைக் கூடுதல் விலையில் விற்பனை செய்தவர்கள் மீது வழக்கு

நுவரெலியா,ஓக.5

நுவரெலியா மாவட்டத்தில் கூடுதல் விலையில் சிமெந்து விற்பனை செய்த மற்றும் விலையை காட்சிப்படுத்தாத ஏழு வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

வலப்பனை மற்றும் ஹங்குராங்கெத்த ஆகிய பிரதேசங்களில் இது தொடர்பான திடீர் சோதனைகள் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டதாக மாவட்ட செயலாளர் டீ. பீ. ஜீ. குமாரசிறி தெரிவித்துள்ளார்.

கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சரின் பணிப்புரைக்கு அமைய நுகர்வோர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி திடீர் சோதனைகளை மேற்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

சிமெந்து தட்டுப்பாடு என்று போலியாகக் கூறி அதனை கூடுதல் விலைக்கு விற்பனை செய்ய வர்த்தகர்கள் முற்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு மூடை சிமெந்து 750 ரூபாவை விட அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக நுகர்வோர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?


**மேடம்:**
இன்று திட்டமிட்ட வேலைகளைச் செய்ய முடியாமல் போனாலும், நாளைய வேலைகளை முன்னரே முடித்து வைப்பீர்கள். நண்பர்கள் சிலர், உங்கள் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள நினைப்பர். பெண்கள் விரும்பிய ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். தேக ஆரோக்கிய விடயங்களுக்காக, கணிசமான பணத்தைச் செலவு செய்வீர்கள்.


**இடபம்:**
கடந்த கால அனுபவம் ஒன்றை நினைத்துப் பார்த்து, புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். வேண்டிய சிலரே முக்கியமான ஒரு விடயங்களில் விரோதமாகச் செயற்படுவது கண்டு, எரிச்சல் அடையலாம். தொழில் ரீதியாக வர வேண்டிய மிகுதிகள் வந்து சேரலாம். சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்கு பயணம் மேற்கொள்ளலாம். வயிறு உபாதை நேரும்.


**மிதுனம்:**
தொலைபேசி வழிச் செய்திகள் தொல்லை தருவதாக அமையலாம். நண்பர்கள் உங்களிடம் வாங்கிய பணத்தைக் கொடுக்காமல் இழுத்தடிக்கலாம். தொழில் விடயங்களில், அதிக எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். அரசியல்வாதிகள் வீண் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். சக ஊழியர்கள் விடுமுறையால் வேலைப்பளு கூடும்.


**கடகம்:**
செலவுகளைக் குறைத்து, சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள். பம்பரமாகச் சுழன்று பணியாற்ற நினைப்பீர்கள். நண்பர்கள் வட்டம் விரிவடையும். வெளியூர்களில் இருந்து வரும் நபர்கள், முக்கியமான தகவல்களைக் கொண்டு வருவர். அதிக விலை கொடுத்து வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்கலாம். ஊக்கம், உற்சாகம் கூடும்.


**சிங்கம்:**
கைவிட்டுப் போனதாக நினைத்த பொருள் ஒன்று, மீண்டும் கைக்குக் கிடைக்கலாம். பிள்ளைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். தொழிலை விரிவுபடுத்தும் விடயங்களில் நாட்டம் செல்லும். திடீர் பணவரவுகளைப் பெறலாம். அயலாருக்காக சில காரியங்களை செய்து கொடுப்பீர்கள். வீண் பிடிவாதம் செய்வீர்கள்.


**கன்னி:**
நண்பர்களுக்காக சில காரியங்களைச் செய்து கொடுப்பீர்கள். பெரிய மனிதர்களின் நட்பு கிடைக்கலாம். சந்தோஷமான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். சிலர் உங்களுக்கு நல்ல புத்திமதிகள் சொல்லலாம். சில விடயங்களில் முன்யோசனையுடன் செயற்பட்டு ஆதாயம் பெறுவீர்கள். சுபகாரிய விடயங்களில் தாமதம் ஏற்படலாம்.


**துலாம்:**
மன உறுதியுடன் செயற்படும் நாள். விலகிச் சென்ற உறவுகள் விரும்பி வந்து சேரலாம். திட்டமிட்ட வெளியூர் பயணங்களை மாற்றி அமைக்கலாம். கடிதங்கள் மூலம், சில முக்கியமான செய்திகள் வந்து சேரலாம். சிலர் உங்கள் மூலம் வேலைகளை முடிக்க முற்படுவர். மற்றவர்களுக்காக பிணை கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். மருத்துவச் செலவு ஏற்படும்.


**விருச்சிகம்:**
தொழில் ரீதியாக தடைப்பட்ட காரியங்கள், இனிதே நடந்தேறும் நாள். வழக்கத்திற்கு மாறாக, அதிக நேரம் பணியாற்ற நேரிடலாம். பிள்ளைகள் மீதான கோபம் குறைந்து பாசம் அதிகரிக்கும். நண்பர்கள் வழியில் முக்கியமான செய்தி ஒன்றை கேட்கலாம். கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரலாம். அலைச்சல் குறையும் நாள்.


**தனுசு:**
மனக்குழப்பங்களைத் தவிர்க்க சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள். பொருளாதார நிலைமை மேம்படும். வீட்டுத் தேவைகளை நிறைவேற்ற கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவர் உங்களைத் தொடர்பு கொண்டு முக்கிய விடயமாகப் பேசலாம். தொழில் ரீதியாக சிலரின் சந்திப்பு நிகழும்.


**மகரம்:**
தன்னம்பிக்கை, தைரியத்துடன் செயற்படும் நாள். தாயார் உடல் நலன் தொடர்பான விடயங்களில், அக்கறை அவசியம். என்றோ வரும் என நினைத்த பணவரவு ஒன்று, இன்று திடீரென கைக்குக் கிடைக்கலாம். நீங்கள் செல்லும் இடத்தில், உங்களுக்குப் பிடிக்காத ஒருவரைச் சந்திக்கலாம். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக மற்றவர்களிடம் உதவி கேட்கலாம்.


**கும்பம்:**
தொழில் நிமித்தம் சில பணிகளை முடிக்க வேண்டிய நெருக்கடிகளுக்கு ஆளாகலாம். குடும்ப உறுப்பினர்கள் உங்களிடம் கோபம், வேகத்தை காட்ட நேரிடலாம். பிள்ளைகள் பெற்றோரின், ஆசிரியரின் கண்டிப்புக்கு ஆளாகலாம். சகோதரர் தொடர்பான விடயங்களில் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. தண்டச் செலவுகள் நேரும்.


**மீனம்:**
குடும்பத்தினருடன் மகிழ்ச்சி, சந்தோஷமாக பொழுதைக் கழிக்கலாம். காலையில் கைவிட்ட வேலை ஒன்றை, மாலையில் முடிவுக்கு கொண்டு வருவீர்கள். வியாபாரிகள் புதிய முதலீடுகள் பற்றிய ஆலோசனைகளில் ஈடுபடலாம். புத்திசாலித்தனமாக செயற்பாடுகளால், பாராட்டு பெறுவீர்கள். வெளியிடங்கள் செல்லும் போது முக்கிய நபர் ஒருவரைப் பார்க்கலாம்.

# மீண்டும் பிளவுண்

"இலங்கையில் தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையே இனம்புரியாததும், இட்டு நிரப்பப்பட முடியாததுமான அதலபாதாள வேறுபாடு இருக்கிறது. இதனை மேலெழுந்த வாரியாக அணுகுவதன் மூலமோ, அல்லது பொருளாதார அபிவிருத்திகளினாலோ இட்டு நிரப்பிவிட முடியாது'' என்று கொழும்புக்கான இந்தியாவின் முன்னாள் உயர்தூதரும் பின்னர் வெளிவிவகாரச் செயலாளராகவும் பாதுகாப்பு ஆலோசகராகவும் இருந்த ஜே.என்.டிக்ஸிற் தனது 'அசைன்மன்ட் கொழும்பு' என்ற நூலில் எழுதியுள்ளார்.

**இலங்கையின் பிளவு ஆழமானது**

இலங்கையைப் போரின் மூலம் மீண்டும் ஐக்கியப் படுத்திவிட்டதாக ராஜபக்ஷாக்கள் கூறிவருகிறார்கள். உண்மையில் யுத்தத்தின் மூலம் இலங்கை மீண்டும் ஒரு தடவை மேலும் ஆழமாகப் பிளவுபட்டுவிட்டது.

ஜே.என்.டிக்ஸிற் கூறிய காலத்தில் இருந்த அதலபாதாள வேறுபாட்டை விடவும், இப்போது ஏற்பட்டிருக்கும் பிளவு மேலும் உறுதியானதும் ஆழமானதும், கற்பனைக்கு எட்டாததுமாகும்.

இலங்கை அரசினால் நீண்டகாலமாக நடத்தப்பட்ட போரினால் ஏற்பட்ட இந்த வடுவை மாற்ற பூமியில் மருந்தில்லை. இந்த இரத்தத்தைக் கழுவ, ஆயிரம் ஆண்டுகால மகாவலி கங்கை நீராலும் முடியாது.

ஈழத் தமிழரிடம் தேர்தலைப் புறக்கணித்துப் பழகிவிட்ட மனோநிலை இருக்கிறது. அவர்கள் இலங்கை அரசின் மீதோ, அந்த அரசின் தேர்தல் மீதோ நம்பிக்கை கொண்டிருக்கவில்லை என்பது தெளிவு. ஆனால் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது அரசு மீதான தமது வெறுப்பை தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு அளித்த வாக்குகளின் மூலம் வெளிப்படுத்தி உள்ளார்கள்.

தமிழரும் சிங்களவரும் இரு துருவங்கள்தான் என்பதை தமது வாக்குகளால் சுவர் எழுப்பி இரு இன மக்களுமே காட்டியுள்ளார்கள். இலங்கை மீண்டும் ஒருதடவை பிளவுபட்டு விட்டதை இந்தத் தேர்தல் உலகின் கண்களுக்கு காட்டியுள்ளது.

அதாவது உலகம் பார்க்க விரும்பிய கண்ணால் தமிழ், சிங்களப் பிளவு உலகுக்குக் காட்டப்பட்டுள்ளது. இந்த உள்ளூராட்சிச் சபைகள் எந்தவித அதிகாரமும் அற்றவை என்பது மக்களுக்கும் தெரியும். ஆனால் அரசுக்கு எதிரான தமது எதிர்ப்பை உலகுக்கு காட்ட தமது வாக்குகளை தமிழர்கள் இந்தத் தேர்தலில் பயன்படுத்திக் கொண்டார்கள்.

**தமிழரின் முடிவு உலகை உலுக்கும்**

தமிழ் மக்களின் ஜனநாயக பூர்வமான இந்த தீர்ப்புக்கு உலகின் செவிகளும், கண்களும், மனமும், உள்ளமும் ஒன்றாய்ப் பணியுமென நம்பலாம்.


எவ்வித அதிகாரமும் அற்ற இந்த உள்ளூராட்சித் தேர்தல்களை தனக்கு வசதியாகப் பயன்படுத்தித் தமிழ் மக்கள் தம்மையும், தமது செயல்களையும் ஆதரிப்பதாக உலகுக்குக் காட்டி தமிழ் மக்களை ஒடுக்குவதற்கான ஓர் உபாயத்தை அரசு திட்டமிட்டது.

இந்தத் தேர்தல் மூலம் தமிழன் கையாலேயே அவன் கண்களைக் குத்த வைத்துவிடலாமென அரசு எண்ணியது. ஆனால் அது அரசுக்குத்தான் பூமராங் காய்ப் (Boomerang) போனது. இந்தத் தேர்தல் அரசுக்கும், உலகுக்கும் ஒரு செய்தியைச் சொல்லியிருக்கும் அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இன்னொரு செய்தியை அது சொல்லியிருக்கிறது.

**தேசியப் பற்றுறுதி கெட்டியானது**

அதாவது தமிழ்த் தேசியத்தின் மீதான தமது பற்றுறுதி மிகவும் கெட்டியானது என்பதையும், பாரதீனப்படுத்திட முடியாத இலட்சியத்தைத் தமிழர்கள் கொண்டுள்ளார்கள் என்பதையும் இந்தத் தேர்தல் மூலம் வடக்குக் கிழக்குத் தமிழர்கள் தெளிவாகக் கூறியுள்ளார்கள்.

அரசு தன் முழுப்பலத்தையும், கவனத்தையும் இந்தத் தேர்தல் மீது திருப்பியிருந்தது. உடுபுடைவைகளாலும், அரிசி, பருப்பு, சீனி என்பனவற்றாலும் தமது பலப்பிரயோகங்களினாலும், தமிழ் மக்களை மனம் மாற்றிடலாமென அரசு நம்பியது. அரச படைகளின் அச்சுறுத்தல்களைப் பெற்றுக் கொண்டது போலவே அரசு கொடுத்த அரிசி, மா, சீனிகளையும் மக்கள் பெற் றுக்கொண்டார்கள். அவ்வளவே!



ஆனால் தமது வாக்கை தம் உறுதி தவறாத இலட்சியத்தின் மீது பொன் முத்திரைகளாகப் பொறித்தார்கள். டாக்டர் என்.எம்.பெரேரா தமிழ் மக்களைப் பற்றிக் கூறிய ஒரு கருத்து வரலாற்றின் பொன் எழுத்துக்கள். ''சிங்களத் தலைவர்கள் கூட்டம் போடும்போது தமிழ் மக்கள் பெரும் திரளாய்க் கூடுவார்கள், அழகாக மேடை அமைப்பார்கள், மாலை போடுவார்கள், பேசும் போது கையும் தட்டுவார்கள், கூட்டத்துக்கு முன்னும், பின்னும் விருந்து வைப்பார்கள். ஆனால் தேர்தல் என்று வந்தால் அமைதியாக செல்வநாயகம் தலைமை யிலான சமஷ்டிக் கட்சிக்கு (தமிழரசுக் கட்சி) வாக் களிப்பார்கள்'' என்று என்.எம்.பெரேரா கூறிய வார்த் தைகளை கடந்த உள்ளூராட்சித் தேர்தல் மூலம் தமிழ் மக்கள் மீண்டும் தூசு துடைத்துத் துலக்கியுள்ளார்கள்.

என்.எம்.பெரேராவின் மதிப்பீட்டுக்கும், அவரது தீர்க்கதரிசனத்துக்கும் நன்றி. சுதந்திர தமிழ் அரசில் ''தமிழ் மக்கள் பண்டாரநாயக்காவுக்குத்தான் முதலில் சிலை எழுப்புவார்கள்'' என்று 1956 ஆம் ஆண்டு என்.எம்.பெரேரா கூறிய தீர்க்கதரிசனத்தை நிதர்சனமாக்க வரலாறு காத்திருக்கிறது.

''இனப்பிரச்சினைக்கு என்ன தீர்வைக் காணப் போகிறீர்கள்?'' என்று அன்று பாதுகாப்பு அமைச்சராக இருந்த லலித் அத்துலத்முதலியிடம் அவரது ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக சகாவான ஆங்கில நண்பன் டேவிட் சல்போன் 1984 ஆம் ஆண்டு வினவினார். அதற்கு லலித் அத்துலத்முதலி அளித்த பதில் அவரைத் திகைக்க வைத்தது. அதாவது ''தமிழர்களின் தலைகளை நொருக்கு வதுதான் தீர்வு'' என்றார்.



இந்தப் பதிலைக் கேட்டு தான் லலித் அத்துலத்முதலி மீது அருவருப்படைந்ததாக டேவிட் சல்போன் ஒரு கட்டுரையில் கூறியுள்ளார். லலித் அத்துலத்முதலி கூறிய இந்த அருவருக்கத் தகுந்த பதிலை முள்ளிவாய்க்காலில் அரங்கேற்றிவிட்டு தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்ட அரசுக்கு மக்கள் தமது புள்ளடிகளினால் பதில் அடி அளித்துள்ளார்கள்.

**தோல்வியடைந்த ''அபிவிருத்தி''**

அவர்கள் தம் சகோதரர்களின் இரத்த

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ம் ஒருதடவை
# ண்ட இலங்கை



தனிச் சிங்களச் சட்டத்தை தன் தந்தை பண்டார நாயக்கா நிறைவேற்றியதால்தான் இலங்கைக்கு பிற்காலத்தில் கேடு விளைவித்தது என்பதை முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா அண்மையில் வெளிப்படையாக ஊடகங்களிடம் தெரிவித்தார். அப்படி பண்டாரநாயக்கா ஆரம்பித்த தவறுகளின் உச்சக்கட்டம்தான் 'சிறிலங்காவின் கொலைக்களம்'.

**மன்னிப்பும் கேள்வியும்**

சனல்-4 தொலைக்காட்சி தயாரித்த 'சிறிலங்காவின் கொலைக்களம்' ஆவணப் படம் ஊடாக உலகம் முழுவதும் இன்று தமிழினப் படுகொலையைக் கண்கொண்டு பார்க்கிறது. இந்த ஆவணப் படத்தைக் கண்டு லண்டனில் உள்ள தனது மகன் விமுத்தி ''தன்னை ஒரு சிங்களவன் என்று அழைக்க தனக்கு வெட்கமாய் இருப்பதாக தொலைபேசி வாயிலாக அழுத குரலுடன் கூறியதை என் வாழ்நாளில் ஒருபோதும் மறக்க முடியாது'' என்று சந்திரிக்கா குறிப்பிட்டுள்ளார்.

குறைந்தபட்சம் வெட்கமாவது வருகிறதே, மனிதக் குணம் கொஞ்சம் தெரிகிறதே என்ற ஒரு சின்னத் திருப்தி அந்தக் கூற்றைக் கேட்கும் போது ஏற்படுகிறது. தன் மகன் வெட்கப்படுவதாகக் கூறிய சந்திரிக்கா தனது செம்மணிப் புதைகுழிகளுக்காக எப்போது வெட்கப்படப் போகின்றார்? என்ற கேள்வி கூடவே எழுவதையும் தவிர்க்க முடியவில்லை.

சந்திரிகாவும், அவரது மாமன் ரத்வத்தையும், மரணப்படுக்கையிலாவது வெட்கப்பட்டால் மனிதர்களை தகனம் செய்யும் மயானத்தில் இவர்களையும் தகனம் செய்யக் கூடிய தகுதியை இவர்கள் அடையமுடியும். தன் தந்தைக்காக மகள் பாவமன்னிப்புக் கோருவதற்கு நன்றி. ஆனால் இந்தப் பாவமன்னிப்புப் பத்திரம் தமிழீழ கடித தலைப்பில்தான் எழுதப்படமுடியும்.

**4 வரலாற்று நிகழ்வுகள்**

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்குப் பின்பு முக்கிய நான்கு வரலாற்றுச் சம்பவங்கள் நிறைவேறியுள்ளன. முதலாவது ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயல ரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு வெளி யிட்ட அறிக்கை, இரண்டாவது, சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்ட

## வன்னியூரான்

'சிறிலங்காவின் கொலைக்களம்' என்ற ஆவணப்படம், மூன்றாவது இலங்கை அரக்கு எதிராக தமிழக சட்டசபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட போர்க்குற்றம் பற்றிய தீர்மானம், நான்காவது நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அரசுக்கு எதிராக சீற்றத்தை மக்கள் தம் வாக்குகளால் வெளிக்காட்டியமை.

அதேவேளை இந்தக் காலகட்டத்தில் புலம்பெயர் ஈழத்தமிழர்கள் ஜனநாயக ரீதியில் நாடு கடந்த தமிழீழ அரசு ஒன்றை நிறுவிக் காட்டியுள்ளமையும் முக்கியமான ஓர் அம்சம். உலகத் தமிழர்களே ஒன்று படுங்கள். ''உன்னை நீ கைவிட்டுவிட்டால் உன்னைக் கடவுளாலும் காப்பாற்ற முடியாது'' என்பதற்கேற்ப எம்மை நாம் கைவிடாது இருப்போமாக.

> **முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்குப் பின்பு முக்கிய நான்கு வரலாற்றுச் சம்பவங்கள் நிறைவேறியுள்ளன. முதலாவது ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு வெளியிட்ட அறிக்கை, இரண்டாவது, சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட சிறிலங்காவின் கொலைக்களம் என்ற ஆவணப்படம், மூன்றாவது இலங்கை அரக்கு எதிராக தமிழக சட்டசபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட போர்க்குற்றம் பற்றிய தீர்மானம், நான்காவது நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அரசுக்கு எதிராகச் சீற்றத்தை மக்கள் தம் வாக்குகளால் வெளிக்காட்டியமை.**

ஆற்றை மனதில் நிறுத்தியே இரத்தப் புள்ளடிகளை இட்டுள்ளார்கள். இந்தப் புள்ளடிகளை மையால் இட்டதாக நினைக்கக் கூடாது. மக்களின் இதயங்களில் வழிந்தோடும் அவர்களது புதல்வர்களினதும் சகோதரர்களினதும் பச்சிளம் பாலகரினதும் இரத்தத்தால் இப் புள்ளடிகளைப் போட்டுள்ளார்கள் என்பதனால் அது பொன்னை விடவும், பூமியை விடவும் பெரியது.

''அபிவிருத்தி அரசியல்'' என்ற அரசின் சூத்திரத்தை மக்கள் செல்லாக் காசாக்கி உள்ளனர். அரசு கூறும் அபிவிருத்திக்குப் பின்னால் ஓர் இன அழிப்பு அரசியல் இருந்தது. எல்லாவித செயல்களுக்கும் பின்னால் ஓர் அரசியல் உண்டு.

இன்று இலங்கை அரசின் ''அபிவிருத்தி'' என்ற மூல மந்திரத்துக்குப் பின்னால் இன அழிப்பு என்னும் ஒரு பெரும் பிரளயம் காத்திருந்தது. மக்கள் தம் வாக்குக்களால் அப்பிரளயத்தின் கண்கள் மீது அம்பு எய்துள்ளார்கள்.

## சட்டமும் மனிதநேயமும்



மனித சேவைக்காக உரு வாக்கப்பட்டதுதான் சட்டம். அது எப்போதும் மனதில் இருக்க வேண்டும். மறந்து விடக்கூடாது.

மனித நேயத்தை மறந்து விட்டு சட்டப்படி எல்லாம் நடக்கவேண்டும் என்று சில பேர் மிகவும் கண்டிப்பாக இருப்பார்கள்.

அவர்களின் காதுகளில் விழவேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சம் பவத்தைக் கூறுகிறேன்.

ஆபிரகாம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த சமயத்தில் நடந்த நிகழ்ச்சி இது,

வில்லியம் ஸ்காட் என்ற ஓர் இராணுவவீரன் இருந்தான். கடமை தவறாதவன். ஒரு நாள் அவனுடைய நண்பன் ஒருவனுக்குக் காய்ச்சல். அவன் அன்றைக்கு காவல்காக்க வேண்டிய முறை. அவனுக்காக இரக்கப்பட்டு 'ஸ்காட்' பதில் காவலுக்குத்தானே காவல் காக்கிறேன் என்று கூறிக் கடமையில் ஈடுபட்டான்.

மறுநாள் காலை ஒரு விஷயம் தெரியவந்தது. அதாவது அன்றைக்கு இரவும் ஸ்காட்டே கடமையில் இருக்க வேண்டும் என்று. தொடர்ந்து கண் முழித்தால் தூக்கம் வந்துவிடுமே! கடமையை ஒழுங்காகச் செய்யமுடியாதே. அதனால் தன்னுடைய தலைமை அதிகாரியிடம் போய், விஷயத்தைக் கூறினான். களைப்பாக இருக்கிறது; அதனால் இரண்டு வேளையும் காவல் காப்பதற்கு கஷ்டமாக இருக்கும் என்றான். ஆனால் அந்த தலைமை அதிகாரி இதை ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்று கூறிவிட்டார். கண்டிப்புக்குப் பேர்போனவர் அவர்.

'சரி! வேறு வழியில்லை என்று சொல்லி ஸ்காட் காலை, மாலை இரண்டு வேளையும் காவலை ஏற்றுக்கொண்டான். ஒரு கட்டத்தில் அவனையும், அறியாமல் கண்மூட ஆரம்பித்தான். அந்தச் சமயம் பார்த்து மேற்பார்வையிட வந்த ஓர் அதிகாரி இதைப் பார்த்துவிட்டு மேலதிகாரிக்குத் தகவல் கொடுத்துவிட்டார்.

யுத்தகாலத்தில் பணிபுரியும் நேரத்தில் தூங்கும் வீரர்களுக்கு மரணதண்டனை கொடுத்துவிடுவார்கள். அதன் பிரகாரம் ஸ்காட்டை 24 மணி நேரத்தில் சுட்டுக் கொல்லும் படியாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அவனுடைய நண்பர்கள் பதறிப் போய்விட்டார்கள். தலைமை அதிகாரியிடம் வாதாடிப் பார்த்தார்கள். முடிய வில்லை. கடைசியாக மன்னிக்கின்ற அதிகாரம் அமெரிக்க ஜனாதிபதிக்கு உண்டு என்று கேள்விப்பட்டார்கள். உடனே சில அதிகாரிகள் வாஷிங்டனுக்குப் போய்; ஆபிரகாம் லிங்கனைச் சந்தித்தார்கள்.

''ஸ்காட் ஓர் உண்மையான இராணுவ வீரன் அவனைக் காப்பாற்றவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்கள். நடந்தது என்ன என்பதைச் சொன்னார்கள். லிங்கன் யோசித்தான். அன்றைக்கு இரவே ஓர் உத்தரவைப் போட்டு அதை ஸ்காட்டின் தலைமை அதிகாரிக்கு அனுப்பினார்.

அதற்குப் பின்னர் வாஷிங்டனில் இருந்து புறப்பட்டு அந்தப் படை வீரர்கள் தங்கியிருந்த ஊருக்குப் போய்ச் சேர்ந்தார்.

அவன் படித்த பாடசாலை, பெற்றதாய் எல்லாவற்றையும் விசாரித்தார். பின் ''ஸ்காட்டிடம் உன் தாயாரைத் துக்கத்தில் ஆழ்த்தாதே!'' என்றார் லிங்கன். ''அது எப்படிமுடியும்? நாளைக்கு நான் சுட்டுக் கொல்லப்பட இருக்கிறேன் என்பது தங்களுக்குத் தெரியுமே'' என்றான்.

ஜனாதிபதி ஸ்காட்டின் தோளில் கையைவைத்து நீ நாளைக்கு சாகப் போவதில்லை; உன் வேலைக்குத் திருப்பிப் போகப் போகிறாய், ஆனால் நீ எனக்கு மிகவும் சிரமம் கொடுத்துவிட்டாய். வாஷிங்டனில் இருந்து நான் இங்கே வந்து போவதற்கான செலவை எப்படித் திரும்பிக் கொடுக்கப் போகிறாய்?'' என்று கேட்டார்.

''எனது வங்கியின் சேமிப்புக் கணக்கில் கொஞ்சம் பணம் இருக்கிறது. என் நிலத்தின் பேரில் கொஞ்சம் கடன்வாங்குவேன். எங்கள் சம்பளத் திகதி வரைக்கும் நீங்கள் காத்திருக்க முடிந்தால் என்னுடைய நண்பர்கள் எல்லாம் ஆளுக்குக் கொஞ்சம் கொடுப்பார்கள். நான் உங்களுக்கு ஆன செலவைத் திருப்பிக் கொடுத்துவிடுவேன்'' என்று மிகவும் நம்பிக்கையுடன் கூறினான்.

அப்போது லிங்கன்அவனைப் பார்த்து உன்னுடைய சேமிப்பையும் தொகையையும் வைத்து என்னுடைய செலவை ஈடு செய்ய முடியாது. 'ஸ்காட்' என்கிற இராணுவ வீரன் ஒருவனால் தான் முடியும். ஸ்காட் தன்னுடைய கடமையை நாட்டுக்காக ஒழுங்காகச் செய்தால் என் செலவை ஈடுசெய்ய முடியும் என்றார்.

அப்படியே செய்வேன் என்று உறுதிளித்தான் ஸ்காட். மறுநாள் காலை பத்திரிகைகளில் முதல் பக்கத்தில் ''ஒரு சாதாரண இராணுவ வீரனுக்கு, ஜனாதிபதி நேரில் விஜயம் செய்து மன்னிப்புக் கொடுத்தார் என்ற செய்திதான்.

சட்டமும்-மனிதநேயமும் எப்படி புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்பதற்கு இது ஓர் உதாரணம் மனித நேயத்தை ஒதுக்கிவிட்டு சட்டத்துக்கு மட்டும் மரியாதை கொடுத்தால் சிறப்பாக அமையாது.

**கோ. சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
05 ஓகஸ்ட் 2011 வெள்ளிக்கிழமை



அகில இலங்கைத் தமிழ்த் தினப் போட்டியில் யாழ்ப்பாணம் கொட்டடி நமசிவாய வித்தியாலயம் காத்தவராயன் சிந்துநடைக்கூத்தில் வலய மட்டத்தில் முதலாம் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டது. நாடகத்தில் பங்குபற்றிய மாணவர்கள், அதிபர், ஆசிரியர்களுடன் (ம)

## சமூகத்தின் தேவைகளை உணர்ந்து கடமைகள் செய்யப்பட வேண்டும்

### மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர்

யாழ்ப்பாணம், ஓக.5

வங்கிகள், நிறுவனங்கள் இலாப நோக்குடன் மட்டும் மக்களுக்கான சேவைகளை வழங்காமல் சமூகத்தின் தேவை உணர்ந்து கடமைகளைச் செய்ய வேண்டும்.

இதற்குப் புதிய புதிய திட்டங்களை முன்னெடுப்பது நிறுவனத்துக்கு மட்டுமல்லாது பொது மக்களுக்கும் நன்மை தரும்.

இவ்வாறு தெரிவித்தார் மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் என். பத்மநாதன்.

மக்கள் வங்கியின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மக்கள் வங்கியின் ஓய்வூதியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற அங்கவீனமடைந்தவர்களுக்கு செயற்கை அவயவங்கள் வழங்கும் நிகழ்வும் ஓய்வூதியர்கள் கௌரவிப்பு நிகழ்வும் அண்மையில் மக்கள் வங்கியின் கன்னாதிட்டியிலுள்ள பிராந்திய காரியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது தெரிவித்ததாவது:

நிறுவனங்கள் பல இலாப நோக்கத்துடன் மட்டும் இயங்குவதால் பொதுமக்கள் பெறும் நன்மைகள் குறைவாகவே உள்ளன.

அத்துடன் நிறுவனங்களில் தொழில் புரிந்த மூத்த ஊழியர்கள் தாம் ஓய்வுபெற்ற பின்னர் கடமைகளைச் செய்வது கிடையாது.

ஓய்வூதியர் சங்கங்கள் ஊடாக இவர்கள் தம்மை உள்வாங்கி சமூகச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

மக்களின் சேவைகளை இலக்காக வைத்து நிதி நிறுவனங்கள் சேவைகளை வழங்கினால் மக்கள் பெரிதும் நம்மை அடைவர்.- என்றார். (ம-313)

## விதவைகள், பெற்றோரை இழந்தோருக்கு முன்னுரிமை வழங்க வேண்டியது அவசியம்

### வளர்மதி நிறைவாழ்வகப் போஷகர்

யாழப்பாணம், ஓக. 5

சமூக சேவைகளைச் செய்யும் தொண்டு நிறுவனங்கள் விதவைப் பெண்கள், பெற்றோரை இழந்த பிள்ளைகள் ஆகியோருக்கு முன்னுரிமை கொடுத்து உதவிகளைச் செய்ய வேண்டும்.

ஏனெனில் மனதால் பெரிதும் பாதிப்படைந்துள்ள இவர்களுக்கு ஆறுதல் அளிக்கக் கூடிய வகையில் இந்தச் செயற்பாடுகள் அமையும் .

இவ்வாறு தெரிவித்தார் நவாலி வளர்மதி நிறைவாழ்வகப் போஷகர் அ.பஞ்சலிங்கம்.

நவாலி ஊன்றுகோல் அறப்பணியகத்தின் அனுசரணையுடன் உலக அன்னையர் தின விழா நிகழ்வு நவாலி முருகானந்தா சனசமூக நிலைய மண்டபத்தில் ஊன்று கோல் அறப்பணியகத் தலைவர் க.நடேசன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது தெரிவித்ததாவது:

வன்னி மாவட்டத்தில் முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் இடம்பெற்ற இறுதிக்கால யுத்தத்தில் கணவரை இழந்தவர்கள், சிறார்களை இழந்தவர்கள், ஊனமுற்றோர்கள், பெற்றோரை இழந்தோர்கள் என எண்ணிலடங்காதவர்கள் இன்று அநாதரவாக்கப்பட்டு தற்போது வாழ்கின்றனர்.

இவர்களில் முக்கியமாக விதவைகள், பெற்றோரை இழந்தோரை முன்னிலைப்படுத்தி உதவிக்கரம் கொடுத்தல் மிகவும் பயனுடையதாக இருக்கும்.

இவர்களுக்கான வாழ்வாதார தேவைகள் அதிகமாக உள்ளன. மூன்று நேர உணவைக்கூட உண்ணமுடியாது எத்தனை பேர் உள்ளனர்.

வளர்ச்சியடைந்த பிரதேசங்களில் மேலும் மேலும் உதவிகளை செய்வதில் எந்தப் பயனும் கிடையாது.

எனவே உதவிகளை வழங்க நினைக்கும் தொண்டு நிறுவனங்கள் இத்தகையோரை முன்னிலைப்படுத்த வேண்டும். தற்போதைய சூழலில் சிறுவர்கள், முதியோர்கள், ஆசிரியர்கள், அன்னையர்கள் போன்றோரை சமுதாயம் மதிக்கும் தன்மை குறைவடைந்து செல்கின்றது. இவற்றில் மாற்றம் கொண்டுவர வேண்டும் என்றால் முக்கிய தினங்களை கொண்டாடி இவர்களை நினைவு கூரவேண்டும்.- என்றார். (ம-302-313)

## தமிழைப் பிழையற தெளிவோடு கற்க வேண்டும்

### பேராசிரியர் சிவலிங்கராஜா

சுன்னாகம், ஓக. 5

சிறுவயதில் இருந்தே தமிழைப் பிழையற தெளிவோடு கற்க வேண்டும். அத்திபாரம் பலமாக இருந்தால்தான் கட்டடம் சிறப்பாக அமையும் என்று வலியுறுத்தினார் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா.

வலிகாமம் வலய தமிழ்த் தினவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது.

வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

எந்தவோர் இலக்கியத்தையும் நாமே தேடிப் படித்து அதிலுள்ள கருத்துக்களை அறிய முடியும்.

ஒருமுறை சுவாமி ஞானப்பிரகாசரிடம் தமிழை யாரிடம் கற்றீர்கள்? என்று வினவினர். அவர் பரிமேலழகர், நச்சினார்க்கினியர், இளங்கோவடிகள், கம்பன் என்று ஒரு பட்டியலைக் கூறினார்.

இவர்களால் எழுதப்பட்ட விடயங்களைத் தேடிக் கற்றமையால்தான் தனது தமிழ்ப் புலமை மேம்பட்டது என்பதை சுவாமி ஞானப்பிரகாசர் விளக்கினார்.

'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்பார்கள். சிறு வயதிலேயே கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், நாவல்களைப் படிக்கும் ஆர்வத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். இத்தகைய வாசிப்பின் மூலமாக ஒருவரது தமிழ் ஆளுமை, மொழியாளுமை வளர்த்தெடுக்கப்படும்.

மாணவர்களின் மொழியாளுமையை வளர்த்து அவர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்த் தினப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

இவற்றில் பங்கு கொள்வதன் மூலம் மாணவர்கள் தமது ஆற்றல்களை வளர்க்க வேண்டும்.- என்றார்.

இந்த நிகழ்வில் வடமாகாணத் தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் த.தர்மலிங்கம், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தொழிலதிபர் இ.ச.பே.நாகரத்தினம் ஆகியோரும் உரையாற்றினர். மாணவர்களுக்கான சான்றிதழ் மற்றும் பணப்பரிசில்களும் வழங்கப்பட்டன. கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (ம-38)

## தேசிய மட்டத்தில் முதலிடம்



இந்த ஆண்டுக்கான தமிழ்த் தினப் போட்டியில் பிரிவு 5 தனிநடனத்தில் இணுவில் மத்திய கல்லூரி மாணவி வானதி விஸ்வநாதன் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளார்.

இவர் இந்த வருடம் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற இந்தக் கல்லூரியின் இன்னொரு நிகழ்வான சூரசங்காரம் நாட்டிய நாடகப் போட்டியில் முருகன் என்னும் முக்கிய பாத்திரத்தில் நடித்துள்ளார். (ம-55)

## கொக்குவில் இந்துவுக்கு இரு பதக்கங்கள்

யாழ்ப்பாணம், ஓக.5

தேசிய மட்டத் தமிழ் மொழித் தினப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவிகள் இருவர் தங்கம், வெள்ளிப்பதக்கங்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

தனி நடனப் போட்டியில் கஜேந்தினி பரமேஸ்வரன் பிரிவு 2 இல் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தையும் சுபானுஜா ஜெகதீஸ்வரன் பிரிவு 3 இல் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டனர். (ம-313)

## சேவையிலிருந்து ஓய்வு

யாழ்ப்பாணம், ஓக.5

வடமாகாண நெல்சிப் அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுத்து அபிவிருத்தி செய்த பிரதித் திட்டப் பணிப்பாளராக இருந்த வே. சாம்பசிவம் 40 வருட சேவையில் இருந்து இளைப்பாறியுள்ளார்.

இலங்கை திட்டமிடல் சேவையின் சிரேஷ்ட அதிகாரியான இவர் காரைநகர் உதவி அரச அதிபராகவும் யாழ். செயலக 'நிகர்ப்' திட்டத்தின் பிரதி திட்டப் பணிப்பாளராகவும் நீண்ட காலம் பணியாற்றியுள்ளார். (ம-302)

## இடமாற்றம்

நாவற்குழி, ஓக.5

வலிகாமம் கிழக்கு - கோப்பாய் பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய அரச பொது முகாமைத்துவ உதவியாளர் மூவர் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

திருமதி தர்சினி கிருஷ்ணகுமார் - பருத்தித்துறை, திருமதி பாலவதனி வரதராசன் - சங்கானை, திருமதி விஜயலக்ஷ்மி பாலசுப்பிரமணியம்- நல்லூர் ஆகிய பிரதேச செயலகங்களுக்கே இடமாற்றம் பெற்றுள்ளனர். (ம-121)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம், ஓக.5

புலோலி கிழக்கு ஸ்ரீ முதலி (மனோன்மணி) அம்பாள் ஆலயத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் அண்மையில் ஆலய மண்டபத்தில் இடம்பெற்றன.

இதில் புதிய நிர்வாக சபைக்குத் தலைவராக வ.ரவிதாசன், உபதலைவராக க.கனிஷ்டன், செயலாளராக இ. கிருபாகரசூரியன், உப செயலாளராக ந.நிதர்சன், பொருளாளராக வே. சாந்தகுமார், கணக்காய்வாளராக க.ராகீஸ்வரன் ஆகியோரும் 11 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ம-313-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் மண்ணை விலை பேசும்....!

கோப்பாய் சண்முகம்
கதையோரு செய்தி

எனது தம்பி குடும்பம் பரந்தனில் மீளக்குடியமர்ந்து இருக்கினம். மீளக்குடியமர்ந்ததன் பின் ஒரு தடவை தான் வீட்டுக்குப் போனதால் ஒருக்கால் தம்பி வீட்டுக்குப் போய் தம்பி குடும்பத்தைப் பார்த்துவிட்டு வருவம் என்று யாழ்ப்பாணத்தில் இருந்து பரந்தனுக்குப் புறப்பட்டேன்.

பஸ்ஸுக்குள் ஒரே கலகலப்பு. யாரைப் பார்த்தாலும் புதிய முகங்களாகத் தெரியுது. பஸ்ஸுக்குள் தங்களுக்குத் தெரிந்தவர்களைக் கண்டால் பக்கத்தில் ஆள்கள் இருக்கினம் என்று பாராமல் சத்தம் போட்டுக் கதைத்துக் கொண்டு இருந்தார்கள். இதற்கிடையில் பஸ்ஸில் பாட்டுப் பெட்டி கழன்று விழுற அளவுக்குச் சத்தம் போட்டுப் பாடுது. பாட்டின் சத்தத்தில் எப்படித்தான் கதைக்கிறார்களோ தெரியவில்லை. கண்ணை மூடிக்கொண்டு முன் சீற்றின் பின்பக்கத்தே தலையை வைத்துத் தூங்கினேன்.

இதற்கிடையில் எனக்கு முன் சீற்றில் இருந்தவர் அவருக்குப் பக்கத்தில் இருந்தவரோடு மும்முரமாக கதைத்துக் கொண்டிருந்தார். முன் சீற்றில் இருந்தவரின் பின் பக்கத்தில் தலையை வைத்துத் தூங்கப் போனதால் அவர்கள் பேசிக்கொள்வது எனது காதுக்கும் கேட்கிறது.

மீளக்குடியமர்ந்ததில் இருந்து வீட்டுத் திட்டத்துக்குப் பதிந்து மாதங்களாகிவிட்டன. இன்னும் வீட்டுத் திட்டம் எனக்குக் கிடைக்கவில்லை என்று பக்கத்தில் இருந்தவருக்குச் சொல்லிக் கொண்டிருந்தார். முன் சீற்றில் இருக்கிற அந்த ஆள் சொல்லுறதை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

உந்த அரசின்ர வீட்டுத் திட்டம் இப்போதைக்கு எனக்குக் கிடைக்காது. அதனாலே வெளிநாட்டில் இருக்கும் எனது உறவுகளிடம் போனில் கதைத்து ஒருவாறு பணத்தைத் திரட்டி சின்னதாய் வீடு ஒன்றைக் கட்ட ஆரம்பித்தேன். அதுவும் இடைநடுவில் நின்று போய்விட்டது எண்டவர் அமைதியாக இருந்தார். பஸ் கொடிகாமம் தாண்டிச் சென்று கொண்டிருந்தது. அவருக்குப் பக்கத்தில் இருந்தவர் என்ன நடந்தது என்று கேட்டார். அதற்கு அவர் மண் எடுக்க முடியாதுள்ளது. கிராம சேவகரிடம் நாலைந்து தடவை அலைந்து கடிதம் வாங்கி பிரதேச செயலரிடம் அனுமதியைப் பெறப் பல வாரங்கள் ஓடின. ஒருவாறு மண் அள்ளுவதற்கான அனுமதிப் பத்திரத்தை எடுத்துக் கொண்டு மண் அள்ளச் சென்றும் மண் அள்ள முடியாமல் போய்விட்டது என்றார்.

பக்கத்தில் இருந்தவர் என்ன நடந்தது என்று மீண்டும் துருவினார். அதற்கு அவரோ பக்கத்தில் இருந்தவரின் காதில் ஏதோ முணுமுணுத்தார். அவர் என்ன சொன்னார் என்று கேட்க எனக்கும் ஆவலாக இருந்தது. உடனே முன் சீற்றில் இருந்தவரி டம் கேட்டேன். என்ன பிரச்சினை பயமில்லாமல் சொல்லுங்கள் என்றதும் அக்கம் பக்கம் பார்த்தவர் தனது சீற்றில் இருந்து திரும்பி என்னுடன் கதைக்க முன்வந்தார். உழவு இயந்திரத்துடன் மண் அள்ளச் சென்ற வேளை அங்கே நின்ற இராணுவத்தினர் மண் அள்ளுவதற்கான அனுமதிப் பத்திரத்தைப் பறித்து விட்டு மண் அள்ள முடியாது திரும்பிச் செல்லும்படியும் மிரட்டி அனுப்பினார்கள். பிறகு எப்படி அரை குறையாக இருக்கின்ற வீட்டைக் கட்ட முடியும். இதனை யாரிடம் சென்று முறையிடமுடியும் என்றவர் திரும்பித் தனது சீற்றில் மௌனமாக இருந்தார்.

பரந்தன் வந்தது . நான் இறங்கி எனது தம்பி வீட்டுக்கு நடந்து சென்றேன். அங்கே சென்றதும் என்னைக் கண்ட எனது தம்பி தான் புதிதாகக் கட்டிக் கொண்டிருக்கும் வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள குடிசைக்குள் என்னை அழைத்துச் சென்றான். குடிசைக்குள் நுழையும்போது அவன் கட்டிக் கொண்டிருக்கின்ற வீட்டைப் பார்த்துக் கொண்டு சென்றேன். அங்கே மணல் கும்பிகளாகக் குவிந்து போய் இருந்தது.

பஸ்ஸில் நடந்தவற்றைத் தம்பியிடம் சொன்னேன். எப்படி இவ்வளவு மண்ணை உன்னால் பெற முடிந்தது. என்று கேட்டேன். அவனோ வீடு கட்டுவதற்குக் கிராம சேவகரிடம் சென்று கடிதம் வாங்கிப் பிரதேச செயலரிடம் சென்று அனுமதியைப் பெற்றுப் போனால் மண்ணை இராணுவம் எடுக்க விடாது. இந்த மண் 'போமிற்' ஒன்றும் எடுக்காமல் பணத்தைக் கொடுத்து வாங்கிய மண் என்றான்.

எங்களால் என்ன செய்ய முடியும். கிராம சேவகர்களும் பிரதேச செயலர்களும் வேண்டா வெறுப்புடன் செயற்படுகிறார்களா அல்லது ஒன்றுமே செய்ய முடியாமல் மேலதிகாரிகளின் பணிப்பின் பெயரில் அவர்களுக்கு வேலை செய்கின்றார்களா என்று தெரியாமல் மக்கள் நாளாந்தம் அவதிப்படுகிறார்களா? போரில் எல்லாவற்றையும் இழந்து மீளக் குடியமர்ந்த மக்கள் ஒவ்வொரு தேவைகளையும் சிரமப்பட்டு நிறைவு செய்ய வேண்டிய சூழலில் அகப்பட்டுள்ளனர். கள்ள மண்ணைச் சந்தையில் பணம் கொடுத்து வாங்க முடிகிறது. இந்தக் கள்ள மண்ணை யார் கொண்டு வருகிறார்கள், யார் அனுமதி கொடுக்கிறார்கள் என்று தெரியாமல் மக்கள் இல்லை. என்ன செய்ய முடியும். அடக்குமுறைக்குள் இப்பொழுது மாட்டிக் கொண்ட மக்கள் தமது வளங்களைத் தாமே பெறமுடியாத சூழலில் மாட்டிக் கொண்டுள்ளனர்.

பண வசதிபெற வாய்ப்பு உள்ளவர்கள் அந்த வாய்ப்பைப் பெற்றுத் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்கின்றனர். பணவசதி வாய்ப்பைப்பெற முடியாத மக்கள் எல்லா விதத்திலும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றார்கள். இவர்களது கஷ்டங்களுக்கு அரச அதிகாரிகளும் காரணமாக இருப்பதுதான் கவலை தருவதாகக் கூறப்பட்டது.

இவ்வாறுதான் கடந்த 26 ஆம் திகதி குஞ்சுப் பரந்தன் பேராறுப் பகுதியில் பிரதேச செயலரின் அனுமதியுடன் மணல் அள்ளச் சென்றவர்கள் இராணுவத்தினரால் திருப்பி அனுப்பப்பட்டனர். உழவு இயந்திரத்தில் சென்றவர்களை வழிமறித்த இராணுவத்தினர் அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொண்டு திரும்பிப் போகுமாறு கூறியுள்ளனர். வீட்டுக்குத்தானே நீங்கள் வாக்குப் போட்டீர்கள் அவர்களிடம் போய் மண்ணைக் கேளுங்கள் என்று இராணுவத்தினர் கூறினராம். அங்கே மண் அள்ளச் சென்று முடியாமல் திரும்பி வந்தவர்கள் தெரிவித்தனர். முக்கியமான தேவைக்கு மண்ணை எடுக்க முடியாமல் மக்கள் அவதிப்படுகிறபோது மண்ணை அதிக விலைக்கு விற்று இலாபம் ஈட்டுபவர்களை என்னவென்று சொல்ல. மண்ணைப் பற்றிக் கதைத்தால் மண்ணுக்குள் தான் போக நேரிடும். பிறகு எப்படி மண்ணைப் பற்றி வாய் திறந்து கதைக்க முடியும். *

## பரீட்சை இல. 12 இன் வினாத்தாள் I இற்கான விடைகள்

01-3 02-2 03-1 04-3 05-1 06-2 07-3 08-3 09-2
10-2 11-2 12-3 13-3 14-3 15-1 16-4 17-1
18-4 19-3 20-2 21-3 22-1 23-4 24-3 25-2
26-1 27-3 28-3 29-1 30-2 31-4 32-3 33-1 34-3
35-கோகிலம் 36-திமிங்கிலம் 37-மாலைப்பொழுது
38-செக்கச் சிவந்த வானத்தை 39-காற்று 40-முத்து
(புள்ளிகள் 40×2.5=100)

## பரீட்சை இல. 12 வினாத்தாள் II இற்கான விடைகள்

01. 1. வெள்ளை 2. புறா 3. களத்து மேடு / மாடிவீடு
4. வேடுவிச்சி 5. திரியுது /தின்னுது /பறக்குது
6. சூடடிக்கும் இடம் 7. பாடி + திரியும்
8. மெல்ல / மெதுவாக 9. படபடக்குது
10. தோன்றுதல் / உதித்தல்
02. 1. எனக்கு இரவு முழுவதும் நித்திரை வரவில்லை.
2. இன்று புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின்றன .
03. 1. பறித்தாள் 2. மரம்
04. 1. வரதனும் காந்தனும் விளையாடச்சென்றனர்.
2. பசுக்கள் வயலில் மேய்ந்தன.
05. 1. Hair 2.Ear 3. Mouth
06. 1. நான் விளையாடிக் கொண்டிருக்கிறேன்.
2. அதை எடு
07. 1. சுகம் எப்படி? 2. நன்றாக இருக்கிறேன்.
08. 3 09. 2 10. 2 11. 4 12. 2 13. 1 14. 1 15. 2
16. 3 17. 4 18. 1 19. 2 20. 1 21. பலகை வாள்
22. கப்பி 23. பாக்குவெட்டி 24. கத்தி 25. கரம்
26. கிரிக்கெட் 27. எல்லே 28. ஹொக்கி
29. 01) 751 02) 157 30. 1/8
31. 01) நான்முகி 02) 4 03) 6 32. பாலா
33. 10 மாபிள்கள் 34. 5 மாபிள்கள் 35. 45
36. பண்டார, விமல், சலீம், பாலா 37. 21
38. 01) 14 cm 02) 12 $cm^2$ 39. 16
40. பொருத்தமான வாக்கியத்திற்குப் புள்ளி வழங்குக.

## 25. 07. 2011 அன்று வெளியான புலமைச்சுடர் கையேட்டில் உள்ள வினாக்களுக்கான விடைகள்

### வினாத்தாள் I

01. 1 02. 3 03. 1 04. 2 05. 2 06. 2 07. 1 08.3
09. 1 10. 2 11. 3 12. 1 13. 2 14. 2 15. 3 16. 3
17. 1 18. 2 19. 3 20. 2 21. 3 22. 2 23. 3 24. 3
25. 1 26. 3 27. 2 28. 2 29. 3 30. ரூபாய் 650.00
31. ரூபாய் 600.00 32. 1 33. 2 34. 2 35. 3 36. 2
37. 1 38. 3 39. 3 40. 1
(40 x 2.5 = 100 புள்ளிகள்)

### வினாத்தாள் II

01. 1) உண்ணுகின்றது / சாப்பிடுகின்றது
2) சூடடிக்குமிடம் 3) ஒழிந்து 4) குடிசை
5) படபட 6) வெள்ளை 7) வேடன் 8) குறுகுறுக்கும்
(08 x 1 = 08 புள்ளிகள்)
02. 1) உமிழ்நீர் 2) கறி
03. 1) தெங்கு + காய் 2) வெம்மை + நீர்
04. 1) தோட்டம் 2) சோலை
05. 1) சண்டைபிடித்தல் 2) வாக்குத்தவறுதல்
06. 1) ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்பதை நாம் மறக்கக்கூடாது.
2) அடியனே! உனக்கு மங்களம் உண்டாகட்டும்.
(10 x 1 = 10 புள்ளிகள்)
07. 1) I 2) You 3) He
08. 1) இது ஒரு கிளி 2) உங்களது பெயர் என்ன? 3) யானை
09. 1) விளையாட்டு மைதானம் 2) புறா
(08 x 1 = 08 புள்ளிகள்)
10. 1 11. 4 12. 1 13. 2 14. 2 15. 4 16. 1 17. 3
18. 3 19. 2 20. 4 21. 4 22. 2 23. 3 24. 1 25. 4
26. 2 27. 3 28. 2 29. 4 30. 2 31. 1 32. 2 33. 1
34. 1 35. 2 36. 1 37. 2 38. சங்கிலித்தையல்
39. கம்பளித்தையல் 40. சோம்தையல்
41. நரம்புத்தையல் (பிழையாக விடைகளுக்கு மன்னிக்கவும்) 42. அரிவாள் 43. கோடரி
44. கடப்பாரை 45. கலப்பை
(36 x 1 = 36புள்ளிகள்)
46. 1/8 46. 5.2 48. ரூபாய் 132.00
49.



50.



51. 150 m 52. மு.ப 4 மணி 25 நிமிடம் 53. 100
54. 1) 20 2) செடி 3) கமுகு 4) கத்தரி, பூசனி
5) 8 கன்றுகள்
(13 x 2 = 26புள்ளிகள்)
55 தொடக்கம் 60 வரைக்கும் பெருத்தமான வாக்கியங்களிற்கு புள்ளி வழங்குக. (6 x 2 = 12புள்ளிகள்)

### பக்கம் 05 கணிதபாடக் கற்றல் குறிப்புப் பயிற்சிகளுக்கான விடைகள்

01. 5 cm 02. 70 mm 03. 7 m 50 cm
04. 800 cm 05. 2 km 500 m 06. 7500 m

### பக்கம் 05 மொழித்திறன் பயிற்சிகளுக்கான விடைகள்

பயிற்சி - 10
01. மேசை 02. (1) கத்தரி (2) வெண்டிக்காய்
பயிற்சி - 11
01. 2 02. 3 03. 3
பயிற்சி - 12
01. இடமிருந்து வலம் (1) கொக்கு (3) புறம்
மேலிருந்து கீழ் (1) கொம்பு (2) குடம்
02. இடமிருந்து வலம் (1) அழகு (3) புற்று
மேலிருந்து கீழ் (1) அன்பு (2) குன்று
பயிற்சி - 13
01. புனிதம் 02. தும்பி 03. குஞ்சு

### பக்கம் 05 பல்கலவை பயிற்சிகளுக்கான விடைகள்

01. (01) 1 (02) 2
02. (01) வெப்பமானி (02) காது (03) 846
03. (01) 5 (02) 5 04. (01) 2 (02) 2
05. (01) யானை (02) வயிறு / பானை / கால் / தூண்கள் / காது / சுளகு / கண்
(03) 01. பெயர் - அவனது புகழ் பார் முழுவதும் பரவியது. 02. வினை - அவள் அவற்றை பார்த்தாள்.

### பக்கம் 10 சங்கமம் பகுதி (ம. கிருஷ்ணவிகா)

01. 3 02. 3 03. 3 04. 1 05. 4 06. பைங்கிளி
07. ஆருயிர் 08. செய்ந்நன்றி 09. கிரகணம் 10. சிகைக்காய்

சங்கமம் பகுதி (இ. ரதீசன்)

01. 1 02. 2 03. 2 04. 3 05. 3 06. 1 07. 13 முக்கோணிகள் 08. கூம்பகம் 09. 5/8 10. 39 $cm^2$

சங்கமம் பகுதி (பி. ஜெயக்குமார்)

01. 2 02. பச்சை, நீலம் 03. 01) விடாப்பிடி 02) மேலெழுந்த வாரியாகப் படித்தல் 04. சதாவதானி 05. ரூபாய் 20.25
06. ரூபாய் 31.80 07. 4 08. 1 09. 3 10. 4

### பக்கம் 12

| புதிர் 02 இன் விடைகள் | புதிர் 03 இன் விடைகள் |
|---|---|
| இடமிருந்து வலம் | இடமிருந்து வலம் |
| 01. மின்னேரியா | 01. தண்மைநீர் |
| 03. திங்கள் | 04. தாதி |
| 06. புலி | 06. தாவின |
| 07. பதவி | 08. முள் |
| 09. முல்லை | 09. மாடும் |
| 10. கை | 10. வாளி |
| | 12. கைம்பெண் |
| மேலிருந்து கீழ் | மேலிருந்து கீழ் |
| 01. மித்திரன் | 01. தலதாமாளிகை |
| 02. யாழ் | 02. மைதானம் |
| 04. கப்பல் | 03. நீதி |
| 05. எலி | 05. நள்ளிரவு |
| 06. புவி | 07. விடு |
| 07. பல் | 08. முவா |
| 08. தலை | 11. விண் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை 60இல் வாழ்த்துகின்றோம்

## யா/யாழ்.மத்திய கல்லூரி

## அதிபர் திரு.எல்.ஓங்காரமூர்த்தி அவர்களின்

# மணிவிழாச் சிறப்புமலர்

### கல்விசார் பெருந்தகையீர்!

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அதிபராக இருந்து ஓய்வு பெறும் ஓங்காரமூர்த்தியை வாழ்த்திப் பாராட்டுவதனை இட்டு மகிழ்வடைகின்றோம். கல்வியில் உயர்பீடமாக விளங்கும் பாடசாலை வாழ்க்கை மனித வாழ்வில் மகத்துவமானது. மாணவ சமுதாயத்தை உருவாக்கிய பெருமை அதிபர் ஓங்காரமூர்த்தியைச் சாரும் . இவருடைய பணி கல்விச் சமூகத்துக்குப் பெருமையைச் சேர்த்துள்ளது. அன்பும் அடக்கமும் பயபக்தியும் எடுத்த விடயத்தை செவ்வனையே ஆற்றும் அதிபரை யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் சமூகமும், இணைந்து பாராட்டு செய்வது மகிழ்ச்சியைத் தருகின்றது. ஓய்வுபெறும் அதிபர் ஒய்வுநிலையிலும் சமூகப்பணியையும் சமுதாயப் பணியையும் ஆற்றி பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்..

வாழ்க வளமுடன். ''என்றும் வேண்டும் இன்பு அன்பு''

இராண்டாவது குருமஹாசந்நிதானம்,
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.



திரு. L.ஓங்காரமூர்த்தி B.A
DIP.in Ed. S.L.T.S-I


### சேவை விவரம்

பிறந்த திகதி:- 1951.08.20
ஆரம்பக் கல்வி:- யா / இந்து ஆரம்பப் பாடசாலை
இடை நிலைக் கல்வி:- யா/ காரைநகர் இந்துக் கல்லூரி
பட்டப்படிப்பு: பேராதனை பல்கலைக்கழகம்

**ஆசிரிய சேவை விவரம்:**

1982-1987 குரு / அல்ஹர் முஸ்லிம் ம.வி
1987-1988 கிளி / மத்திய கல்லூரி
1988-1990 கிளி / பூநகரி மகா வித்தியாலயம்
1991-1997 யா / யாழ்.மத்திய கல்லூரி
சிரேஸ்ட போதனாசிரியர் (தொலைக்கல்வி நிலையம், யாழ்.மத்திய கல்லூரி)
1997-2002 பிரதி அதிபர் யா/யாழ்.மத்திய கல்லூரி
2002-2006 பிரதி அதிபர் யா / யாழ்.இந்துக் கல்லூரி
2006-2008 பிரதி அதிபர்
கொ / பம்பலப்பிட்டி இராமநாதன் மகளிர் கல்லூரி
2008-இன்று வரை அதிபர் யா / யாழ்.மத்திய கல்லூரி.

### Message From Minister Methodist Church



I am Privileged to give this message on the retirement of Mr.L. Ongara moorthy the principal Jaffna central College-Jaffna. Mr.L. Ongara moorthy led the school in critical times. In his short time of tenurer he fulfilled his responsibilities with dedications. He maintained the standard of the school and achieved the goals. He was in touch with the Methodist Church always.

I wish him well in his future.

**Rev.R.S.E.Suthagar (B.Th)**
**Minister Methodist Church**
**Lockwood House, No.09,Vembady Road, Jaffna.**

### அதிபர்கள் வரிசையில்



எமது கல்லூரியில் எத்தனையோ அதிபர்கள் வந்தார்கள். போனார்கள். ஒவ்வொருவரும் தன்னாலான தன் தனித்துவத்தை, திறமையை விதைத்தே சென்றுள்ளனர். அந்த வரிசையில் திருவாளர் L.ஓங்கார மூர்த்தியும் எமது கல்லூரியில் உப அதிபராக இருந்து மாற்றலாகிச் சென்று பின் அதிபராகப் பொறுப் பேற்று வந்து பல புதிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு வித்திட்டுச் செல்கிறார். கல்வி மேம்பாட்டுக்காக அவர் ஆற்றிய பணிகளும் பழைய மாணவர் சங்கத்தால் மேற்கொண்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கு அவரின் பூரண ஒத்துழைப்பை வழங்கி எமக்கு ஊக்கமளித்து வந்துள்ளார். அத்தோடு கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள நீச்சல் தடாகத்தை பிறர் கைகளில் செல்ல விடாது பழைய மாணவர் சங்கத்திடம் பராமரிப்பை ஒப்படைத்த அதிபர் அவர்களை நாம் மனமாரப் பாராட்டுகின்றோம்.

பழைய மாணவர் சங்கத்தின் சார்பில்
என்.இராஜதேவன் தலைவர், பழைய மாணவர் சங்கம்.

### கல்வி அமைச்சின் செயலாளரிடம் இருந்து



இலங்கை அதிபர் சேவை வகுப்பு 1ஐச் சேர்ந்த லக்ஸ்மன் ஓங்காரமூர்த்தி அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்சியடைகிறேன். தமிழ்த்தினப் போட்டியிற் தேசிய ஆட்டத்தில் ஒவ்வொரு முறை யும் குழு நடனத்தில் ஆண் மாணவர்களின் செயற்திறனை விருத்தி செய்து முதலாம் இடத்தைப்பெற்றுச் சாதனைகளின் குறிகாட்டியாகும். பிரதி அதிபர், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள் ஆகியோரை ஒன்றிணைத்து முகாமையைச் சிறப்பாகச் செய்து மாணவர்களின் அறிவுக் கண்களைத்திறந்துள்ளார் என்பது வெள்ளிடைமலை. இவர் தனது ஓய்வுகாலத்தில் சிறப்புடன் வாழ எனது வாழ்த்துக்கள்.

இ.இளங்கோவன்,
செயலாளர் கல்வி பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சு, வடமாகாணம்.

### மாணவர் முதல்வர் சபையின் வாழ்த்துப்பா

கல்லும் உடையாமல்
சிலையும் சிதறாமல்
எங்களைச் செதுக்கிய
சிற்பி அல்லவா நீங்கள்

எத்தனை அன்பு அரவணைப்பு
எத்தனை அறிவுரைகள், ஆலோசனைகள்
எல்லாம் எதற்கு
எங்கள் வாழ்வு வளம் பெறத்தானே

உங்கள் குடும்பத்தை விட
எங்கள் நலனில் தானே
அதிகம் அக்கறை செலுத்தினீர்கள்

உங்கள் சேவையை என்றும்
மறக்க மாட்டோம்.
நன்றியுடன் உங்களை
நினைத்துப் பார்க்கும்
மத்தியின் மாணவ முதல்வர்கள்.

மாணவர் முதல்வர் சபை, யாழ்.மத்திய கல்லூரி.

### ஆசிரிய வட்டத்தினரின் வாழ்த்துச் செய்தி



எமது கல்லூரியின் அதிபராகக் கடந்த மூன்று வருடங்களாகக் கடமையாற்றிவரும் இ.ஓங்காரமூர்த்தி அவர்கள் எதிர்வரும் 19/08/2011 இல் ஓய்வு பெற்றுச்செல்ல இருந்தாலும் அவர் 05/08/2011 இன்று எமது கல்லூரியில் இருந்து விடைபெற்றுச் செல்கிறார். ஓங்கார மூர்த்தி அவர்கள் 1990 முதல் 2002 வரை எமது கல்லூரி ஆசிரியராகவும் 1997 முதல் 2002 வரை எமது கல்லூரியின் பிரதி அதிபராகவும் கடமையாற்றிய காலத்தில் பாடவிதான அபிவிருத்திக்கு தன்னாலான உதவிகளைப் புரிந்து 2008/12/05 இல் எமது கல்லூரி அதிபராகக் கடமையேற்று இன்றுவரை தமது சேவையைச் சிறப்பாக வழங்கிக்கொண்டிருக்கிறார். மாணவரின் கல்வி, ஒழுக்க, சமூக அபிவிருத்தியில் அக்கறை கொண்டமையினால் அவர் சந்தித்துக் கொண்டிருக்கின்ற சோதனைகள் ஏராளம். தமது ஓய்வுகாலத்தில் குடும்பத்தாருடன் சிறப்பாக வாழ மனமார்ந்த வாழ்த்துக்களை எமது கல்லூரி ஆசிரியர்கள் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தலைவர், ஆசிரிய வட்டம்
யாழ்.மத்திய கல்லூரி, T.சந்திரகுமார்.

### தன்னலமற்ற இளமைத் தோற்ற ஆசான்



"கற்க கசடறக் கற்பவை கற்ற பின் நிற்க அதற்குத் தக" என்ற வள்ளுவர் கூற்றுக்கு ஒப்ப வழிநடந்த வழி நடத்திய ஆசான் என்றால் அது மிகையாகது. 1816 ஆம் ஆண்டு ஆரம்பித்த இந்தப் பாடசாலையின் 56 ஆவது அதிபராகக் கடமையாற்றும் இந்த அதிபர் இங்கு 1990 ஆம் ஆண்டு முதல் 1997 ஆம் ஆண்டுவரை ஆசிரியராகக் கடமையாற்றினார். கடமையுணர்வும் ஒழுக்க சீலமும் நிறைந்த இவர் இந்தப் பாடசாலையிலே 1997 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரை பிரதி அதிபராகவும் 2008 ஆம் ஆண்டு முதல் அதிபராக வும் பொறுப்பேற்று இப்பாடசாலையின் மாணாக்கரின் உயர்வுக்குப் பெரும் பங்காற்றினார்.

முதலாம் தரம் முதல் உயர்தர மாணவர்கள் வரை மிகுந்த அக்கறையுடன் கண்ணும் கருத்துமாக வழிநடத்துபவர். கல்வி,கலாசாரம், கலை, விளையாட்டுத்துறை போன்ற அனைத்துத் துறைகளிலும் எமது பாடசாலை முன்னிலை வகிக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் சேவை செய்யும் இவருக்கு நிகர் இவரேதான். இளமைத் தோற்றமும் மிடுக்கான நடையும்கொண்ட இவர் அதிபர் சேவைக்கு மேலும் மெருகூட்டுகின்றது.

இப் பேற்பட்ட சேவையாளரின் ஓய்வுநிலை கண்டு பாடசாலைச் சமூகம் சோர்வுற்றதென்றால் அது பொய்யாகாது. இந்த ஆசானின் சேவையைப் பாராட்டி நிற்கும் அதேவேளை இவர் நல்ல உடல் உள ஆரோக்கியத்துடன் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வரமருள இறைவனைப் பிரார்த்தித்து ஆசி கூறி நிற்கின்றேன்.

வாழ்த்துக்கூறி நிற்கும் யோசெவ் பப்ரிசன் யூட் மரியசெல்வம்,
செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

### சேவை தொடர வாழ்த்துகிறோம்



யாழ்ப்பாண நகரத்தின் கல்விச் சிறப்புக்கு ஒளி சேர்க்கும் மத்திய கல்லூரியின் அதிபராயிருந்து ஓய்வுபெறும் ஓங்காரமூர்த்தி அவர்களின் சேவை அளப்பரிய பாராட்டுக்குரியதாகும். வாழ்க்கையின் உயர்வுக்கு வழிகாட்டும் நற்பண்பும் கல்வியால் விளைந்த கட்டொழுங்கும் அவருடயவை. மாணவர் கல்வியிலும், ஆசிரியர்களின் கடமையிலும் கருத்துடன் தனது கவனத்தைச் செலுத்தி அறிவு, அன்பு, ஒழுக்கம், அடக்கம் ஆகிய பண்புகளால் அனைவரின் உள்ளங்களையும் ஈர்த்தவர். புன்னகையும் அனைவருடனும் பொருந்தப் பேசும் ஆற்றலும் அவருடயவை. ஆசிரியராய், ஆசிரியர்களுக்குத் தொலைக்கல்விச் சீர் வழங்கும் பயிற்சி ஆசிரியராய், அதிபராய் பல படிகளில் ஏறித் தன்பலம் மிக்க அறிவாற்றலாலும் நற்பண்புகளாலும் கல்விச் சமூகத்தின் மதிப்பைப் பெற்றவர். ஓய்வின் பின்னரும் எமது எதிர்காலச் சிறார்களின் கல்விக்காக ஓய்வின்றி உழைக்கும் எண்ணம் கொண்டவர். அவரது கல்விச் சீர் வளர்க்கும் உறுதிகள் பெருகவும், தொடரும் வாழ்வில் அவரது கல்விச் சேவைகள் தொடர்ந்தும் வளம்பெற்று வாழவும் இறையருளை வேண்டி வாழ்த்துகிறேன்.

யோ.ரவீந்திரன், பிரதிக் கல்விப்பணிப்பாளர் யாழ்.கல்விவலயம்.


### பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அதிபராக ஏறக்குறைய மூன்று ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றிய மதிப்புக்குரி முதல்வர் திருவாளர் ஓங்காரமூர்த்தி அவர்கள் எதிர்வரும் 19/08/2011 ஆம் திகதியிலிருந்து ஓய்வு பெறப்போகிறார் என்பது ஒரு தனி மனித ஓய்வு அல்ல. இது ஒரு கல்விசார் சமூகத்தின் முப்பது ஆண்டுகள் பணியாற்றி அதனூடாகத் தலமைத்துவத்தின், வழிகாட்டலின் முகாமைத்துவத்தின் முதிர்ச்சி ஒன்றை அடையாளமிட்டுக் காட்டுகின்றது. இத்தகைய ஓர் அதிபர் அதிலும் யாழ்ப்பாணத்தின் மூத்த கல்லூரியான நூற்றித்தொன்னூற்றைந்து [195] ஆண்டு பழமை வாய்ந்த யாழ்.மத்திய கல்லூரியில் அதிபராக பணியாற்றி ஒய்வுபெறுதல் என்பது வெறும் அரசாங்க உத்தியோகத்தரது ஓய்வாக அமையாது. மறாக இந்த நிறுவனம் சார் சமூகத்துடன் நெருங்கிய உறவைப் பேணி சமூகத்தின் எதிர்பார்ப்புக்கள் மத்தியில் மாணவர்களின் சிறந்த ஆளுமைக்கான சகல வழிகாட்டல்கள், வாய்ப்புக்களை ஏற்படுத்தி நிறுவனத்துக்காக உழைத்தவர் திருவாளர் ஓங்காரமூர்த்தி அவர்கள். இத்தகைய அதிபர்களின் பணிக்குப் பின்னால் பல சாதனைகளும் வேதனைகளும் ஏன் சோதனைகளும் நிறைந்திருக்கும் என்றால் [illegible] மாணவ உறவுகளையும் ஆசிரிய நட்புக்களையும் தான் அர்தப் பொதிகளையும் திருவாளர் ஓங்காரமூர்த்தி இக்கல்லூரியை விட்டு வெளியேறும்போது சுமந்து செல்வார் என்று எதிர்பார்த்து [illegible] குடும்ப வாழ்வு மென்மேலும் சிறந்து மகிழ்வுடன் நோய் நொடியின்றி பல்லாண்டு வாழவும் அவரது செல்வங்கள் சிறந்தோங்கவும் வாழ்த்துகிறேன்.

சி.க.எழில்வேந்தன், பிரதி அதிபர்.

### நிலை நிறுத்திய வரலாற்றுப் பதிவு ஓங்காரம்



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அளப்பரிய கல்வி மற்றும் விளையாட்டுத்துறை ஏனைய துணைப்பாட விதான செயற்பாடுகளை மத்தியின் அதிபர் என்ற வகையில் சிறப்பாக பணியாற்றி ஓய்வுபெறும் இவர் போற்றத்தக்கவாறு வரலாற்றில் இடம் பிடித்த சிறந்த அதிபர் ஆவார். சாந்தமெனும் நற்குணமும், சிறந்த இளமைத் தோற்றமும் அமைதியுமான அதிகாரப் பரவலாக்கமும் சிறந்த ஆளுமைத் திறன் கொண்ட மாணவர்களின் முழுமையான எதிர்கால நலனில் முழுமையாக அக்கறை கொண்ட ஓர் உத்தம புருசனாக மத்தியின் நிகழ்காலத் தந்தையாகத் திகழ்ந்த இவர் சேவை என்றும் காலத்தால் அழியாதவை என்பதைப் பெருமையுடன் கூறிக் கொள்வதில் எமது கழகம் சார்பில் மகிழ்ச்சி அடைகிறேன். அவர் ஓய்வுபெறுவது இந்த நாளில் அவர் மேலும் பல்லாண்டுகாலம் நோய்நொடி அற்று இறை அருளுடன் இன்பமாய் வாழ அனைவரும் வாழ்த்துகின்றோம்.

தலைவர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நலன்புரி சங்கம், வி.தயாபாலன்.

**மத்திய கல்லூரி ஆசிரிய வட்டத்தினரும் பழைய மாணவர் சங்கமும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிய தருணத்தில் விற்பனை செய்யவும் அறுவடையை வீட்டுக்கு கொண்டு செல்லவும்

## நெல் அறுவடையை சந்தைப்படுத்தும் வரை சேகரித்து வைப்பதற்கு இலங்கை வங்கியின் விசேட கடன் திட்டம்



- ஆகக்கூடிய கடன் உதவி ரூபா 50,000/-
- 06 மாத தவணையில் கடன் செலுத்தல்
- மாதாந்த வட்டி வீதம் 0.66%
  (வருடத்திற்கு 8%)
- இலகுவான ஆள் பிணை

மேலதிக விபரங்களுக்கு அருகில் உள்ள
இலங்கை வங்கி முகாமையாளரை அணுகவும்

அழையுங்கள் 011 220 4444

உங்களின் நெல் அறுவடைக்காக அரசாங்கத்தின் உறுதிப்படுத்தப்பட்ட விலைக்கு மேலும் ஓர் உத்தரவாதம்.
இன்றே இலங்கை வங்கியுடன் நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்.

இலங்கைவங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

www.boc.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீதான சர்வதேச அழுத்தம் தொடருமானால் நாடு இரண்டாகப் பிரிவதை எவராலும் தடுக்கமுடியாது

## விஜேயதாச ராஜபக்ஷ எம்.பி எச்சரிக்கை

கொழும்பு,ஓக.5

இலங்கை மீதான சர்வதேச அழுத்தம் மற்றும் இலங்கையின் அரசியல் கலாசார நிலைமைகள் தற்போதுள்ளவாறு தொடருமானால், உலகின் 194 ஆவது நாடு தோற்றம் பெறுவதை எவரும் தடுக்க முடியாது.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேசாபிமானி பேராசிரியர் நந்ததாச கோதாகொடவின் 14 ஆவது ஞாபகார்த்த தின நிகழ்வு இலங்கை மன்றக் கல்லூரியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-



அரசியல்வாதிகளினால் சிறந்த தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் அவை உரிய நேரத்தில் நடைமுறைப்படுத்தப் படாவிடின் முடிவுகள் எட்டப்படாது. எனவே, திட்டமிட்டு செயற்பட வேண்டும்.

இலங்கையில் யுத்த காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்துமாறு அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் இலங்கை அரசை வலியுத்தி வருகின்றன.

இலங்கைக்கு எதிராக தற்போது சர்வதேசத்தில் நிலவுகின்ற நிலைமை தொடருமானால் நாடு பிளவுபட்டு உலகின் 194ஆவது சுயாதீன நாடொன்று உருவாவதை யாராலும் தடுக்க முடியாமற் போய்விடும். அவ்வாறு நடைபெறாவிட்டால் மாற்றீடாக, இலங்கை சீனாவுக்கு காலனித்துவ நாடாக மாற்றமடையக்கூடும்- என்றார். (ச)



சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கான விசேட செயலமர்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொழும்பில் நடைபெற்றது. இந்தநிகழ்வில் ரோயல் ஸ்கொட்லாந்து பொலிஸ் நிலைய முன்னாள் பணிப்பாளர் புரூஸ் மிலோன் பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்னவுடன் உரையாடுகிறார்.

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில்

# ஆங்கிலபாட வினாத்தாளுக்கு விடையளிக்கும் கட்டாய நிபந்தனை அமைச்சரவையால் ரத்து

கொழும்பு, ஓக. 5

எதிர்வரும் எட்டாம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் ஆங்கில வினாத்தாள்களுக்கு விடையளிப்பது கட்டாயமாகும் என்று உயர்கல்வி அமைச்சு ஏற்கனவே எடுத்த தீர்மானத்தை அமைச்சரவை இரத்து செய்துள்ளது.

இந்த நிபந்தனை திடீரென விதிக்கப்பட்டதால் மாணவர்கள் பலத்த சிரமங்களுக்கு முகம் கொடுக்க நேரிடுமென நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கவிடம் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறும் மாணவர்கள் உயர்தரப் பரீட்சையில் ஆங்கில வினாத்தாளுக்கு விடையளித்திருக்க வேண்டும் என்று உயர் கல்வி அமைச்சு திடீரென எடுத்த தீர்மானத்தால் மாணவர்கள் சிரமங்களுக்கு உள்ளாவார்கள் என கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன அமைச்சரவைக்கு விளக்கிக் கூறியுள்ளார்.

பாடசாலைகளில் ஆங்கிலப் பாடத்தைக் கற்பிக்க போதிய ஆசிரியர்கள் இல்லாத நிலையில் இந்த அவசர நிபந்தனை நியாயமற்றது எனவும் கல்வியமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கூட்டத்தில் கலந்துகொண்ட உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்துவதற்காக இந்த நிபந்தனை விதிக்கப்பட்டதே தவிர அவர்களை சிரமத்தில் தள்ளுவதற்கு அல்ல என விளக்கமளித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த நிபந்தனையின் நோக்கம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாயினும் தற்போதைய நிலையில் நடைமுறைக்கு சாத்தியமற்றது எனக் கூறி அந்த நிபந்தனையை இரத்துச் செய்துள்ளார். (ச-5)

# போதைப்பொருள் பாவனையால் 13 ஆயிரத்து 387 பேர் சிறையில்

## கொழும்பு மாவட்டத்தில்கூடிய எண்ணிக்கை

கொழும்பு, ஓக. 5

சிறைச்சாலைகளில் உள்ள 32 ஆயிரத்து 128 கைதிகளில் 13ஆயிரத்து 378 பேர் போதைப் பொருள் பாவனை மற்றும் வியாபாரம் போன்றவற்றில் ஈடுபட்டவர்கள் என சிறைச்சாலைகள் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இவர்களுள் 9ஆயிரத்து 658 பேர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இரண்டாம் இடத்தில் கம்பஹா மாவட்டம் ஆயிரத்து இரண்டு பேரைக் கொண்டுள்ளது. மொத்தத் தொகையில் 9ஆயிரத்து 498 பேர் சிங்களவர்கள். அவர்களுள் 9ஆயிரத்து 88 பேர் பௌத்தர்கள். இதில் 178 பெண்களும் அடங்குகின்றனர் எனவும் சிறைச்சாலைகள் தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-22-5)

ஸ்ரீ வீர ஆஞ்சநேயர் ஜோதிட நிலையம்

'பண்டித் ஆஞ்சனப்பா'

இந்தியாவில் இருந்து வருகை தந்த பிரபல ஜோதிடர் கைரேகை, நாம நட்சத்திரம், வெளிநாட்டுப் பயணம், கல்வி, உத்தியோகம் வேறு என்ன பிரச்சினையாக இருந்தாலும் ஒரு முறை இவரைச் சந்தித்துத் தீர்வு காணுங்கள்.

அறை எண்-100 கிறீம்ஸ் ஹோட்டல் அன் றெஸ்ரோறன்ற்,
205, கஸ்தூரியார் வீதி, ராஜா தியேட்டர் சுட்டம், யாழ்ப்பாணம்.
தொ.பே- 0772723004
நேரம் காலை 8 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை



ஸ்ரீ சாயிபாபா ஜோதிடம்

ஜோதிடர் - ராம் தேவ் சுவாமி
தொ.பே : 077 9755542

இந்தியாவிலிந்து வருகைதந்துள்ள சாய்ராம் குருக்களின் சிஷ்யன் ராம்தேவ் சுவாமி கைரேகை, ஜாதகம், முத்துக்கள் மூலம் நல்ல முறையில் சாத்திரம் கூறுவார்.

சந்திக்கும் நேரம் : காலை 8 மணி - பி.ப. 6 மணி வரை.

தொடர்பு -இல: 63, பெரியகடை வீதி,
(சிவகணேசன் ரெக்ஸ் பாதையில்) யாழ்ப்பாணம்.

# மீண்டும் கலப்படப் பெற்றோல்

## குற்றம்சாட்டுகிறார் தயாசிறி ஜயசேகர

கொழும்பு,ஓக.5

தரம் குறைந்த பெற்றோலுடன் புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலைக் கலந்து வாகன உரிமையாளர்களுக்கு அரசு விற்பனை செய்வதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறிஜயசேகர குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புதிய பெற்றோலும் தரம் குறைந்த பெற்றோலுமாக கலப்படம் செய்யப்பட்ட பெற்றோல் கொலன்னாவையிலுள்ள பெற்றோல் தாங்கி 41இல் சேமிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பெற்றோலில் தார் போன்ற பொருள்கள் காணப்பட்டன.

வாகனங்கள் பழுதடைந்தால் மீண்டும் போராட்டம் நடத்துவோம். தரம் குறைந்த பெற்றோல் விநியோகிக்கப்பட்டமை தொடர்பாக வாகன உரிமையாளர்களிடமிருந்து 8,000 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன - என்றார். (ச)

# நீங்கா நினைவலைகள்

ஒன்பதாம் ஆண்டு



அமரர் கந்தையா சிவஞானசுந்தரம்
[இளைப்பாறிய வரி உத்தியோகத்தர்]

முதலாம் ஆண்டு




அமரர் சிவஞானசுந்தரம் தங்கம்
[இளைப்பாறிய ஆசிரியர்]

உலகில் தேட முடியாத சிறந்த செல்வம்
உங்கள் அன்பு ஒன்றே
எம்மை விட்டு வெகுதூரம் நீங்கள் சென்றாலும்
உங்கள் நினைவுகளுடன் வாழ்ந்து
கொண்டிருக்கும் நாம் என்றும் உங்களை மறவோம்

தாவடி தெற்கு, கொக்குவில். (6508) - குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 17 ★ 07 ★ 1940



உதிர்வு 16 ★ 08 ★ 2010

## அமரர் தர்மலிங்கம் தர்மராஜா

(ஓய்வுபெற்ற உதவித் தொழில் ஆணையாளர்
தொழில் திணைக்களம் - வவுனியா)

திதி: 05.08.2011

அன்புக்கோர் இலக்கணமாய் அவனியிலே உதித்தவரே
இன்னலுற்று தவிக்கின்றோம் இடைவழியில் சென்றதெங்கே
வாழ்வுதனில் நாம் உயர ஏணியென இருந்தவரே
விடிவெள்ளி நீங்கள் இப்போ வேறுலகம் புகுந்ததேனோ.

ஓராண்டு ஆனதுவோ அன்புறவை நாம் இழந்து
யுகம் கடந்து போனாலும் மாறிடுமா எம் நிலைமை
நிஜமுகத்தை தேடுகின்றோம் நித்தம் இந்த வாழ்வினிலே
நிழலே இப்போ நிஜமாகி நெக்குருகி நிற்கின்றோம்

உங்களது கடமைகளை உவப்புடனே செய்துவிட்டு
பலன் செழிக்கும் பொழுதினிலே பரனுலகம் புகுந்தவரே
பண்புமிக்க உங்கள் ஆத்மா சாந்திதனை அடைந்திடவே
பிள்ளையார் அருள்புரிய தொழுதுருகி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், உறவினர்.

"தேவி மஹால்",
கோப்பாய் மத்தி. (6518) (45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரத் தடை விதிக்கவே முடியாது

## மன்மோகன் திட்டவட்டம்

டில்லி, ஒக.5

போர்க்குற்றங்களில் ஈடுபட்டமைக்காக இலங்கை மீதுபொருளாதாரத் தடை விதிக்க வேண்டும் என்று தமிழக சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, முதல்வர் ஜெயலலிதா தொடர்ந்து அதனை வலியுறுத்தி வரும் நிலையில், அத்தகைய ஒரு பொருளாதாரத் தடையை விதிக்க முடியாது என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

தன்னை நேரில் சந்தித்துப் பேசிய வைகோவிடம் இதனை வலியுறுத்திய மன்மோகன், அவ்வாறு செய்வது சீனாவுக்கே சாதகமாக அமையும் என்றும் தெரிவித்தார்.

புதுடில்லியில் நாடாளுமன்ற இல்லத்தில் பிரதமரைச் சந்தித்து வைகோ பேசினார். அப்போது ஈழத்தமிழர் விவகாரம் குறித்தும் அவர் பேசினார். தமிழக சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்தும் அவர் பிரதமருக்கு எடுத்துரைத்தார்.

அப்போது இலங்கையுடனான உறவுகளைத் துண்டிப்பதோ அதன் மீது பொருளாதாரத்தடை விதிப்பதோ இயலாத காரியம் என்று மன்மோகன் சிங் தெரிவித்தார் என்று வைகோ கூறி உள்ளார்.

"உறவுகளைத் துண்டிப்பது அல்லது தடை விதிப்பது போன்ற நடவடிக்கைகளால் சீனாவே பயன்பெறும். இந்தியாவின் மூலோபாய மற்றும் வர்த்தகப் பங்காளரான இலங்கையைவிட்டு விலகும் போது ஏற்படும் வெற்றிடத்தை சீனா இலகுவாக நிரப்பிக் கொள்ளும்" என்றும் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார். (வ)

# கொள்ளையர்களை எரித்து கொலை செய்த கிராம மக்கள்.

## கர்நாடகத்தில் பயங்கரம்

ஆந்திரா, ஒக.5

ஆந்திராவில் இருந்து கொள்ளையடிக்க காரில் வந்த 11 கொள்ளையர்களில் 5 பேரை கர்நாடக கிராம மக்கள் அடித்தும் 6 பேரை உயிருடன் காரில் வைத்து எரித்தும் கொலை செய்துள்ளனர்.

கர்நாடகாவில் உள்ள சிக்பள்ளாபுரா மாவட்டத்தில் சந்தேகத்துக்குரிய வகையில் யாராவது நடமாடினால் அவர்களை கொள்ளையர்கள் என நினைத்து பொதுமக்கள் தாக்கும் சம்பவம் அதிகரித்து வருகிறது. அதேபோல், காரில் வந்த கொள்ளையர்கள் 11 பேரை பொதுமக்கள் கொலை செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த மாவட்டத்தில் உள்ள பச்சபார்லபள்ளி கிராமத்தில் திருமாலம்மா என்ற பெண் கடந்த செவ்வாய்க்கிழமை தோட்டத்துக்குச் சென்று கொண்டிருந்தார். அவரை கார் ஒன்று வழி மறித்தது. அதிலிருந்து இறங்கிய 11 பேர், அவர் அணிந்திருந்த நகைகளைப் பறித்தனர். அந்தப் பெண் சத்தமிட்டதை அடுத்து அயலிலுள்ள தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் ஓடிவந்தனர். அதைப் பார்த்ததும் கொள்ளை கும்பல் காரில் ஏறி தப்ப முயன்றது. அதன்போது, 5 பேர் சிக்கினர்.

அவர்களை பொதுமக்கள் சரமாரியாகத் தாக்கினர். அதில் 3 பேர் அங்கேயே இறந்தனர். 2 பேர் பலத்த காயங்க ளுடன் மயக்கம் அடைந்தனர். இந்தத் தகவல் எல்லா இடமும் பரவியதை அடுத்து ஏனைய கிராம மக்களும் காரில் துப்பிய ஏனைய கொள்ளையர்களைத் தேடிச் சென்றபோது யர்ரகோட்டா என்ற இடத்தில் கார் நின்றிருப்பதைப் பார்த்ததும், மக்கள் அதைச் சுற்றி வளைத்தனர். இதை பார்த்ததும் காரில் ஏறி கொள்ளையர்கள் தப்ப முயன்றனர். அதற்குள் காருக்கு மக்கள் தீ வைத்தனர். அதில், காரில் இருந்த 6 பேரும் வெளியே வர முடியாமல் கருகி இறந்தனர். (வ)

# பயங்கரவாத பேராபத்து நிறைந்த நாடாக இந்தியா!

உலக நாடுகளில் பயங்கரவாத ஆபத்து உச்ச நிலையில் காணப்படுகின்ற நாடுகளில் ஒன்றாக இந்தியா அடையாளம் காணப்பட்டுள்ளது. பயங்கரவாத ஆபத்து சுட்டெண் - 2011 ஐ வெளியிட்டு உள்ளது. பிரிட்டன் ஆய்வு நிறுவனங்களில் ஒன்றான மப்லெக்ரோவ் (Maplecroft). கடந்த ஏப்ரல் முதலாம் திகதிக்கு முன்னரான 12 மாத நிலைமைகளை கருத்தில்கொண்டு இந்தச் சுட்டெண் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதில் 197 நாடுகளின் பயங்கரவாத ஆபத்து நிலைமைகள் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. 20 நாடுகள் பேராபத்து நிறைந்தவையாகக் காட்டப்பட்டுள்ளன. இதில் இந்தியா 17 ஆவது இடத்தில் உள்ளது. பாகிஸ்தான் இரண்டாவது இடத்தில் உள்ளது.

ஓரளவு ஆபத்து நிறைந்த நாடுகளில் ஒன்றாக பிரிட்டன் 38ஆவது இடமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையைக் காட்டிலும் பிரிட்டன், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் பாதுகாப்பற்றவை, பயங்கரவாத ஆபத்து உடையவை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## பகைமையை மறந்து..



கர்நாடகா ராஜ்பவனில் நடந்த், லோக் ஆயுக்தா புதிய நீதிபதிகள் பதவியேற்பு விழாவில் கலந்துகொண்ட முதல்வர் எடியூரப்பா, தன் பதவி பறிபோக காரணமானவரான லோக் ஆயுக்தா ஓய்வுபெற்ற நீதிபதி சந்தோஷ் ஹெக்டேவுடன் கை குலுக்கினார். (வ)

# போலி ஆவணம் கொடுத்து லைசன்ஸ் பெற முயன்ற மேலும் ஒரு பைலட் கைது

டில்லி, ஒக.5

வர்த்தக விமான பைலட் லைசென்ஸ் பெறுவதற்காக போலி ஆவணங்களை சமர்ப்பித்ததாக எழுந்த முறையீட்டால் மேலும் ஒரு பைலட் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

இவருடன் சேர்த்து இதுவரை கைது செய்யப்பட்டவர் களின் எண்ணிக்கை 21 ஆக அதிகரித்துள்ளது. ஜெதீஷ்படேல் என்பவர் போலி ஆவணங்களை கொடுத்து பைலட் 'லைசென்ஸ்' பெற்றதாக உள்நாட்டு விமானப் போக்குவரத்து இயக்குநரகத்திற்கு முறையீடு வந்தது. இதைத் தொடர்ந்து அவர் நேற்று கைது செய்யப்பட்டார். இந்த 'லைசென்ஸ்' பெறுவதற்காக மத்தியஸ் தராக இருந்த இரண்டு பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் இடம்பெற்ற விசாரணைகளின் போது தான் மேற்படி போலி ஆவணங்களை காண்பித்து பைலட் லைசென்ஸ் பெற்று தந்துள்ளமை தெரியவந்துள்ளது. (வ)

# அ.தி.மு.கவை விட ஈழத்தமிழருக்கு தி.மு.க.தான் அதிகமாக உதவியது

## கருணாநிதி

அ.தி.மு.கவை விட தி.மு.க. ஈழத் தமிழர்களுக்கு அதிகமான உதவிகளை வழங்கியுள்ளதாக தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தமிழக முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கை தமிழர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் முதல்வரின் திட்டத்தை தாம் வரவேற்பதாக அவர் வெளியிட்ட அறிக்கை யிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்திலும் இலங்கைத் தமிழர்களுக்கு பல்வேறு உதவித்திட்டங்களையும் வழங்கியுள்ளது. அ. தி. மு. காவை விடவும், தி. மு. க, இலங்கை அகதிகளுக்கு அதிகம் செலவு செய்துள்ளது. இந்த நிலையில், தற்போது தமிழக முகாம்களில் 5 ஆயிரத்து 544 இலங்கை அகதிகள் தங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# தனித் தெலுங்கானா கோரி ஒக.8 இல் ஆர்ப்பாட்டம்

நகரி, ஒக.5

ஆந்திராவைப் பிரித்து தனி மாநிலம் அமைக்கக் கோரி எதிர்வரும் 8 ஆம் திகதி முழுமையாக கதடைப்புப் போராட்டம் நடைபெறவுள்ளதாக தெலுங்கானா கூட்டு நடவடிக்கை குழு தலைவர் பேராசிரியர் கோதண்டராம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில்:

தெலுங்கானா தனி மாநில போராட்டத்தை முடக்க மத்திய-மாநில அரசுகள் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டன. ஆனால் அவர்களது முயற்சி எதுவும் பலிக்கவில்லை. எதிர்வரும் 8 ஆம் திகதி முழு அடைப்பு போராட்டம் நடத்த முடிவு செய்துள்ளோம்.

இப்போராட்டத்துக்கு தெலுங்கானா மக்கள் அனைவரும் ஆதரவு தர வேண்டும். எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் தெலுங்கானா முழுவதும் ஸ்தம்பிக்கும் வகையில் அனைத்து அரசு ஊழியர்களும் காலவரையற்ற போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என்றார். (வ)

# இந்தியாவின் கனிம வளத்தைச் சுரண்டுகிறது சீனா கடல் பாதுகாப்பும் கேள்விக்குறியான நிலையில்!

இந்தியப் பெருங்கடலில் சீனா கனிம வளங்களைச் சுரண்டும் பணியில் ஈடுபட்டுள்ளதால் இந்தியாவின் கடல் சார் நடவடிக்கைகளை சீனா கண்காணிக்கும் நிலைமை உருவாகியுள்ளது. இதனையிட்டு இந்தியா கவலையடைந்துள்ளது.

இந்தியப் பெருங்கடலில் சுமார் 10,000 சதுர கி.மீ பரப்பளவில் பாலிமெடாலிக் சல்பைட் கனிமங்களை சீனா தோண்டியெடுக்க உள்ளது. இந்தியாவை அண்மித்த தென் மேற்கு இந்தியப் பெருங்கடலில் மேற்படி கனிமங்களைத் தேடவும், அதை தோண்டியெடுக்கவும் சீனாவுக்கு சர்வதேச கடல் படுகை ஆணையம் அனுமதியளித்துள்ளது. இந்தத் தகவலை சீனாவின் கடல் தாதுக்கள் ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

சர்வதேச கடல் படுகை ஆணையத்துடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தின் படி எதிர்வரும் 15 ஆண்டுகளுக்கு சீனா இந்த 10,000 சதுர கி.மீ பரப்பளவு கொண்ட பகுதியில் கடலுக்கடியில் கனிமங்களைத் தோண்டலாம்.

மேலும் கிழக்கு பசிபிக் கடலில் 75,000 சதுர கி.மீ. பரப்பளவிலும் கனிமங்களை எடுக்க சீனாவுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.மேற்படி அனுமதி கிடைத்தவுடன்பசிபிக் கடலில் தனது ஆழ்கடல் ஆய்வுக் களத்தை இறக்கிவிட்டு விட்டது சீனா. நேற்று முன்தினம் 5,180 மீற்றர் ஆழத்தை எட்டிவிட்ட இந்தக் கலத்தில் 3 ஆராய்ச்சியாளர்கள் உள்ளனர்.

இதையடுத்து இந்தியா பெரும் கவலையடைந்துள்ளது. கனிம ஆராய்ச்சி என்ற பெயரில் இந்தியப் பெருங்கடலில் இந்தியாவை ஒட்டிய பகுதிகளில் சீனாவின் கடற்படை கப்பல்கள் சுற்றி வரும். இந்தப் பகுதியின் கனிமப் படிமங்கள் குறித்த அனைத்து விவரங்களும் சீனா வசம் போகும். மேலும் இந்தப் பகுதியில் நடமாடும் இந்திய நீர்மூழ்கிக் கப்பல்களின் ரகசிய நடமாட்டத்தையும் சீனாவால் இனி கண்காணிக்க முடியும்.

இது குறித்த தனது கவலையை இந்திய கடற்படையின் உளவுப் பிரிவு மத்திய அரசிடம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு நாம் ராணுவ உதவி செய்யாவிட்டால் சீனா போய் உதவி செய்துவிடுமே என்ற கவலை உள்ள மத்திய அரசுக்கு, எமது நாட்டுக்கு அருகிலேயே சீனா கடலைத் தோண்ட ஆரம்பித்துள்ளது குறித்து கவலையில்லை போலிருக்கிறது. இதனால் இந்த விடயத்தில் இதுவரை மத்திய அரசு வாயே திறக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுப்பாட்டு விலையை மீறுவோருக்கு எதிராக நுகர்வோர் அதிகாரசபை சட்ட நடவடிக்கை

## அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தகவல்

கொழும்பு, ஒக 5

கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள பொருள்களை அதிக விலைக்கு விற்பனை செய்தல் அல்லது பொருள்களைப் பதுக்கி வைத்துள்ள வர்த்தகர்களுக்கு எதிராகத் தாமதமின்றி சட்ட நடவடிக்கை எடுக்குமாறு நுகர்வோர் அதிகார சபைக்கு அமைச்சர் ஜோன்ஸ்டன் ரெணான்டோ பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன் பிரகாரம் கோழி இறைச்சி, பால்மா, அரிசி மற்றும் எரிவாயு ஆகிய பொருள்களைக் கூடுதல் விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் தெரிவித் துள்ளார். நுகர்வோரைப் பாதுகாப்பதற்காகவே நிர்ணய விலை விதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவும் காலத்தில் மாத்திரமல்லாது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிர்ணய விலையை விடக் கூடுதல் விலையில் பொருள்களை விற்பனை செய்பவர்களுக்கு எதிராகக் கடும் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

ஒரு கிலோகிராம் சம்பா அரிசி 70 ரூபாவுக்கும் நாட்டரிசி 60 ரூபாவுக்கும் சிமெந்து 750 ரூபாவுக்கும் கோழி இறைச்சி 350 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட வேண்டுமென விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். அத்துடன் பால்மா மற்றும் எரிவாயு ஆகியவற்றின் விலைத் திருத்தங்களை மேற்கொள்வதற்காக நுகர்வோர் அதிகார சபையின் அனுமதியை பெற வேண்டியுள்ளது என வும் அவர் மேலும் தெரிவித்தார். (ற)

# புகை கக்கியபடி கிளிநொச்சிக்கு புறப்பட்ட பஸ் பளையில் நின்றது

## இடைவழியில் பயணிகள் தத்தளிப்பு

யாழ்ப்பாணம், ஒக.5

யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சிக்கு சென்றுகொண்டிருந்த கிளிநொச்சி டிப்போவுக்குச் சொந்தமான பஸ் பழுதடைந்த நிலையில் பளையில் நின்றதால் கிளிநொச்சிக்குச் சென்ற பயணிகள் நடுவழியில் வீதியில் காத்துக்கிடக்க நேரிட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

62 -8335 இலக்கம் கொண்ட இந்த பஸ்ஸை பழுதடைந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சிக்குக் கொண்டு சென்றுள்ளனர். அவ்வாறு செல்லும்போது பயணிகளையும், ஏற்றிச் செல்லுமாறு அதிகாரிகள் பணித்திருந்ததாக அறிய முடிந்தது.

பயணிகள் பளைப் பகுதியில் நீண்ட நேரம் காத்திருந்து அந்த பஸ்ஸில் மீண்டும் பயணம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பஸ்ஸின் இருக்கைகள் அனைத்தும் மிக மோசமான முறையில் சேதமடைந்து இருந்ததாகவும் பஸ் புறப்படும்போதே இயந்திரப் பகுதியில் இருந்து புகை கிளம்பியதாகவும் இதனால் பயணிகள் பெரும் சிரமத்துடனேயே பளை வரையும் பயணித்ததாக பாதிக்கப்பட்ட ஒருவர் தெரிவித்தார்.

இந்த விடயம் பற்றி கிளிநொச்சி டிப்போவுக்கு நேரில் சென்று அங்கிருந்த அதிகாரியிடம் பயணிகள் கேட்ட போது; யாழ்ப்பாணத்தில் திருத்தப்பட்ட பின்னர்தான் இந்த பஸ் கிளிநொச்சிக்குக் கொண்டுவரப்பட்டதாக கூறிச் சமாளித்துள்ளார். (ஒ-எ)

# நாள் பாடசாலை சனிக்கிழமை

யாழ்ப்பாணம், ஒக.5

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தால் நடத்தப்படும் நுண்நிதியியல் கற்கைநெறி மாணவர்களுக்கான நாள் பாடசாலை நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறும் என்று யாழ். பிராந்திய நிலையத்தின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (எ)




வலி.வடக்கு, ஒக.5

அளவெட்டி கணேஸ்வரம் குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலய பெருந்திருவிழா நேற்று வியாழக்கிழமை மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழாக்கள் நடைபெறும்.

திருவிழாக் காலங்களில் தினமும் காலை 8.30 மணிக்கு விஷேட பூசையும், முற்பகல் 10.15 மணிக்கு கொடிக்கம்பப் பூசையும் இடம்பெறும் அதனைத் தொடர்ந்து சமயச் சொற்பொழிவும் இடம்பெறும். (ற-86)

***

வட்டுக்கோட்டை கிழக்கு துறட்டிப்பனை அம்மன் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் இந்த அலங்காரத் திருவிழாவின் எதிர்வரும் 12 ஆம்திகதி தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (ற-29)

***

தாவடி அம்பலவாண கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழா நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 12 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறும்.

எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து 9 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். திருவிழா வழிபாடுகளை சபரிமலை ஆலய பிரதமகுரு பிரம்ம ஸ்ரீ தாணு வாசுதேவ சிவாச்சாரியார் நிகழ்த்துவார். (ற)

***

சங்கானை செங்கற்படை மகாதேவப் பிள்ளையார் ஆலயத்தின் பெருந்திருவிழா நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 11 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறும்.

எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.திருவிழாப் பூசைகள் சுன்னாகம் க[illegible] தின் பிரதம குரு[illegible] கள் நிகழ்த்துவார். (ற)

# ஆசிரியருக்கு ஆங்கிலப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஒக.5

வடக்கு மாகாண கல்வித் திணைக்களம், யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தும் ஆங்கில ஆசிரியர் கலல்லாத ஆசிரியர்களுக்கான ஆங்கில மொழிப் பயிற்சியின் ஆரம்ப நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ம-313)




# சிறுவர் பூங்கா முன்பள்ளியும் குழந்தைகள் காப்பகமும்

## Kids Park Pre School & Day Care Center

அநேக வேலை செய்யும் தாய், தந்தையர்களின் வேண்டுகோளுக்கிணங்க! யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக காலை 7.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை முன்பள்ளி சிறுவர் -காப்பக சேவையை வழங்கி வருகின்றோம்.







★ சர்வதேச தரம் வாய்ந்த வகுப்பறைகள், செயற்பாட்டறைகள், நூலகம், சுகாதார ஆய்வும் பரிகாரமும் பிரிவு, வணக்க மண்டபம், உள்ளக விளையாட்டுத் திடல், மேல்மாடி உபகரண காட்சி மண்டபம், வெளியக விளையாட்டுத்திடல், ஓய்வு அறை, உறங்கும் அறைகளில் சிறார்கள் வளர்க்கப்படுகின்றார்கள்! மகிழ்ச்சிகரமாகக் கற்பிக்கப்படுகின்றார்கள்!!

★ சிறார்களுக்கும் - குழந்தைகளுக்கும் மிகப்பாதுகாப்பான சூழலில் ஆங்கிலம், தாய்மொழி மூலப் பயில்வுகள் 2⁺Play group, 3⁺ Montessori, 4⁺ Pre School தனித்தனியான கவனிப்புடன் விளையாட்டு ஆடல், பாடல், களிமண் பிசைவிலிருந்து கணினிக்கற்கை வரை

★ முறையான பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு! அரவணைப்பு!!

★ ஆரம்பக்கல்வி - முன்பள்ளி சிறார்கள் 12.30 - 5 மணிவரை உண்டு உறங்கி- மகிழ்வாகக் கற்று விளையாட- 'சிறுவர் காப்பகம்'

★ வரையறுக்கப்பட்ட இடங்களே உண்டு! ஒகஸ்ட் 20 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். ஒக்ரோபர் விஜயதசமி ஏடு தொடக்கப்படுவதுடன் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன....

தொடர்புகளுக்கு: 0779360607

**சிறுவர் பூங்கா முன்பள்ளியும் குழந்தைகள் காப்பகமும்**

இல. 528, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

பா.தனபாலன், பணிப்பாளர்.
Dip. in Pre School Education (Distinction)
M.Phil in Pre School Education
Dip. in Psy 1st Class, B.A. (Cey), PGDE (Merit)
Cert in Vocational Guidance (Singapore)

யாழ்.மண்ணில் முதன்முறையாக; ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவனத்துடனும் கனடிய சிறுவர் பராமரிப்பு ஆலோசனை நிலையத்துடனும் இணைந்து
★ சிறுவர் பராமரிப்பு டிப்ளோமா (O/L சித்தியடைந்தவர்)
★ சிறுவர் பராமரிப்புச் சான்றிதழ் (O/L சித்தியடையாதோர்)

பாடநெறிகள் ஒகஸ்ட் மாதத்தில் ஆரம்பமாக உள்ளன. வேலைவாய்ப்பை விரும்புவோர், திருமணமாகாமல் இருப்போர், ஆளுமையை வளர்க்க விரும்பும் பெண்கள் ஒகஸ்ட் 15 ஆம் திகதிக்கு முன் தம் சுயவிவரங்களுடன் பின்வரும் முகவரிக்குத் தபால் மூலம் விண்ணப்பிக்கவும்.

பணிப்பாளர்,
**சிறுவர் பூங்கா முன்பள்ளியும் குழந்தைகள் காப்பகமும்**
இல. 528, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 0779360607

குழந்தைகள் - சிறுவர்கள் பராமரிப்பில் அர்ப்பணிப்பும் பயிற்சியும் ஆளுமையும் ஒழுக்கமும் உடைய பணியாளர்கள் தேவைப்படுவோர் எம்முடன் தொடர்பு கொள்ளமுடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெய்ரோவில் விசாரணை ஆரம்பம்; குற்றங்களை மறுத்தார் முபாரக்

கெய்ரோ,ஒக.5

எகிப்து முன்னாள் அதிபர் ஹோஸ்னி முபாரக், அவரது இரு மகன்கள் மீதான விசாரணை நேற்றுமுன்தினம் அந்தநாட்டின் தலைநகர் கெய்ரோவில் நடந்தது இதன் போது தன் மீதான குற்றங்களை முபாரக் மறுத்தார். இதையடுத்து, விசாரணை இந்த மாதம் 15ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

எகிப்தில், கடந்த ஜனவரி மாதம் அப்போதைய அதிபர் முபாரக்கிற்கு எதிரான போராட்டம் தொடங்கியதைத் தொடர்ந்து பெப்ரவரி 11 ஆம் திகதி, முபாரக் பதவி விலகினார். மக்கள் போராட்டத்தில் பொலிஸார் நடத்திய தாக்குதலில் 850 பேர் பலியாகினர். ஆயிரக் கணக்கானோர் காயம் அடைந்தனர்.

அதேநேரத்தில், மக்கள் போராட்டத்தின் போது, பொலிஸாரை ஏவி அவர்களை கொன்றதாகவும், அதிகார துஷ்பிரயோகத்தால் சொத்து சேர்த்ததாகவும், முபாரக் மற்றும் அவ ரது இரு மகன்கள் அலா மற்றும் கமால் மீதும் வழக்குகள் போடப்பட்டன.மூவரும் ஷரம் எல் ஷேக்கில் கைது செய்யப்பட்டு மகன்கள் அடைக்கப்பட்டனர். முபாரக் மருத்துவமனையில் காவலில் வைக்கப்பட்டார். தொடர்ந்து அவர் மீதான விசாரணை நேற்றுமுன்தினம் தொடங்கும் என, சமீபத்தில் அந்தநாட்டு நீதியமைச்சகம் அறிவித்தது.

இதையடுத்து, நேற்று முன்தினம் ஹெலிகொப்டர் மூலம் முபாரக் மற்றும் அவரது மகன்கள் கெய்ரோவுக் குக் கொண்டு வரப்பட்டனர். அங்கு பொலிஸ் அகடமியில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட நீதிமன்றில் மூவரும் ஆஜர் படுத்தப்பட்டனர்.

நீதிமன்ற வளாகத்துக்கு வெளியே, முபாரக்கின் ஆதரவாளர்களும், எதிர்ப்பாளர்களும் நூற்றுக்கணக்கில் கூடி ஆர்ப்பாட்டம் செய்தனர். ''முபாரக்கிற்குத் தண்டனை விதித்தால் நீதிமன்றத்தையும் சிறைச்சாலையையும் கொளுத்துவோம்'' என ஆதரவாளர்கள் கோஷம் எழுப்பினர். இதையடுத்து, இரு தரப்பினருக்கும் மோதல் வெடித்தது. விசாரணையை தேசிய தொலைக்காட்சி நேரடியாக ஒளிபரப்பியது.

வெள்ளை உடையில் நீதிமன்றக் கூண்டுக்குள் படுக்க வைக்கப்பட்டிருந்த முபாரக், விசாரணையின் போது , பொலிஸாரை ஏவி மக்களைக் கொன்றதான குற்றச்சாட்டுகள் அனைத்தையும் மறுக்கிறேன்'' என்று தெரிவித்தார். தொடர்ந்து, அவரது மகன்களும் தங்கள் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்தனர். இதையடுத்து நீதிபதி இம்மாதம் 15ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார். பொலிஸ் அகடமியில் உள்ள ராணுவ மருத்துவமனையில் முபாரக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

# முஸ்லிம் பெண்களின் பர்தாவுக்கு இத்தாலியிலும் தடை வருகிறது

ரோம், ஒக.5

முஸ்லிம் பெண்கள் அணியும் பர்தா ஆடைக்கு பெல்ஜியம், பிரான்ஸ் தடை விதித்து உள்ளது. அந்த வரிசையில் இத்தாலியும் தற்போது இடம்பெற்றுள்ளது.

முகத்தை மூடும் பர்தா ஆடைகளால் பாதுகாப்புப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன எனத் தடை விதிக்கும் நாடுகள் காரணம் கூறுகின்றன.

கோடைகால விடுமுறைக்குப் பின்னர் பர்தாவுக்குத் தடை விதிப்பது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும் என நாடாளுமன்றம் தெரிவித்துள்ளது.

இத்தாலியின் மத்திய வலது கூட்டணியான பிரதமர் பெர்லுஸ்கோனி அரசு இந்த பர்தா தடைக்கு முழு ஆதரவு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இத்தாலி அரசியலமைப்பு விவகாரக்குழு கூறுகையில்:

''இந்த பர்தா தடை மசோதா கருத்தை முதலில் குடியேற்றத்திற்கு எதிரான வடக்கு லீக் அமைப்பு தெரிவித்து இருந்தது.

இந்தத் தடைச்சட்டம் குறித்து செப்ரெம்பர் மாதம் விவாதிக்கப்படும்'' என தெரிவித்தது.

பெர்லுஸ்கோனிக்கு இத்தாலி நாடாளுமன்றத்தின் மேல் மற்றும் கீழ் சபைகளில் பெரும்பான்மை உள்ளது.

எனவே முஸ்லிம் பெண்கள் இத்தாலியில் பர்தா அணிய தடைவிதிக்கப் படுவது உறுதியாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரான்சில் இந்த ஆண்டு தொடக்கத்தில் பர்தா ஆடைகளுக்குத் தடைவிதிக்கப்பட்டது. இத்தாலியில் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் உள்ளனர். இருப்பினும் முஸ்லிம் பெண்கள் முழு பர்தா அணிவது மிக அரிதான ஒன்றாக காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

# ஜப்பான் தாக்குதல் வாக்கு மூலங்கள் 7 மொழிகளில் மொழியாக்கம்

டோக்கியோ,ஒக.5

கடந்த 1945 ஆண்டில் ஜப்பானின் இரு நகரங்கள் மீது அமெரிக்கா நடத்திய அணு குண்டுத் தாக்குதலில் உயிர் பிழைத்தவர்களின் வாக்குமூலங்களை, ஏழு மொழிகளில் மொழியாக்கம் செய்து ஜப்பான் அரசு வெளியிட்டுள்ளது. வருங்காலத் தலைமுறையினருக்கு, கடந்த காலத்தில் நடந்ததை தெரிவிக்கவும், அணு ஆயுதங்கள் இல்லாத உலகை உருவாக்கவும் இந்த வெளியீடு உதவும் என ஜப்பான் நம்பிக்கை தெரிவித்துள்ளது.



துருக்கி தலைநகர் அன்காரா நகருக்கு வந்த கஜகஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் எர்ஜான் கஜானவ்(இடது), அந்தநாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் அஹமத் டவுடோக்லு உடன் பத்திரிகையாளர் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

# 1.2 பில்லியன் டொலர் மதிப்பீட்டில் உலகின் மிக உயர்ந்த கட்டடம்

துபாய்,ஒக.5

உலகின் மிக உயர்ந்த கட்டடம் ஒன்றை ஜெட்டா நகரில் கட்டுவதற்கு, 1.2 பில்லியன் டொலர் மதிப்பீட்டில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

'கிங்டம் டவர்' என்ற பெயரில் உருவாக்கப்படும் இந்தக் கட்டடம், 1,000 மீ., உயரம் கொண்டதாக அமையவுள்ளது. ஜெட்டாவின் வடபகுதியில், 20 பில்லியன் டொலர் செலவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் 'கிங்டம் சிட்டி' நகரின் மையப் பகுதியில் இந்தக் கட்டடம் நிறுவப்படுகிறது.

# தண்ணீரில் நடக்கும் அதிசய ரோபோ; சீன விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்பு

பீஜிங், ஒக5

தண்ணீரில் நடக்கும் அதிசய ரோபோவைக் கண்டுபிடித்து சீன விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர்.சீனாவை சேர்ந்த ஷிஜியாங் பல்கலைக்கழகத்தின் கெமிக்கல் என்ஜினீயரிங் பேராசிரியர் குயின்மின்பான் தலைமையிலான குழுவினர் இந்த ரோபோவைக் கண்டுபிடித்துள்ளனர்.

பூச்சி போன்று வடிவமைக்கப்பட்டுள்ள இந்த ரோபோவால் தண்ணீரில் நடக்க மட்டுமின்றி ஓடவும் முடியும். தண்ணீரில் நடக்கும் ரோபோவுக்கு அசையக்கூடிய தடுப்புகள் போன்ற 2 கால்கள் பொருத்தப்பட்டுள்ளன. அதுதவிர தண்ணீரை நீந்திக் கடக்கக் கூடிய வகையில் வயர்களால் ஆன 10 கால்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இவைகளை இயக்கக் கூடிய வகையில் 2 மிக சிறிய இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. மிகவும் எடை குறைவானது. தண்ணீரில் மூழ்கி மீண்டும் மேல் எழுந்து வரக்கூடியது.

இதுபோன்ற ரோபோக்கள் ராணுவ உளவுப் பணிக்கும், தண்ணீரில் மாசு ஏற்பட்டிருப்பதைக் கண்டறியவும் மற்றும் பல செயற்பாடுகளுக்கும் பயன்படும் என விஞ்ஞானிகளும் ஆராய்ச்சியாளர்களும் தெரிவித்துள்ளனர்.

# இந்தோனேஷியாவில் ஹெலி விபத்து; 10 பேர் பலி

ஆஸ்திரேலிய சுரங்க நிறுவனத்துக்கு சொந்தமான ஹெலிகொப்டர் ஒன்று இந்தோனேசியாவின் கிழக்குப் பகுதியில் மலை ஒன்றின்மீது மோதி விபத்துக்குள்ளானது.இதில் அந்த ஹெலிகொப்டரில் பயணம் செய்த 10 பேர் உயிரிழந்தனர்.

சுலாவேசி தீவில் இருந்து அந்த ஹெலிகாப்டர் நேற்றுமுன்தினம் மாலை புறப்பட்ட சிறிது நேரத்திலேயே தொலைத் தொடர்பு கட்டுப்பாட்டை இழந்தது.

பின்னர் மீட்புக் குழுவினர் நேற்று அதிகாலை 2 மணியளவில் அந்த ஹெலிகொப்டரின் உடைந்த பகுதிகளைக் கண்டு பிடித்தனர். ஹெலிகொப்டரில் இருந்தவர்களில் ஒருவர் மட்டுமே உயிர்பிழைத்திருந்ததாகவும், அவரும் பின்னர் மருத்துவமனையில் உயிரிழந்துவிட்டதாகவும் மீட்புக் குழுவினர் தெரிவித்தனர்.

# ஈராக்கில் இந்தாண்டு இறுதிவரை அமெ.படைகளின் பயிற்சி நீடிக்கும்

## அந்நாட்டு அரசியல் தலைவர்கள் ஒப்புதல்

பாக்தாத்,ஒக.5

ஈராக்கில் தற்போதுள்ள அமெரிக்கப் படைகள், இந்தாண்டு இறுதி வரை தங்கியிருந்து, ஈராக் படைகளுக்கு பயிற்சி அளிப்பதற்கு அந்தநாட்டு அரசியல் தலைவர்கள் ஒப்புதல் அளித்துள்ளனர்.

ஈராக்கில், போர் முடிந்த பின் எட்டு ஆண்டுகளாக அமெரிக்கப் படைகள் தொடர்ந்து தங்கியுள்ளன. இது, அந்தநாட்டின் அரசியல் தலைவர்களிடையே கருத்து முரண்பாடுகளை எழுப்பியது. இந்தநிலையில், 2008 இல் மேற்கொண்ட இருதரப்பு ஒப்பந்தத்தின்படி, 2011 இறுதி முதல், அமெரிக்கப் படைகள் ஈராக்கில் இருந்து வெளியேற வேண்டும் என உறுதி செய்யப்பட்டது.

இதற்கிடையில், கடந்த சில மாதங்களாக ஈராக்கில் தீவிரவாதத் தாக்குதல் அதிகரித்து வருவதை அடுத்து, அமெரிக்கா தன், 10 ஆயிரம் வீரர்களை அங்கு தொடர்ந்து தங்கி, ஈராக் படைகளுக்கு பயிற்சி அளிப்பர் எனத் தானாக முன்வந்து தெரிவித்தது. அமெரிக்காவின் இந்த அறிவிப்பு, ஈராக் தலைவர்களிடையே மீண்டும் கருத்து முரண்பாடுகளை எழுப்பியது. நேற்று முன்தினம், அரசு மற்றும் அரசியல் தலைவர்களிடையே நடந்த ஐந்து மணி நேரப் பேச்சில், இந்தாண்டின் இறுதி வரையில் அமெரிக்கப் படைகள் ஈராக்கில் தங்கியிருக்க அனுமதி வழங்கலாம் என முடிவெடுக்கப்பட்டது.

இந்த முடிவை செய்தியாளர்களிடம் அறிவித்த ஈராக் வெளியுறவு அமைச்சர் ஹோஷ்யார் ஜெபாரி, 'அமெரிக்கப் படைகள் இங்கு இன்னும் நீண்ட நாள் தங்குவதில் பல பிரச்சினைகள் உள்ளன.

எனினும், இந்த ஆண்டின் இறுதியில் அமெரிக்கப் படைகள் ஈராக்கில் இருந்து வெளியேற வேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது'' என்றார். பாக்தாத்தில் உள்ள அமெரிக்கத் தூதரகம், ஈராக்கின் முடிவை பரிசீலிப்பதாகத் தெரிவித்துள்ளது.

# முதன் முறையாக பிளாஸ்டிக் இதயம் பொருத்தி மருத்துவர்கள் சாதனை

இதயப் பிரச்சினையால் உயிருக்கு போராடிக் கொண்டிருந்த மாத்யூ கிறீன் ( வயது-40) என்பவருக்கு கேம்ப்ரிட்ஜ் ஷயரில் உள்ள பொப் வொர்த் மருத்துவமனையில் சத்திர சிகிச்சை மூலம் செய்யப்பட்டு பிளாஸ்டிக் இதயம் பொருத்துப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது.பிரிட்டனில் முதன் முறையாக முழு செயற்கை இதயம் பொருத்தப்பட்ட நபராக மாத்யூ கிறீன் உள்ளார்.

பிளாஸ்டிக் இதயம் எனது வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது என மாத்யூ கிறீன் பெருமிதத்துடன் கூறுகிறார். பிளாஸ்டிக் இதயம் பொருத்தப்பட்ட அவரால் நடக்க மட்டுமல்ல, ஏறி இறங்கவும் முடிகிறது.

இந்த பிளாஸ்டிக் இதயம் உரிய நேரத்தில் பொருத்தப்படாவிட்டால் நீண்ட காலம் வாழமுடியாத நிலை இருந்தது என மருத்துவ ஆலோசகர் ஸ்டீவன் கய் கூறினார். மாத்யூ உடல் நிலை மிக மோசமாக சென்ற நிலையில் இந்த செயற்கை இருதயத்தை பொருத்துவது குறித்து மருத்துவர்கள் அவசர ஆலோசனை நடத்தி மேற்கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளிடையே துடுப்பாட்டம்; 9 விக்கெட்டுக்களால் ஸ்கந்தா வென்றது

யாழ்ப்பாணம், ஓக.5

இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தால் நடத்தப்படும் 15 வயதின் கீழ அணியினரிடையேயான போட்டியில் ஸ்ரான்லிக் கல்லூரியைச் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி 9 விக்கெட்டுக்களால் வென்றது.

ஸ்ரான்லிக் கல்லூரியில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய ஸ்ரான்லி அணி 36.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது.

இந்த அணி சார்பாக சுஜிகரன், காமின்ஸ் ஆகியோர் தலா 23 ஓட்டங்களைப் பெற்றனர். ஸ்கந்தா அணியின் பந்து வீச்சில் ஷி.பிரசாத் 10 ஓவர்களில் 33 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் எம்.சுவிற்றன் 5.2 ஓவர்களில் 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 9 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் கேதியோன் 10 ஓவர்களில் 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 17 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் 127 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா அணியினர் 28.5 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மட்டும் இழந்து 129 ஓட்டங்களைப் பெற்று 9 விக்கெட்டுகளால் இலகுவான வெற்றியைப் பெற்றனர்.

ஸ்கந்தா அணியின் துடுப்பாட்டத்தில் எம்.சுவிற்றன் 34 ஓட்டங்களைப் பெற்றார். ஜி.பிரசாத் , எஸ். நிரோஜன் ஆகியோர் ஆட்டமிழக்காது முறையே 32, 10 ஓட்டங்களைப் பெற்றனர். ஸ்ரான்லி அணியின் பந்து வீச்சில் வீழ்த்தப்பட்ட ஒரே விக்கெட்டை மதுசன் கைப்பற்றினர்.

15 வயதுக்குட்பட்ட ஸ்கந்தா அணி, தான் பங்குபற்றிய 5 போட்டிகளில் 4 இல் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குச் செல்வதற்கான வாய்ப்பைத் தட்டிக் கொண்டது. (ம-55)

# மின்னொளியில் கரபந்தாட்டம் மட்டுவில் வளர்மதி, ஐங்கரன் வெற்றி

யாழ்ப்பாணம், ஓக.5

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 56 ஆவது நிறைவை முன்னிட்டு கைதடி மின் ஒளி விளையாட்டுக் கழகம் மாவட்ட ரீதியில் நடத்தும் மின் ஒளியிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம், மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழகம் ஆகியன வெற்றிபெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கைதடி சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி மோதியது.

3 செற்கள் கொண்ட ஆட்டத்தில் 25:10, 25:14 என்ற புள்ளி அடிப்படையில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழக அணிக்கும் மட்டுவில் கண்ணகை விளையாட்டுக் கழக அணிக்கும் இடையில் இடம்பெறவிருந்த ஆட்டத்தில் மட்டுவில் கண்ணகை விளையாட்டுக்கழக அணி மைதானத்துக்குச் சமுகம் தராமையால் மட்டுவில் ஐங்கரன் விளையாட் டுக் கழகத்துக்கு வெற்றி வழங்கப்பட்டது. (ம-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ். உதைப்பந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்தும் 11 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையான உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இதில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு.

* மாலை3.45 மணி குருநகர் பாடும் மீன் விளையாட் டுக் கழகம் எதிர் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகம்.
* மாலை 5 மணி ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் எதிர் பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம். (ம-23)

* * *

கைதடி தெற்கு சன சமூக நிலையத்தின் 56 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கைதடி மின்னொளி விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியில் மின் ஒளியிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியை நடத்தி வருகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை இடம் பெறவுள்ள ஆட்டத்தில் பங்கு கொள்ளவுள்ள அணி விவரம் வருமாறு.

* இரவு 7 மணி மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகம் எதிர் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம். (ம-23)



வடமாகாணக் கல்வித் திணைக்களத்தால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான மென்பந்துக் கிரிக்கெட் போட்டியில் இரண்டாவது தடவையாகவும் வடமாகாண சம்பியனாகச் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி தெரிவானது. அணி வீராங்கனைகள் பாடசாலைச் சமூகத்தினருடன். (ம-86)

# வடமராட்சி இந்து மகளிர் சம்பியன்

வலி.வடக்கு, ஓக. 5

நெஸ்லே நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 16 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயமும் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும்வரையும் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் கைகளே மேலோங்கிக் காணப்பட்டன.

முதல் பாதி ஆட்டத்தில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி 9: 2 என்ற அடிப்படையில் முன்னிலையில் நின்ற வேளையில் முதல் பாதி ஆட்டம் நிறைவு பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டமும் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் கைகளே மேலோங்கி நின்றமையால் 8:1 புள்ளிகள் என்ற நிலையில் இரண்டாம் பாதி ஆட்டமும் முடிவடிடைந்தது.

ஆட்ட இறுதியில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி 17: 03 புள்ளிகள் என்ற அடிப்படையில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தை வெற்றி பெற்று மாவட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (ம-86)

# விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்

வலி.வடக்கு, ஓக. 5

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் பாடசாலைகளிடையே விளையாட்டை அபிவிருத்தி செய்யும் முகமாக விளையாட்டு உபகரணங்களை வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தச் செயற்றிட்டத்தின் கீழ் வவுனியா சைவப்பிரகரச பெண்கள் கல்லூரிக்கு உயரம் பாய்தலுக்கான மெத்தை உட்பட ஏனைய உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

வடமாகாண ஆளுநர் 2011 ஆம் ஆண்டு மாற்றத்துக்கான ஆண்டாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் செயற்பாடு நடைபெற்று வருகின்றது. இதன் அடிப்படையில் கல்வி அமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக மாகாண கல்வித் திணைக்கள உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் பாடசாலைக்கு உபகரணங்களை வழங்கி வருகின்றார். (ம-86)

# மெய்வன்மைப் போட்டிகள்

வடமாகாண மெய்வன்மைப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் மன்னார், முருங்கன் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளன.

இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் பங்குபற்றவுள்ளனர். இறுதி நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, கைத்தொழில் வணிகத் துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-23)

# மாகாண அணிகளின் போட்டிகளில் முதல் நான்கு இடங்கள் பெற்றோர்

வலி.வடக்கு, ஓக.5

மாகாண பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் முதல் நான்கு இடங்களைப் பெற்றுத் தேசிய மட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ளத் தகுதி பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:

100 மீற்றர்- ஜே.அபிமான் - கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம், பெனலின் அன்றோக் - யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி, வி. நிதர்சன் - கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி, எஸ். டிலூசன் - மன் னார் சிலாவத்தை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

200 மீற்றர் - ஜே.ஜனார்த்தனன்- தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, ஜே. அபிமான் - யாழ்ப்பாணம் கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம், வி. நிதர்சன் - கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, எஸ்.டிலூசன்- மன்னார் சிலாவத்தை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

400 மீற்றர்- ஜே.ஜனார்த்தனன்- தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, செல்வின்- மன்னார் பாத்திமா மகா வித்தியாலயம், ஆர்.சஸ்ரீபன் - முல்லைத்தீவு வித்தியாணந்தாக் கல்லூரி, பி.புவிதரன் - வவுனியா வடக்கு புதுக்குளம் மகா வித்தியாலயம்.

800 மீற்றர்- எ.அனோஜன் - யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி, பி.தியாகரன் - கிளிநொச்சி பிரமந்தனாறு மகா வித்தியாலயம், இ.ஜெனோசன் - மன்னார் தோட்டவெளி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, என். அன்ரனிரதன்- இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரி.

1500 மீற்றர் - எ.அனோஜன்- யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி, ரி.சாந்தன்- வவுனியா வடக்கு சாந்தபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, இ.ஜெனோசன் - மன்னார் தோட்டவெளி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, எல். சுதர்சன்- மன்னார் முருங்கன் மகா வித்தி யாலயம்.

110 மீற்றர்- தடை தாண்டல்- எ.ஸ்ரான்லின் றொக்ஸ்சன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, எஸ்.பௌலின் அன்றோக் - யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி, ஆர். சாம் அபிஷேக் -யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி, எஸ். டிலூசியன் - மன்னார் சிலா வத்தை அரசினர் தமிழ்க் கல வன் பாடசாலை.

400 மீற்றர் தடை தாண்டல்- எ.அனோஜன்- யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி, எஸ். சஜீவன் - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, எம். ஜொயல் யோசேப் சில்வா- மன்னார் சென். ஆனாஸ் மத்திய மகா வித்தியாலயம், எ.கோபிகீதன்- வவுனியா வடக்கு புதுக்குளம் மகா வித்தியாலயம்.

உயரம் பாய்தல்- கே. தனுசன்- யாழ்ப்பாணம் எழுவைதீவு முருகவேள் வித்தியாலயம், ஜே. ஜனந்தன்- தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, எஸ்.நெவில்ராஜ்- மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயம், வி.நிஷாந்தன்- வவுனியா தெற்கு நெலுக்குளம் கலைமகள் வித்தியாலயம்.

நீளம் பாய்தல்- எஸ்.பெ்ளலின் அன்றோக்- யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி, பி.அஜித் - யாழ். சென்.மேரிஸ் வித்தியாலயம், எஸ்.நெவில்ராஜ்- மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயம், எஸ்.கீதர்சன்- முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலயம்.

முப்பாய்ச்சல்- எம்.டக்சன்- மல்லாகம் மகா வித்தியாலயம், எஸ். சஜீவன்- யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, அ.ஜெகபிரியன் - தொண்டமானாறு வீரகத்தி வித்தியாலயம், எஸ். கீதர்சன் - முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலயம். (ம-86)

கோலூன்றிப் பாய்தல்- பி.லவணன் - அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, என். அன்ரனி

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டோனியின் பரந்த மனசு (?)

நொட்டிங்ஹாம், ஓக. 5

நொட்டிங்ஹாமில் இடம்பெற்ற இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாவது நாள் தேநீர் இடைவேளையின் போது 'ரன் அவுட்' தீர்ப்பு அளிக்கப்பட்ட இங்கிலாந்து வீரரான இயன் பெல்லை மீண்டும் விளையாட அழைத்து, டோனி இங்கிலாந்து ரசிகர்களின் இதயங்களைக் கவர்ந்தார்.

இரண்டாவது இன்னிங்சின் 66 ஆவது ஓவரை இசாந் சர்மா வீசினார். பந்தை மோர்கன் அடித்தார். இதனை எல்லைக் கோட்டருகே தட்டுத்தடுமாறி தடுத்த பிரவீன் குமார், டோனி வசம் எறிந்தார். இதற்குள் மூன்றாவது ஓட்டத்தை ஓடி முடித்த இயன் பெல், பந்து பவுண்டரிக்கு சென்று விட்டதாக நினைத்தார். தவிர நடுவர் தேநீர் இடைவேளை அறிவித்து விட்டதாக எண்ணி, மறுமுனை நோக்கி மெதுவாக நடந்து வந்தார்.

இந்த நேரத்தில் டோனியிடமிருந்து பந்து முகுந்த் வசம் வந்தது. முகுந்த் விக்கெட்டைத் தகர்க்க, இந்திய வீரர்கள் 'ரன் அவுட்' கோரினர். விதிகளின் படி இயன் பெல் ஆட்டமிழப்புத்தான்.

உடனே மூன்றாவது நடுவரிடம் கேட்கப்பட்டது. அவரும் அவுட் கொடுத்தார். தேநீர் இடைவேளை என்று நினைத்துதான் நடந்து வந்ததாக பெல் வாதிட்டும் பலன் கிடைக்கவில்லை. 137 ஓட்டங்களுக்கு வெளியேற நேர்ந்தது. இதனால் ஆத்திரமடைந்த இங்கிலாந்து ரசிகர்கள், இந்திய வீரர்களை நோக்கி கூச்சலிட்டனர்.

பின்னர் தேநீர் இடைவேளையின் போது இந்திய அணியின் ஆடைமாற்றும் அறைக்கு இங்கிலாந்து அணித்தலைவர் ஸ்ரோரஸ் மற்றும் பயிற்சியாளர் அண்டி பிளவர் சென்றுள்ளனர். பெல்லுக்கு எதிரான 'ரன் அவுட்டை' திரும்ப பெற விரும்புகிறீர்களா? என்று டோனியிடம் கேட்டுள்ளனர்.

சக வீரர்களுடன் ஆலோசித்த டோனி மிகுந்த பெருந்தன்மையுடன் திரும்ப பெறுவதாக தெரிவித்தார். இதையடுத்து மீண்டும் பெல் களமிறங்க, முன்பு கூச்சலிட்ட அதே ரசிகர்கள், இந்திய அணிக்கு பாராட்டு தெரிவித்தனர். இந்த முடிவால் பெரிய அளவில் பாதிப்பு ஏற்படவில்லை. கூடுதலாக 22 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் யுவராஜ் சுழலில் பெல் 159 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

மேலும், இங்கிலாந்து பத்திரிகை செய்திகளின் அடிப்படையில் டோனி 'ரன் அவுட்' முடிவை திரும்பப் பெற விரும்பவில்லை என்றும் சச்சினின் தலையீட்டினால்தான் அணி வீரர்கள் அனைவரும் பெல்லை மீண்டும் துடுப்பாட்டம் செய்ய அழைக்க ஒப்புக் கொண்டனர் என்றும் பத்திரிகைச் செய்தி தெரிவித்துள்ளது.

அன்றையதினம் டோனியிடம் நீங்கள் 'ரன் அவுட்டிற்கு' முறையீடு செய்தீர்களா என்று 3 முறை கேட்கப்பட்டது. அவர் உறுதியாக ஆமாம் என்றார். பிறகு பிளவரும் ஸ்ரோரசும் இந்திய அணித்தலைவர் டோனியிடமும், பிளெட்சரிடமும் பேசிய போதும் டோனி 'அவுட் அவுட்' தான் என்று கூறியதாகவும் தெரிகிறது.

ஆனால் ஓய்வறையில் சச்சின் டெண்டுல்கர் பெல்லை மீண்டும் அழைக்குமாறு வலியுறுத்தியதாலேயே டோனி ஒப்புக் கொண்டார் என்று அந்தப் பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (15)

# இலங்கையுடன் ஆட்டம் எங்களுக்கு சவால்

கொழும்பு, ஓக. 5

இலங்கை அணிக்கு எதிரான 'ரி-20' கிரிக்கெட் தொடர் சவால் நிறைந்ததாக இருக்கும், என்று ஆஸ்திரேலிய அணித்தலைவர் கமரூன் வையிட் தெரிவித்துள்ளார். இலங்கை வந்துள்ள ஆஸ்திரேலிய அணி இரண்டு 'ரி-20', ஐந்து ஒரு நாள் மற்றும் மூன்று டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் பங்கேற்கின்றது. இரண்டு 'ரி-20' ஆட்டங்கள் எதிர்வரும் 6, 8 ஆம் திகதிகளில் பல்லேகல மைதானத்தில் நடக்கவுள்ளது.

இந்தத் தொடர் குறித்து ஆஸ்திரேலிய 'ரி-20' அணித் தலைவர் கமரூன் வையிட் கூறியதாவது: இலங்கைக்கு எதிரான 'ரி-20' தொடரை மிகுந்த ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளேன். சமீபகாலமாக 'ரி-20' ஆட்டங்களில் இலங்கை அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றது. தவிர இலங்கை அணியை அதன் சொந்த மண்ணில் எதிர்கொள்ள இருப்பதால், இந்தத் தொடர் நிச்சயம் சவால் நிறைந்ததாக இருக்கும் என்று நம்புகின்றேன். சமீபத்தில் இங்கிலாந்துக்கு எதிராக இலங்கை அணியினர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். தற்போது நல்ல 'போர்மில்' உள்ள இவர்கள், நிச்சயம் நெருக்கடி கொடுப்பார்கள். .

இலங்கைக்கு எதிராக வெற்றி பெற கடுமையான பயிற்சி மேற்கொண்டு வருகிறோம். இங்குள்ள மைதானத்தின் தன்மைக்கேற்ப ஆட்டத்தை வெளிப்படுத்த புதிய திட்டம் வகுத்துள்ளோம். எனவே இலங்கை அணியை எளிதாக சமாளித்து வெற்றி பெற முயற்சிப்போம் - என்றார். (15)

# 'சிங்குகளுக்கு' சிக்கல்...!

டில்லி, ஓக. 5


இங்கிலாந்துக்கு எதிரான அடுத்த இரண்டு டெஸ்ட் ஆட்டத்துக்கான இந்திய அணியில் இருந்து, காயம் காரணமாக யுவராஜ் சிங், ஹர்பஜன் சிங் அதிரடியாக நீக்கப்பட்டனர். இவர்களுக்குப் பதிலாக விராட் ஹோக்லி, பிரக்யன் ஓஜா வாய்ப்பு பெற்றனர். இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கின்றது. முதலிரண்டு டெஸ்டில் வெற்றி கண்ட இங்கிலாந்து அணி 2-0 என்று முன்னிலை வகிக்கின்றது.

இந்த நிலையில் அனுபவ சுழற்பந்துவீச்சாளர் ஹர்பஜன் சிங், அடிவயிற்றுப் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக எஞ்சிய டெஸ்ட் தொடரில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். கடந்த இரண்டு டெஸ்டில் இவர் இரண்டு விக்கெட்டுக்கள் மட்டுமே கைப்பற்றினார். எனவே காயத்தை காட்டிலும் மோசமான திறமை காரணமாகவே இவர் நீக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. இவருக்குப் பதிலாக பிரக்யன் ஓஜா இடம்பெற்றுள்ளார்.

இதேபோல மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர் யுவராஜ் சிங், இரண்டாவது டெஸ்டின் போது காயமடைந்தார். இந்த ஆட்டத்தில் இங்கிலாந்து வேகப் பந்துவீச்சாளர் ரிம் பிரஸ்னன் வீசிய பந்து இவரது இடதுகை ஆள்காட்டி விரலை தாக்கியதால் காயம் ஏற்பட்டது. இதனால் இவரும், இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். இவருக்கு பதிலாக விராட் ஹோக்லி இடம்பெற்றுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிராக எதிர்வரும் 10 ஆம் திகதி பர்மிங்காமில் தொடங்க உள்ள மூன்றாவது டெஸ்டில் சுழற்பந்து வீச்சாளராக களமிறங்க அமித் மிஸ்ரா, பிரக்யன் ஓஜா இருவரிடையே கடுமையான போட்டி ஏற்படலாம். இதில் அமித் மிஸ்ராவுக்கு அதிக வாய்ப்பு உள்ளது. துடுப்பாட்டத்தை பொறுத்தவரை 'பவுன்சர்' பந்தில் திணறிவரும் சுரேஷ் ரெய்னா நீக்கப்படும் பட்சத்தில், விராட் ஹோக்லி வாய்ப்புப் பெறலாம்.

இது குறித்து இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) செயலாளர் சீனிவாசன் கூறுகையில், ஹர்பஜன் சிங், யுவராஜ் சிங் உள்ளிட்டோருக்கு ஏற்பட்ட காயம் குணமடைய நீண்ட நாள்கள் தேவைப்படும். இதனால் இவர்கள் அடுத்து வரவுள்ள ஒரு நாள் தொடரிலும் முழுமையாக பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே விராட் ஹோக்லி, பிரக்யன் ஓஜா மாற்று வீரர்களாக தேர்வு செய்யப்பட்டனர். இவர்கள் விரைவில் இந்திய அணியினரோடு இணைவார்கள் என்றார். (15)



ஹர்பஜன் சிங்

# கேட்பது கொஞ்சம் குறைவு!

லண்டன், ஓக. 5

ரசிகர்கள் அளவுக்கு அதிகமாக எழுப்பிய கோஷத்தால், ஹர்பஜன் சிங் பந்தை அடித்த சத்தம் இங்கிலாந்து வீரர்களுக்கு கேட்கவில்லை என்று ஸ்டுவர்ட் புரோட் தெரிவித்துள்ளார்.

நொட்டிங்ஹாம் டெஸ்டில் புரோட் பந்தை எதிர்கொண்ட ஹர்பஜன் சிங் அடிக்க முற்பட்டார். பந்து துடுப்பில் பட்டுச் சென்றது. ஆனால் புரோட் எல்.பி.டபிள்யூ கேட்க, நடுவரும் ஆட்டமிழப்புக் கொடுத்தார். இது பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியது. இது குறித்து புரோட் கூறியதாவது:

எனது முதல் பந்தில் டோனி அடித்த பந்தை அண்டர்சன் சிறப்பான முறையில் பிடியெடுத்தார். இந்த மகிழ்ச்சியில் ரசிகர்கள் பெரும் உற்சாக குரல் எழுப்பினர். இதனால் அடுத்த பந்தை ஹர்பஜன் சிங் அடித்த போது, துடுப்பில் பந்து பட்ட சத்தம் உண்மையில் எங்கள் காதுகளுக்கு சரியாக கேட்கவில்லை. பந்து கால் காப்பில் பட்டது என்று நினைத்து தான் முறையீடு செய்தோம்.

இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இரண்டு நாட்களில் இந்திய அணியின் கைதான் ஓங்கியிருந்தது. இந்த நிலையில் சிறப்பான முறையில் செயற்பட்டு மீண்டு வந்துள்ளோம். இதுதான் எங்கள் வழக்கம். ஏனெனில் உலகின் 'நம்பர்-1' அந்தஸ்தை பெற வேண்டும் என்ற வேட்கையுடன் செயற்பட்டு வருகின்றோம். இதற்கான மனஉறுதி இருந்ததால் தான் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடிந்தது.

ஆட்டங்களின் போது கடும் போராட்டத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று எனக்கு நானே சொல்லிக் கொள்வேன். இது போல துடுப்பாட்டத்தின் போது, தொடக்கத்திலேயே சிறப்பாக விளையாடினால், பின் எதிரணியினர் தங்களது வியூகத்தை மாற்றிக் கொள்வார்கள். இந்தத் திட்டம் இந்தியாவுக்கு எதிராக நன்கு வேலை செய்கிறது - என்றார். (15)

# ஹர்பஜன் சிங்; போடுகிறாராம் வழக்கு!

நொட்டிங்ஹாம், ஓக. 5

2001 ஆம் ஆண்டு நிகழ்த்திய டெஸ்ட் 'ஹட்றிக்' பாணியை இங்கிலாந்து பந்து வீச்சாளர் ஸடுவர்ட் புரோட் கொப்பி அடித்து விட்டதாக நூதன புகாரை தெரிவித்துள்ளார் இந்திய பந்து வீச்சாளர் ஹர்பஜன் சிங். லோர்ட்ஸ் டெஸ்ட் ஆட்டத்திலும் சரி, நொட்டிங்ஹாம் டெஸ்ட்டிலும் சரி ஹர்பஜன் சிங்கால் இந்தியாவுக்கு எந்த உபயோகமும் இல்லை. பந்து வீச்சில் மகா சொதப்பலை வெளிப்படுத்தினார்.

2 ஆவது டெஸ்ட் ஆட்டத்தில் 2 ஆவது இன்னிங்சில் 46 ஓட்டங்களை எடுத்தது மட்டுமே இவர் செய்த பெரிய விடயம். இந்த நிலையில் நூதனமான ஒரு புகாரைத் தெரிவித்துள்ளார் ஹர்பஜன் சிங். இங்கிலாந்து பந்து வீச்சாளர் புரோட் இந்தத் தொடரில் ஒரு 'ஹட்றிக்' சாதனை செய்தார். தன்னைப் பார்த்து கொப்பி அடித்து தான் புரோட் இந்த சாதனையை செய்து விட்டார் என்று தற்போது ஹர்பஜன் சிங் புகார் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், 2001 ஆம் ஆண்டு நான் டெஸ்ட் 'ஹட்றிக்' சாதனையைச் செய்தேன். நான் அப்போது செய்த அதே பாணியை, அதே முயற்சிகளை என்னிடம் முன் அனுமதி பெறாமல் கொப்பி அடித்து விட்டார் புரோட். இது காப்புரிமை சட்டத்தின் கீழ் விதி மீறலாகும். எனவே புரோட் மீது வழக்கு தொடருவது குறித்து எனது சட்ட நிபுணர் குழு ஆலோசனையில் ஈடுபட்டுள்ளது.

இரண்டு 'ஹட்றிக்' நிகழ்வுகளிலும், 2 ஆவது ஆட்டமிழப்பு எல்.பி.டபிள்யூ மூலம் வந்தது. இரண்டிலும் நான் சம்பந்தப்பட்டுள்ளேன். இது எனக்கு வேதனையாக இருக்கிறது. எனது தொழிலில் நான் மேற்கொண்டுள்ள முயற்சிகளை அவர் அப்பட்டமாக கொப்பி அடித்துள்ளார். இதை ஏற்க முடியாது.

"அமைதியாக கேட்டுக் கொண்டிருந்த ஒரு நிருபர் குறுக்கிட்டு, இப்படி வீணான வழக்குகளைப் போட்டு உங்களது சக்தியை வீணடிப்பதற்குப் பதில் விளையாட்டில் ஆர்வம் காட்டலாமே என்று கேட்டார்"

ஹர்பஜன் சிங் கூறுவதை அமைதியாக கேட்டுக் கொண்டிருந்த ஒரு நிருபர் குறுக்கிட்டு, இப்படி வீணான வழக்குகளைப் போட்டு உங்களது சக்தியை வீணடிப்பதற்குப் பதில் விளையாட்டில் ஆர்வம் காட்டலாமே என்று கேட்டார். இதைக் கேட்டு கோபமான ஹர்பஜன் சிங், என்ன சக்தி வீணாகி விடப் போகின்றது என்று கோபத்துடன் கேட்டார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணி விழா நாயகியை வாழ்த்துகின்றோம்



கல்விப் புலத்தில் 35 வருடங்கள் சேவையாற்றி
05.08.2011 இன்று ஓய்வுபெறவுள்ள
எமது பாடசாலை ஆசிரியை

### செல்வி
### மதிவதனா இராமநாதன்

அவர்களை வாழ்த்துகின்றோம். அத்துடன் இவரது ஓய்வுக் காலம் சிறப்பாக அமைவதோடு தொடர்ந்தும் சமூக சேவையில் ஈடுபட அரசகேசரி விநாயகன் துணை நிற்பானாக

ஆரம்பக் கல்வி - யா/ நீர்வேலி அத்தியார் இந்து
இடைநிலைக் கல்வி - யா/ கனகரெட்ணம் ம.ம.வி.
உயர்கல்வி - யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
பட்டம் - பேராதனைப் பல்கலைக்கழகம்
பட்டப்பின் டிப்ளோமா - யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

சேவை விபரம்

1. கு/ ஹிஸ்புள்ள ம.வி. 01.11.1976 - 15.01.1985
2. யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாலயம் - 16.01.1985 - 10.03.1991
3. யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி -11.03.1991 - 18.07.1995
4. யா/ நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை - 19.07.1995 - 05.08.2011 (இன்று வரை)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகம்,
யா/ நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை

(சி-2411)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
### கணேஸ் விமலாதேவி

தோற்றம்: 08-08-1947
மறைவு: 18 -07-2010
திதி: ஸப்தமி

வாழ்க்கை என்னும் தொலை தூரப்பயணத்தில்
இறுதிவரை உற்ற துணையாய் இருப்பீரென்று
இறுமாந்திருந்தோம்.
ஓராண்டு கடுகதியாய் விரைந்து விட்டதம்மா
எனினும் உங்கள் அழகான புன்சிரிப்பு மறையவில்லை
உங்களின் பிரிவு தந்த பேரிழப்பை இன்று வரை
மறக்கமுடியாது வேதனையே வாழ்க்கையாய்
வாழ்கின்றோம்.
உங்களின் அமைதிக்காய் பிரார்த்திக்கின்றோம்.

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (6541) குடும்பத்தினர்.

## பருத்தித்துறை டிப்போவுக்கு 3 பஸ்கள்

வடமராட்சி, ஓக.5

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஜனாதிபதியால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 3 புதிய பஸ்கள் வடக்கு மாகாண சபை ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியால் பருத்தித்துறை டிப்போவுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இம் மூன்று புதிய பஸ் வண்டிகளும் ஆளுநரின் பணிப்புக்கமைய பின்தங்கிய இடங்களுக்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

இப்புதிய பஸ்களில் ஒன்று பருத்தித்துறை கட்டைக் காடு பாதையிலும் மற்றையது பருத்தித்துறை மணற்காடு பாதையிலும் மூன்றாவது பஸ் பருத்தித்துறை - சாவகச்சேரி பாதையிலும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

(ம-236)


## வீட்டுக் கிருத்திய அழைப்பு



கடந்த 07.07.2011 வியாழக்கிழமை
இறைபதமடைந்த எமது குடும்பத்
தலைவர்
அமரர் இளையதம்பி
தருமராசா
அவர்களின் வீட்டுக்கிருத்தியம் நாளை
(06.08.2011) சனிக்கிழமை மு.ப. 10.30
மணியளவில் எமது இல்லத்தில்நடைபெறும்
நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும்
கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (6003) குடும்பத்தினர்.

## 3 ஆம் மாத நினைவஞ்சலி



தாயின் மடியில்:
23.05.1963

ஆண்டவன் அடியில்:
06.05.2011

### அமரர் குமாரசாமி விஜயராஜா

ஒளி விளக்காயிருந்து எமக்கு வழி காட்டிய அன்பின் மகனே
பண்பின் சிகரமாயிருந்து எம்மை உயர வைத்த எம் சகோதரனே
பாசத்தினால் எமை ஆண்ட எம் அன்புத் தந்தையே...

தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

மருதடி மேற்கு,
சாவகச்சேரி.
தங்கள் நினைவில் வாழும்
குடும்பத்தினர்

## விபத்தில் இருவர் படுகாயம்

ஹைஏஸ் வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி மதிலுடன் மோதியதில் இருவர் பலத்த காயங்களுடன் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலை அவசரச் சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை வேளையில் யாழ்ப்பாணத்தில் இருந்து தெல்லிப்பழையை நோக்கி காங்கேசன்துறை வீதி வழியாக சென்ற வாகனமே தூவடியில் மதிலுடன் மோதி விபத்துக்குள்ளாகி உள்ளது. இதில் பயணம் செய்த சாரதியும் மற்றும் ஒருவரும் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (த-86)

SHAMROCK-யாழ்.
A/L CHEMISTRY
2013- இரசாயனக் கணிப்பீடு
Tue,Fri 6.15 am
2012- சேதன இரசாயனம்
Mon,Wed,
Thurs.6.15.am
M.A.நிரோஜன் B.Sc. (Hons)
PHY:- S.சசி B.Sc.
C/ma:- G.கண்ணன் B.Sc.
Bio:-R.குமரேந்திரன் B.Sc.

காணி விற்பனைக்கு
தங்குமிட விடுதி கட்டக் கூடிய காற்றோட்டமான 2½ பரப்புக்காணி யாழ். கடற்கரை வீதியில் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். T.P- 0212263420, 0750699105

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் சுண்டுக்குளி புங்கங்குளம் வீதியில் 1½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0212263420, 0750699109

விக்னா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
3ம் தவணை ஆரம்பம் 06.08.2011
தரம் 6,7,8 (ஒரு மணி)
தரம் 06.08.2011 (9.30 மணி)
[illegible]

## கண்ணீர் அஞ்சலி



திருமதி வடிவேலு விஜயலட்சுமி
எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி சுகுணா இராசேந்திரம்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி வடிவேலு விஜயலட்சுமி

அவர்கள் 02.08.2011 செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். இவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நல்லுறவுக் கழகம்,
மு/மல்லாவி மத்திய கல்லூரி, யோகபுரம்.

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
### சுப்பிரமணியம் கணேசபிள்ளை
(பொன்னாலை)
(இலங்கை வங்கி சிரேஷ்ட
பாதுகாப்பு உத்தியோகத்தர்)

தாயின் மடியில்
26-09-1954
ஆண்டவன் அடியில்
05-08-2010

என்றும் எங்கள் நெஞ்சில்
நிறைந்திருக்கும்
எங்கள் குடும்ப விளக்கு
ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

134, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம். (6540) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி முருகேசு தில்லைநாயகம்



குரும்பைகட்டி புலோலி வடமேற்கைப் பிறப்பிடமாகவும், துன்னாலை வடக்கு சோழியவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முருகேசு தில்லைநாயகம் நேற்றுமுன்தினம் (03.08.2011) புதன்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து முருகேசுவின் அன்புப் பாரியாரும், சரஸ்வதி, புவனேஸ்வரி, திருச்செல்வம் (ஜேர்மனி), அருட்செல்வம், சிவனேஸ்வரி, தவச்செல்வம் (ஜேர்மனி), யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் துன்னாலையிலுள்ள மகளின் இல்லத்தில் இன்று (05.08.2011) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரம்பன் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துன்னாலை வடக்கு,
கரவெட்டி.
தகவல்:
அருட்செல்வம் (மகன்)
(தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை)

### திருமதி ஆறுமுகம் சுப்பிரமணியம் சிவக்கொழுந்து



பெரியார் பகுதி, அல்வாய் கிழக்கு, அல்வாயைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவக்கொழுந்து நேற்று(04.08.2011) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் ஆறுமுகம் சுப்பிரமணியம் (வான் ராசப்பா)வின் அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.08.2011) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பெரியார் பகுதி,
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.
தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொலைக்காட்சியின் ''சிறிலங்காவின் கொலைக் களம்'' இந்தியாவில் ஒளிபரப்பப்பட்டதால் ஏற்பட்ட அழுத்தம், இடதுசாரிக் கட்சிகள் ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து எழுப்பும் கண்டனங்கள் போன்ற பல்வேறு விடயங்களால் வெளியுறவுத்துறை அமைச்சர் நேற்று நாடாளுமன்றத்தில் ''இலங்கை நிலைவரம்'' என்ற விசேட அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்து உரையாற்றினார்.

''இலங்கையில் உள்ள தமிழர்களின், குறிப்பாக இடம்பெயர்ந்த மக்களின் நலனிலும் இருப்பிலும் அக்கறை செலுத்தி அவற்றை உறுதிப்படுத்துவதிலேயே நாம் தற்போது கவனம் செலுத்துகிறோம். அத்துடன் வடக்கை அபிவிருத்திக்கும் உதவுகின்றோம்'' என்றார் கிருஷ்ணா.

இறுதிப் போரின் போது நிகழ்ந்த கொடூரங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு மற்றும் சனல்-4 ஆகியன தெரிவித்துள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து அவரிடம் கேள்விகள் கேட்கப்பட்டதற்கு, அவை குறித்து இந்தியா கவனத்தில் கொண்டுள்ளது என்று தெரிவித்த அவர், இருப்பினும் இந்தியாவின் தற்போதைய கவனம் அனைத்தும் தமிழர்களின் நலன்களைக் கவனிப் பதிலேயே இருக்கிறது என்றார்.

அதேவேளை, ''உண்மையானதும் விரைவானதுமான தீர்வு ஒன்று ஏற்படுத்தப் படுவதும் மிக முக்கியம்'' என்று கிருஷ்ணா குறிப்பிட்டார்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கத்தில் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் இலங்கை அரசு நடத்தி வரும் பேச்சுக்களை வரவேற்ற அவர், இலங்கை வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் புதுடில்லி வந்திருந்த போது அவரிடம் ''அவசரகாலச் சட்டத்தை உடனடியாக நீக்குவதன் அவசியம், மனித உரிமை மீறல் கள் குறித்து விசாரிப்பதன் அவசியம், போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இயல்பு நிலையைத் திருப்புவதன் அவசியம், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான மனிதாபினமான உதவியில் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியம் என்பன குறித்து வலியுறுத்தினேன்'' என்றும் தெரிவித்தார். (உ)

## ஜகத் டயஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிபுணர் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் டயஸ் மீது போர்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. வைத்தியசாலைகள் மீதும் பொதுமக்கள் நிலைகள் மீதும் இவர் குண்டுத் தாக்குதல்களை நடத்தினார் என்று முறைப்பாட்டாளர்கள் கூறுகின்றனர்.

ஏற்கனவே ஐ.நாவுக்கான பிரதி வதிவிடப் பிரதிநிதியான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா மீது சனல்-4 தொலைக்காட்சி போர்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி உள்ளது. இந்த நிலையிலேயே டயஸ் மீதான குற்றச்சாட்டும் எழுப்பப்பட்டுள்ளது. (உ)

## போர்க்குற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையில் யுத்தத்தில் ஈடுபட்ட இரண்டு தரப்பினரும் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இரண்டு தரப்பினரும் மக்களுக்கு இழைத்த அநீதி களை ஒப்புக்கொள்ள வேண் டும். இலங்கையில் இடம் பெற்ற குற்றச் செயல்க ளுக்கு தண்டனை வழங்கப்படக்கூடிய வகையில் பக்கச் சார்பற்றதும், நீதியானதும் சுயாதீனமானதுமான சர்வதேச விசாரணைப் பொறி முறை ஒன்றை உருவாக்குவதற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பு முனைப்புகாட்ட வேண்டும். அதற்கு கனடா அழுத்தம் கொடுக்க வேண்டும்.

- இவ்வாறு அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, 2009ஆம் ஆண்டு ஆயிரக்கணக்கான பொது மக்கள் கொல்லப்பட்டனர். யுத்தக் குற்றச் செயல்களும் மனித உரிமை மீறல்களும் இடம்பெற்றுள்ளன. குற்றச்செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு நிறுவப்பட்டுள்ள போதிலும் அது பொருத்தமாக அமையவில்லை - என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் கனடா பொறுப்பாளர் அலெக்ஸ் நேவி தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின்போது தமது தரப்பில் குற்றச் செயல்கள் இடம் பெறவில்லை என்பதே அரசின் நிலைப்பாடாக அமைந்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை விவகாரம் குறித்து உன்னிப்பாக அவதானிக் கப்பட்டு வருவதாக கனேடிய வெளிவிவகார அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுயாதீனமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதே கனேடிய அரசின் நிலைப்பாடு. ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கைக்கும் ஆதரவளிக்கப்பட்டு வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-சி)

## அதிகாரப் பகிர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுற்று நேற்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் ஆர்.சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராசா ஆகியோரும் அரச தரப்பில் அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ் மற்றும் நிமல் சிறிபால டி சில்வா, சஜின் வாஸ் குணவர்த்த ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்தப் பேச்சுக்களிலும் முன்னேற்றகரமான எந்த ஒரு விடயமும் அரச தரப்பால் முன் வைக்கப்படவில்லை. ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த உடனடிப் பிரச்சினைகளுக்கோ தீர்வு தொடர்பான முன்மொழிவுகளுக்கோ அரச தரப்பு நேற்றும் நேர்மையாகப் பதிலளிக்கவில்லை. இதனை அடுத்து இத்தகைய பேச்சில் தொடர்ந்தும் பங்கேற்பதில் அர்த்தம் ஏதுமில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர' ஒருவர் தெரிவித்தார்.

பேச்சுக்களைத் தொடர்ந்து நேற்றிரவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிக்கை ஒன்றை விடுத்தது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுக்கள் 2011 ஜனவரி மாதம் முதல் நடைபெற்று வருகின்றன. ஜனவரி 10ஆம் திகதி முதல் இன்றுவரை 10 சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன. தமிழ் மக்களின் உடனடிப் பிரச்சினைகளுத் தீர்வுகாண்பதற்காகவும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்காகவும் பேச்சுக்கள் நடத்தப்பட்டன.

தமிழர்களின் உடனடிப் பிரச்சினைகள் தொடர்பாகப் பின்வரும் விடயங்களை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசின் முன் வைத்தது.

இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்தி அவர்களுக்குப் புனர்வாழ்வளித்தல், உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுதல், வடக்கு - கிழக்கில் இயங்கி வரும் துணைப்படைகளிடம் இருந்து ஆயுதங்களைக் களைதல் மற்றும் தடுப்புக் காவலிலும் சிறைகளிலும் அடைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விவகாரம் ஆகிய விடயங்களைக் கூட்டமைப்பு எழுப்பியது.

அதில் மீள்குடியமர்வு நத்தை வேகத்தில் மேற்கொள்ளப்பட்டது. ஆயிரக்கணக்கானவர்கள் இன்னும் முகாம்களில் இருக்கிறார்கள். ஒரு லட்சம் பேர் வரையிலானோர் இடைத் தங்கல் முகாம்களிலும் உறவினர்கள் நண்பர்கள் வீடுகளிலும் தங்கி இருக்கிறார்கள். தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப அனுமதிக்கப்பட்டவர்களுக்குக் கூட சரியான இருப்பிட வசதியோ வாழ்வாதார வசதிகளோ ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. அவர'கள் வருமானம் ஈட்டிக் கொள்வதற்கான எந்த உதவியும் வழங்கப்படவில்லை. அதனால் அந்த மக்களின் வாழ்க்கையில் குறிபிடத்தக்க எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

உயர் பாதுகாப்பு வலயத்தைப் பொறுத்தவரையில், வலிகாமம் வடக்கில் மட்டும் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிழக்கில் சம்பூரிலும் வடக்கில் வேறு பல பகுதிகளிலும் மக்கள் தமது இடங்களுக்குத் திரும்பு வதற்குத் தொடர்ந்தும் தடை நிலவுகிறது.

கடத்தல்கள், கப்பம் கேட்டல் மற்றும் கொலைகளைக்கூடச் செய்தபடி துணைப் படையினர் எந்த விதத் த்ண்டனைகளும் இன்றி நடமாடித் திரிகின்றனர்.

தடுப்பில் உள்ளவர்களின் பெயர் விவரங்கள் வவுனியாவில் ஒரு இடத்தில் அவர்களது நெருங்கிய உறவினர்களின் பார்வைக்கு வைக்கப்படும் என்று பெப்ரவரி மாதம் 3ஆம் திகதி அரசு உறுதி அளித்தது. ஆனால் இன்றுவரைக்கும் அது நடக்கவில்லை. தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விவரங்கள் தொடர்ந்தும் இரகசியமாகவே பேணப்படுகிறது என்பதுடன் அவர்களது உறவினர்களுக்குக்கூட அது தெரிவிக்கப்படவில்லை.

2009 மே மாதம் போர் முடிவடைந்ததன் பின்னர், தமிழர் பகுதிகளில் உள்ள மத, பண்பாட்டு இடங்கள் துஸ்பிரயோகங்களுக்கு அல்லது பாதிப்புக்கு அல்லது அழிவுக்கு உள்ளாகின்றன. வடக்குக் கிழக்கில் இராணுவமயமாக்கல் அதிகரித்துள்ளது: தமிழர்களின் வாழ்க்கையில் இராணுவத் தலையீடு அதிகம் காணப்படுகின்றது. அபிவிருத்தி என்று சொல்லிக் கொண்டு வடக்கு - கிழக்குக்கு வெளியே இருப்பவர்களுக்கு தமிழர்களின் நிலங்கள் பிரித்துக் கொடுக்கப்படுகின்றன. இவையனைத்தும் தமிழர்களின் எதிர்கால வாழ்வில் பெரும் பாதிப்பை உண்டாக்கும்.

இத்தகைய பிரச்சினைகளை அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்தால் அது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. இடம்பெயர்ந்த தமிழர்களை அவர'களது சொந்த இடங்களுக்குத் திருப்பி அழைக்க நடவடிக்கை எடுக்காத நிலையிலும், வாக்காளர்கள் எண்ணிக்கைக் குறைவைக் காரணம் காட்டி யாழ். மாவட்டத்துக்கான நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையை அரசு குறைத்துள்ளது. இது யாழ்ப்பாண மக்களின் உரிமையை நசுக்குவது மட்டுமின்றி ஜனநாயகத்தையும் கேலிக்கூத்தாக்குகிறது.

அரசியல் தீர்வு காணும் விடயத்தில், ஆட்சிக் கட்டமைப்பு மற்றும் பகிரப்பட வேண்டிய அதிகாரங்கள் குறித்த முன்மொழிவு ஒன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசிடம் முன்வைத்தது. அத்துடன் ஏற்றுக்கொள்ளக்கூடிய அதிகாரப் பகிர்வு குறித்த ஆக்கபுர்வமான வேறு விடயங்களும் முன் வைக்கப்பட்டன.

இந்த முன்மொழிவுகள் குறித்த அரசின் கருத்துக்களைத் தெரிவிக்கும்படி கூட்டமைப்புக் கேட்டுக்கொண்டது. அரச பதிலளிப்பதற்காக கூட்டமைப்பு காத்திருந்தது. ஆனால் பல மாதங்களாகியும் அரசு அது குறித்து எதுவிதக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. அவை தொடர்பில் ஆக்கபூர்வமான அல்லது அர'த்தமுள்ள கலந்துரையாடல்கள்கூட அரசால் நடத்தப்படவில்லை.

ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வுஒன்றைக் காண்பதில் அரசு நேர்மையுடனும் இதயசுத்தியுடனும் செயற்படவில்லை என்பதை இது நன்கு உணர்த்தி நின்றது. அரசியல் தீர்வு முயற்சியில் தான் ஈடுபட்டுள்ளதாக உலகத்தை நம்ப வைப்பதும் நல்லிணக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகக் காட்டுவதும் மட்டுமே அரசின் தேவையாக இருந்தது.

இத்தகைய ஒரு சூழலில் பேச்சுகள் மேலும் தொடர வேண்டுமானால் பின்வரும் மூன்று விடயங்கள் தொடர'பில் அரசின் தீர்க்கமான பதிலை இரண்டு வாரங்களுக்குள் கூட்டமைப்பு எதிர்பார்க்கிறது. 1. ஆட்சி அதிகாரக் கட்டமைப்பு, 2. மத்திய அரசுக்கும் மாநில அல்லது அதிகார அலகு ஒன்றுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட உள்ள பங்கீடுகள் மற்றும் அவற்றின் செயல்பாடுகள், 3. நிதி மற்றும் நீதி அதிகாரங்கள் ஆகியனவே அந்த மூன்று விடயங்களுமாகும் - என்றுள்ளது. (உ)

## விடுதலைப் புலிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களையும் அரசு எடுத்தது. சம்பந்தப்பட்ட எல்லோரும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரும் பட்சத்திலேயே நேர்மையான நீடித்திருக்கக்கூடிய தீர்வு ஒன்றை எட்ட முடியும்.

கூட்டமைப்பு முன்வைத்துள்ள மூன்று விடயங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை. நாட்டின் தேசியப் பிரச்சினை தொடர்பாக அரசின் பிரதான கட்சியான சுதந்திரக் கட்சிக்கும் கூட்டமைப்புக்கும் இடையில் இது பற்றியே பேசப்பட்டு வருகின்றது. இந்த முக்கிய பிரச்சினைகள் தொடர்பாகப் பரந்தளவிலான கலந்துரையாடல்களை நடத்தாமல் இப்போது உடனடியாகத் தீர்மானம் ஒன்றுக்கு வருவது சாத்தியமில்லை.

இத்தகைய ஒரு நிபந்தனையை கூட்டமைப்பு விதிக்கும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. இது விடுதலைப் புலிகளின் நடவடிக்கையைப் போன்று உள்ளது. மக்களின் ஆதரவைப் பெற்ற ஒரு படிப்படியான அணுகுமுறையைக் கொண்ட நடவடிக்கை மூலமே சாதகமான பெறுபேறு ஒன்றைப் பெற்றுக்கொள்ள முடியும். அத்தகைய ஒரு இலக்கை அடைவதற்கே அரசு முயற்சிக்கிறது. அதற்காக கடந்த பல மாதங்களாக பல்வேறு அரசியல் கருத்துக்களைக் கொண்டவர்களுடன் அரசு கலந்துரையாடல்களை நடத்தி வருகிறது.

எந்த ஒரு சமூகத்தையும் சுதந்திரக் கட்சி மட்டும் பிரதிநித்துவப்படுத்தவில்லை. அதுபோலவே கூட்டமைப்பும் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதி அல்ல. இத்தகைய ஒரு சூழலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுக்களில் இருந்து விலகிக் கொண்டதால் அரசு இனி, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு ஊடாக இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் ஆராயும். எல்லா மக்களதும் பிரதிநிதிகளும், அரசமைப்பில் மேற்கொள்ள வேண்டிய மறுசீரமைப்புக் குறித்த தமது சிந்தனையுடன் கூடி விவாதிக்கக் கூடிய ஒரு இடமாக, மன்றமாக தெரிவுக் குழுவே அமையும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட அனைத்துக் கட்சிகளும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் என்று அரசு எதிர்பார்க்கிறது. (உ)

## மரண அறிவித்தல்

### *திருமதி சின்னத்துரை திரேசம்மா*



இருபாலையைப் பிறப்பிடமாகவும் 40, இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை திரேசம்மா கடந்த (03.08.2011)புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மரியாம்பிள்ளை - மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் யோகராஜா (பிரான்ஸ்), விங்கேஸ் (லண்டன்), ரகு (ஜேர்மனி), கவிதா ஆகியோரின் தாயும் காலஞ்சென்றவர்களான செல்வராசா, ஞானமணி ம்றறும் மலர், இராசேந்திரம், றஞ்சன், வின்சன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் றதினி, லதா, சாந்தி, சி.அன்று ஆகியோரின் மாமியும் சுதர்ஷன் (ஜேர்மனி), நிஷாந்தினி, நிலாந்தன், சுதாகர், சுதாசினி, சுகன்ஜா, கிளைன்ரன், செபான், துசான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.08.2011) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

40, இராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
யோகராசா (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீர்த்தி தென்னக்கோனுக்கு எதிராக மீண்டும் களனிப் பல்கலை ஒழுக்காற்று விசாரணை

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது வடக்கு - கிழக்கு வன்முறைகள் இடம்பெற்றதை வெளிப்படையாகச் சுட்டிக்காட்டியிருந்த 'கபே' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோனுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை ஒன்றை மூன்றாவது முறையாகத் களனிப் பல்கலைக்கழகம் ஆரம்பித்துள்ளது.

களனிப் பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞான பிரிவில் அவர் வகிக்கும் பதவியிலிருந்து அவரை நீக்குவதற்கும் அவரது சுந்திரமானதும் நீதியானதுமான சிவில், சமூக செயற்பாடுகளை அச்சுறுத்தவும், தடுத்து நிறுத்தவுமே இந்த விசாரணை மூன்றாவது தடவையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக 'கபே' அமைப்பின் சட்ட விவகாரப் பணிப்பாளர் ஹரிந்திர பானகல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக 'கபே' அமைப்பு மேலும் தெரிவித்துள்ளமை வருமாறு:

கிழக்கு மாகாணத்தில் 2008 ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்ற போது அங்கு நடைபெற்ற வன்முறைகள் தொடர்பாக கீர்த்தி தென்னக்கோன் வெளிப்படையாகச் சுட்டிக்காட்டியிருந்தார். அந்தக் கால கட்டத்தில் அவர் 'கபே' அமைப்பின் ஊடக இணைப்பாளராக செயற்பட்டுவந்தார். இவர் அவ்வாறு வன்முறைகள் தொடர்பாக கருத்து வெளியிட்ட காலத்திலும் களனிப் பல்கலைக் கழகத்தில் பதவிநிலையில் இருந்தார். அப்போது களனிப் பல்கலைக் கழகம் அவருக்கெதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்த வேண்டுமெனக் கூறி அதற்கெனக் குழு ஒன்றையும் அமைத்திருந்தது. எனினும் அந்தக் குழுவின் தலைவர் தனது தலைவர் பதவியைச் இராஜினாமாச் செய்தமையால் ஒழுக்காற்று விசாரணை கைவிடப்பட்டது.

பின்னர் இரண்டாவது தடவையாக களனிப் பல்கலைக்கழக அதிகாரி ஒருவரின் தலைமையின் கீழ் கீர்த்தி தென்னக்கோனுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட்டது. எனினும் அந்த விசாரணை சமரசத் தன்மைக்கு கொண்டு வரப்பட்டதுடன் அது வாபஸ் பெறப்பட்டது.

அதுவரை 'கபே' அமைப்பின் ஊடக இணைப்பாளராக இருந்த கீர்த்தி தென்னக்கோன் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் 'கபே' அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டார்.

தேர்தல் நடைபெற்று முடிந்த நிலையில் களனிப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சரத் அமுனுகம தென்னக்கோனுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார் என்று தெரிவித்தது. (த-4)

# கந்தனுக்கு கொடியேறி ஆரம்பமானது நல்லூர் ஆலயப் வருடாந்த பெருவிழா

யாழ்ப்பாணம், ஓக.5

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று வியாழக்கிழமை பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் அரோகரா கோஷம் ஒலிக்க முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

உற்சவத்தை முன்னிட்டு அதிகாலை 5.30 மணி முதல் குடாநாட்டின் பலபாகங்களிலும் இருந்து வந்த ஆயிரக்கணக்கான மக்கள் கோயிலுக்கு முன்னால் திரண்டிருந்தனர். அதிகாலை 4 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகின. காலை 9.45 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நிறைவுற்றதை அடுத்து முருகப் பெருமான் கொடிக்கம்பத்துக்கு எழுந்தருளினார். இதையடுத்து இடம்பெற்ற கொடிக்கம்பப் பூசைகளைத் தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றம் நடைபெற்றது.

இந்த முறை கொடியேற்ற தினமான நேற்றைய தினத்தில் கடந்த கால வருடங்களை விட அதிக எண்ணிக்கையான பக்தர்கள் அங்கப் பிரதட்சணம் செய்து நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினார்கள். பக்தர்கள் ஆலய முன் மண்டபத்தில் குழுமி நின்றதால் அங்கப் பிரதிஷ்டை செய்பவர்கள் ஆலய வாயிலுக்கு சென்றடைவதில் சிரமங்கள் காணப்பட்டது. அங்கப் பிரதிஷ்டை செய்த அடியார்களிடையே சிறுமி ஒருவரும் அங்கப் பிரதிஷ்டை செய்து நேர்த்திக்கடனை நிறைவேற்றியதைக் காணக் கூடியதாக இருந்தது.

ஆலயச் சுற்றாடலில் தமிழ் பொலிஸார் சீருடையிலும், சிவில் உடையிலும் கடமையில் இருந்தனர். இவர்களுடன் தொண்டர்களும், சாரணச் சிறுவர்களும் பக்கதர்களை ஒழுங்குபடுத்துவதில் ஈடுபட்டிருந்தனர். (த-7-86)

## சமஷ்டிமுறைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் கருத்தை வன்மையாகக் கண்டிப்பதாக ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன கூறினார்.

சமஷ்டி முறையைக் கோரியே தமிழ் மக்கள் கூட்டமைப்பினருக்கு அதிகபடியான வாக்குகளை அளித்து அமோக வெற்றிபெறச் செய்தனர். இதைப் புரிந்துகொள்ள முடியாத அமைச்சர் சம்பிக்க ரணவக்க அபிவிருத்தி மற்றும் அரசியல் தீர்வுக்காகவே வாக்களித்தனர் என்று அறியாத்தனமாகக் கூறியிருக்கிறார். அதேவேளை, பேச்சு வீரர்களாக அல்லாமல் வடக்கு மக்கள் எதிர்பார்க்கும் அபிவிருத்திகளை அப்பிரதேசங்களில் அரசு மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

## முறிந்தது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூட்டமைப்பு நேற்றிரவு அறிக்கை ஒன்றை விடுத்தது. அடுத்த சுற்றுப் பேச்சுக்களை நடத்த வேண்டுமானால் இரண்டு வார காலத்துக்குள் இந்த விடயங்கள் குறித்து அரசு பதிலளிக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதேபோன்று, பேச்சின் பின்னர் அரச தரப்பும் அறிக்கை ஒன்றை விடுத்தது. அதில் கூட்டமைப்பின் நிபந்தனையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஒரு நிபந்தனையை கூட்டமைப்பு விதிக்கும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை என்று தெரிவித்துள்ள அரசு இது விடுதலைப் புலிகளின் நடவடிக்கையைப் போன்று உள்ளது என்றும் விமர்சித்துள்ளது.

அத்துடன், தமிழ்க் கூட்டமைப்பின் இந்த நடவடிக்கை காரணமாக இனிமேல் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நியமித்து அதன் மூலமாகவே இனப் பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படும் என்றும் அரசு அறிவித்துள்ளது. அதில் கூட்டமைப்பு உட்பட அனைத்துக் கட்சிகளும் பங்கெடுத்துக் கொள்ளும் என்று அரசு நம்புவதாகவும் குறிப்பட்டுள்ளது. ஆனால், கூட்டமைப்பு உட்பட பிரதான எதிர்க்கட்சிகள் அனைத்தும் நாடாளுமன்றத் தெரிவுக் குழு என்கிற அரசின் யோசனையை ஏற்கனவே நிராகரித்து விட்டன.

## ஊடகவியலாளர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யர் ஞா.குகநாதன் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து ஊடகவியலாளர்கள் சரமாரியாகக் கேள்விகளைத் தொடுத்தனர்.

செய்தியாளர்: 2005ஆம் ஆண்டு முதல் இன்றுவரை 11 ஊடகவியலாளர்கள் கொலைசெய்யப்பட்டுள்ளனர். இக் கொலைகள் தொடர்பாக ஒருவராவது இன்றுவரை கைதுசெய்யப்படவில்லை. நூற்றுக்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர். இது குறித்தும் எவரும் கைது செய்யப்படவில்லை. இந்த நிலையில் உதயன் செய்தி ஆசிரியர் குகநாதன் மீதான தாக்குதல் குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

அமைச்சர்: ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொலை குறித்து ஒருவர் கைதுசெய்யப்பட்டார். எவரும் கைதுசெய்யப்படவில்லை என்பது தவறு.

செய்தியாளர்: குகநாதன் தாக்குதல் குறித்த அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்ன?

அமைச் சர்: அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை குறித்து எனக்கு எதுவும் தெரியாது. அடுத்த செய்தியாளர் மாநாட்டில் இது குறித்து தெரிவிப்பேன் - என்றார். (ஒ-சி)

நல்லூர் பின் வீதியில்
கற்சுமி வெளியீட்டின்
சிறப்பு விற்பனை நடைபெறுகிறது

The Science Point
Kannathiddy, Jaffna
PHYSICS→ K.Selvan B.Sc. (Hons)
A/L - 2012 புலங்கள்
ஆரம்பம்:- 06.08.2011 சனி 6.15
(சனி, ஞாயிறு 6.15-7.15)

புதிய
நாவலர்
கல்வி நிலையம்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.
மூன்றாம் தவணை ஆரம்பம்
06.08.2011 சனி 3.00 மணி
யாழ் நகரின் முன்னணி ஆசிரியர்களின் வழிகாட்டலில் வகுப்புகள் நடைபெறும்.

ஆசிரியர்கள் தேவை
யாழ் நகரிலுள்ள கல்வி நிலையத்துக்கு தரம் 1 முதல் தரம் 5 வரை சகல பாடங்களும் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் தேவை.
தொடர்பு: 0774598440

NEC ஆனைப்பந்தி சந்தி (பருத்தித்துறை வீதி)
கணக்கீடு
திரு.பாலகஜன் H.N.Dip in Acc.
A/L 2012 | வங்கி இணக்கக்கூற்று சனி, ஞாயிறு 9-10 A.M. | A/L 2013
ஆரம்பம்:
06.08.2011 சனி காலை 9 மணி

பொருளியல் : NB.கஜீதரன்
2013 A/L
தேர்ச்சி -02 'கேள்வி, நிரம்பல் கோட்பாடு'
2012 A/L
தேர்ச்சி -07 'விலை மட்டங்கள்'
(புதிய தேர்ச்சிகள் ஆரம்பம்)
★ நேர அட்டவணை அலுவலகத்தில்
★ வாரத்தில் 7 மணித்தியாலய வகுப்புகள்
BPI குருநகர் NEC யாழ்.நகர்

புதிய பிரிவுகள் ஆரம்பம்
A/L 2012 A/L 2013
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்:-06.08.2011 சனி காலை 8.00 மணி
★ தனிப்பட்ட கவனிப்பு ★ கூடுதலான விளக்கம்
★ விரைவான மீட்டல்கள் ★ தொடர் பரீட்சை
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

LOGIC P.கமல்
A/L 2013
★விஞ்ஞான வகைமீடு
★ குறிமீட்டு அளவைமியல்
பிரிவு -I
Sat, Sun 10.00 - 11.00 am
பிரிவு - II
Sat, Sun 7.00-8.00 am
A/L 2012
★ புள்ளி விபரவியல்
★ நிகழ்தகவு
பிரிவு - I
Sat, Sun 8.00-9.00 am
பிரிவு-II
Sat, Sun 9.00-10.00 am
ஆரம்பம்- 06.08.2011 சனிக்கிழமை
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!
Diploma in Mobile Phone Repairing
(Software & Hardware Repairing)
(பல புதிய விடயங்களுடன்)
(With Digital Electronic)
சகலவகையான கைத்தொலைபேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார்கற்கை நெறி !!!
வகுப்பு ஆரம்பம் - 06/08/2011 நேரம்10மணி காலம் 2 மாதங்கள் -
உங்கள் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும் !!
விபரங்களுக்கு : UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862

அதிபர், ஆசிரியர்கள், வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்கள் வியாபார, விற்பனை பிரதிநிதிகளுக்கான ஆங்கில பயிற்சி
20 வாரநாட்கள் English பயிற்சிநெறி
ஆரம்பம் : 08.08.2011 திங்கள்கிழமை முடிவு : 02.09.2011
பிரிவுகள் : காலை 8-9.30, 9.30-11, 11-12.30, மாலை 3-4.30, 4.30-6
ஏதாவதொரு பிரிவில் பயிற்சிபெறலாம்
பயிற்சிக்கான மொத்த கட்டணம் : ரூபா 3000/- மட்டும்
விஞ்ஞானரீதியான பயிற்சிநெறியின் 20 நாள் வகுப்புக்களில் முழுமையாக ஆங்கிலம் கதைக்க முடியாதவர்களுக்கு பணம் முழுமையாக திருப்பித்தரப்படும்
பதிவுக்கு : 06.08.2011 - 07.08.2011 - 08.08.2011
ஆங்கிலம் கதைப்பது மிக மிக இலகுவானது
MyWay 182 1/5, STANLEY ROAD, JAFFNA
077 33 63 456 021 222 9505

Quick Learning Course
Spoken English with Grammar
Duration 1 Month Rs. 3000.00
உரையாடல் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளச்சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935
BCHS
15-08-2011
Batch I :09.00 AM - 12.00 PM
Batch II : 02.00 PM - 05.00 PM
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே நீங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் ஏற்ற நேர அட்டவணையை தெரிவு செய்து வீண் விரயத்தை தவிர்க்கவும்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உயர்திரு.தம்பிராசா குருகுலராசா அவர்கள்

## வலயக்கல்விப்பணிப்பாளர், கிளிநொச்சி
## (இலங்கை கல்வி நிர்வாக சேவை-1)

## 21.08.1951 இல் பிறந்து 36 ஆண்டுகள் தளர்விலா உயரிய கல்விப்பணிபுரிந்து
## 05.08.2011ல் ஓய்வு பெறும்
## பெருந்தகையின் சேவையை பாராட்டி வாழ்த்துகிறோம்.



பூமிக்கு பொற்காலம்
கல்விக்கு கார்காலம்-எம்
பணிப்பாளரின் சேவைக்காலம்
மாணவர்களின் மகத்துவத்தையும்
அதிபர், ஆசான்களின் ஆளுமையையும்
உள்ளத்தில் ஏற்றி போற்றிடுவார்
ஓய்வு பெறும் இவ்வேளையிலும்
ஓயாத உங்கள்பணி
காலம் உள்ளவரை
கல்வி உள்ளவரை
உம்புகழும் நிலைத்திருக்கும்

கல்விச் சமூகம்,
கிளி/கிளிநொச்சி மத்தியகல்லூரி.

உங்கள் குருகுலத்தில்
கல்விபயின்ற
விழுதுகள் பல.......
பிரமந்தனாறு அதிலொரு விழுது
நிழல் கொடுத்தது போதுமென்று
திருப்தியுடன் விடைபெறும்
ஆலமரம் குருகுலராசாவே
அன்போடு வாழ்த்துகின்றோம்.

கல்விச் சமூகம்,
கிளி/பிரமந்தனாறு.ம.வி.

நிமிர்ந்த நடையும் நேரிய பார்வையும்
சிறந்த கல்வியும் கொண்டவரே
கனிந்த பேச்சும் கல்வியில் உயர்வும்
தனக்கெனக் கொண்ட பணிப்பாளரே
ஒளிரும் சூரியன் உதயமாவது போல்
ஓய்வின் பின்னரும் தங்கள் சேவை
ஒளிர வாழ்த்துகின்றோம்.

கல்விச் சமூகம்,
கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி,

36வருட மகத்தான சேவையில்
வைரக்கற்களாய் பதிந்த உங்கள் வார்த்தைகள்...........
சேவைக்கென்று நடந்த உங்கள் பாதங்கள்.......
கிளிவலயத்தின் கீர்த்தி மிகு காவலனே.......
வெற்றியே இலக்கு என்ற உங்கள் நிமிர்வு
எங்கள் பாதையில் நீங்கள் கலங்கரை விளக்கு
உறுதியும் உற்சாகமும் உங்களின் உடன்பிறப்பு
ஓய்வு பெறும் நாளில் நன்றியுடன் வாழ்த்துக்கள் சொல்கிறோம்.

கல்விச் சமூகம்,
கிளி/கிளிநொச்சி.ம.வி.

மாண்பு மிக்க பணிப்பாளர்
திரு.த.குருகுலராசா அவர்கள்
மணிவிழாக் காணும்
மகத்தான நன்னாளில்
மகிழ்வுடனே வாழ்வு தொடர்ந்திட
மனம் குளிர்ந்து வாழ்த்துகின்றோம்.

கிளி/ தருமபுரம்.ம.வி,
தருமபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது மண்டபம் பொருத்தமற்ற இடத்தில் அமைப்பதற்கு பொதுமக்கள் எதிர்ப்பு

கிளிநொச்சி, ஓக. 5

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு செல்வபுரம் பகுதியில் பொதுநோக்கு மண்டபம் அரசியல் தலையீடுகள் மூலம் பொருத்தமற்ற ஓர் இடத்தில் அமைக்கப்படுவதைத் தாம் எதிர்ப்பதாகப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதியில் முன்பள்ளிக்கான கட்டட வசதிகளோ அல்லது ஆரம்ப சுகாதார நிலையமோ இல்லை. அத்துடன் பொது நிகழ்வுகளை மேற்கொள்ளக் கூடிய பொது மண்டபங்களும் இல்லை. இந்த நிலையில் நிக்கோட் திட்டத்தின் கீழ் பொது நோக்கு மண்டபம் ஒன்று அமைக்கப்படுவதற்கான திட்ட முன் மொழிவுகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான இடமும் தெரிவு செய்யப்பட்டிருந்தது. இதற்கான காணி 1961 ஆம் ஆண்டு பொதுத் தேவைகளுக்கென ஒதுக்கப்பட்டது.

இந்தக் காணியில் சிரமதானப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. இந்தக் கிராமத்திலுள்ள மக்களில் 75 வீதமானோர் இந்தப் பகுதியை மையமாகக் கொண்டே வசித்து வருகின்றனர். அத்துடன் செல்வபுரம் கிராம அலுவலர் பிரவின் ஒரு மையப் பகுதியாகவும் இந்த இடம் காணப்படுகின்றது. ஆகவே இந்த இடத்தில் பொது மண்டபத்தை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டு ஒப்பந்தகாரரிடம் வரை படமும் வழங்கப்பட்டது. இந்த இடத் தைக் காணி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இந்த நிலையில் வவுனிக்குளம் அணைக் கட்டு வீதியில் இரண்டு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள தனியார் காணி ஒன்றில் இந்த மண்டபத்தை அமைப்பதற்கு ஒரு சிலர் தமது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. தற்போது தெரிவு செய்யப்பட்டுள்ள இடத்தில் பத்து வீதமான மக்களே வசிக்கின்றனர்.

ஆகவே முன்பு தெரிவு செய்யப்பட்ட இடத்திலேயே இந்தப் பொது மண்டபம் அமைக்கப்பட வேண்டுமென இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (க-6)

# நேர அட்டவணைக்கு அமைவாக இயங்குமாறு தனியார் கல்வி நிலையங்களுக்கு வேண்டுகோள்

மன்னார், ஓக. 5

மன்னார் மாவட்டத்தில் உள்ள தனியார் கல்வி நிலையங்கள் நேர அட்டவணைகளுக்கு அமைவாக இயங்க வேண்டுமென மாணவர்களின் பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

சமீப நாள்களாக தனியார் வகுப்புகளுக்குச் செல்லும் மாணவ, மாணவிகளில் சிலர் தகாத செயற்பாடுகளில் ஈடுபடுவதாகச் செய்திகள் வெளி வந்துள்ள நிலையில் பெற்றோர்களால் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லும் மாணவர்கள் குறித்த நேரத்தில் பாடங்கள் நடைபெறாவிட்டால் சுற்றித் திரிவதோடு தகாத செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. குறிப்பிட்ட நேரங்களில் நேர அட்டவணைகளுக்கு அமைவாகப் பாடங்கள் ஒழுங்கா நடைபெற்றால் இத்தகைய மோசமான நிலை உருவாகமாட்டாதெனப் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், மாணவர்களைக் கட்டுப்படுத்தவும் இலகுவாக அமையும். தனியார் கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்களின் வரவு தொடர்பான விவரங்களைத் தமக்கு அறியத் தருமாறும் பெற்றோர்கள் கல்வி நிலைய நிர்வாகிகளைக் கேட்டுள்ளனர்.

இதன் மூலம் தாம் தமது பிள்ளைகளைக் கண்காணிக்க முடியுமென்பது அவர்களின் நம்பிக்கையாகும்.

தற்போது மன்னாரிலுள்ள தனியார் கல்வி நிலையங்களில் இத்தகைய ஏற்பாடுகள் எதுவுமில்லை. இதனால் மாணவர்கள் தமது விருப்பம் போலப் பெற்றோர்களை ஏமாற்ற முடிவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இந்த விடயத்தில் கல்விசார் அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்காது மெத்தனமாக இருந்தால் இங்குள்ள மாணவர்களின் எதிர்காலமே பாழாகி விடுமெனப் பெற்றோர்கள் அஞ்சுவதாகவும் தெரியவருகின்றது. (க-601)

## அக்கராயன் அ.த.கவுக்கு உதவிகள்



கிளிநொச்சி மாவட்டம் அக்கராயன் அ.த.க பாடசாலைக்கு சுவிஸில் வாழும் உறவினர் ஒருவர் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான உதவிகளை வழங்கியுள்ளார்.

இவற்றுள் மாணவர்களுக்கான பாதணிகள், சீருடைகள், தொண்டராசிரியர்களுக்கான உதவிகள் என்பன அடங்கும். சுவிஸில் வாழும் செல்வகுமார் ரங்கதீபன் என்பவரே சுவிஸில் இருந்து இந்த உதவிகளை வழங்கியுள்ளார்.

அக்கராயன் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் வறுமைக் கோட்டுக்கு உள்ளான நிலையில் இவர்களுக்கு பாதணிகளை வாங்கிக் கொடுக்க முடியாத நிலையில் இவர்களது பெற்றோர்கள் உள்ளனர். தற்போது சுவிஸ் உறவினால் வழங்கப்பட்ட பாதணிகள் அணிந்தவாறு இந்த மாணவர்கள் மகிழ்வுடன் பாடசாலைக்குச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. (க-140)

## உப்புக்குளம் அம்பாள் தீர்த்தம்

மன்னார், ஓக.5

மன்னார் உப்புக்குளம் ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த தீர்த்தம் கடந்த செவ்வாய்க்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

ஆண்டுதோறும் இந்த ஆலயத் திருவிழா சிறந்த முறையில் நடைபெறுகின்றமை சிறப்பு அம்சமாகும். இதைப் போன்றே இந்த வருடமும் பெருந்திரளான பக்தர்களின் பக்திப்பரவசத்துடன் திருவிழா இடம்பெற்றது. (க-601)


உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 631
திகதி 03/08/2011

சுப்பர் இலக்கம்: 24

வெல்லப்பட்ட இலக்கங்கள்: 07 44 62 67

| | சூட்டு | பரிசுத்தொகை | வெற்றிப்பெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 11,010,960.00 | - |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 1,000,000.00 | 01 |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 3 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 50,000.00 | 10 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 2,000.00 | 253 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 2 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 1,000.00 | 536 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 100.00 | 12,938 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 1 இலக்கம் சரியா இருப்பின் | ரூ. 40.00 | 7,507 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியா இருப்பின் | ரூ. 20.00 | 186,483 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியா இருப்பின் | ரூ. 20.00 | 29,781 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசுத்தொகை ரூ. 8,461,360.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்பு திகதியில் இருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுப்படியாகும்
ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிசட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது
பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு 11,324,300.80

தேசிய லொத்தர் சபை
இணையத்தளம் - WWW.nlb.lk


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி சுந்தரம் பொன்னம்மா**

தோற்றம் 02.02.1928 — மறைவு 18.07.2010

**திதி: 06.08.2011 (ஸப்தமி)**

நாளை (06.08.2011) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.**

பாலாவி தெற்கு, கொடிகாமம்.
021 373 7248 (6526)
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**பொன்னையா மகாலிங்கம்**



மானிப்பாய், புதுமடத்தைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி வடக்கை வசிப்பிடமாகவும் வவுனியா, திருநாவற்குளத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா மகாலிங்கம் 01.08.2011 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா மற்றும் கனகம்மா (கனடா) தம்பதியரின் பாசமிகு மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை (றைவர்)- மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் நாகேஸ்வரி யின் அன்புக் கணவரும் ஜனிதா (பிரான்ஸ்), ஜமிலன், ஜயிலன், ஜகிலினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவமணி, தர்மலிங்கம், ஜெயமணி, இந்திராணி(கனடா), சாந்தலிங்கம் (ஜேர்மனி), கணேசலிங்கம்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், குணபாக்கியம், செல்வக்குமார் ஆகியோரின் மைத்துனரும், வசந்தகுமார் (பிரான்ஸ்), வத்சலா ஆகியோரின் மாமனும் கிங்சிகனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (07.08.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது அச்சுவேலி இல்லத்தில் மு.ப.10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி. (6519)

தகவல்:-
குடும்பத்தினர்


**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், நல்லூர், புதிய செம்மணி வீதியில் 2¾ பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட கல்வீடு உடன் விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
தொடர்பு: 0772824852 (6539)

**தேவை**

கபிலா சு பலஸ் வியாபார ஸ்தாபனத்துக்கு கணக்கு எழுதுவினைஞர் ஒருவர் (பெண்) தேவை.
தொடர்பு: 021 222 3097

**வீடு வாடகைக்கு**

சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0712826747

**தேவை**

விநியோகத்தர்கள் மற்றும் விற்பனை பிரதிநிதிகள்

முன்னணி பால் உணவு, பழவகை தயாரிப்பு மற்றும் விநியோகிக்கும் நிறுவனத்தில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை மற்றும் கல்முனை ஆகிய பகுதிகளில் மேற்படி பதவிகளுக்கு உடனடி வெற்றிடங்கள் நிலவுகின்றன.
வேகமாக விற்பனையாகும் நுகர்வோர் பொருள்கள் (FMCG) துறையில் அனுபவம் பெற்றிருத்தல் வரவேற்கத்தக்கது.

தொடர்புகளுக்கு:0777-256249
அலைபேசி: [illegible]


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| | மண்ணில் | விண்ணில் |
|---|---|---|
| | 18 | 05 |
| | 09 | 08 |
| | 1953 | 2008 |



அமரர் அருளப்பு

**என்சிலி மகாராஜா (கிளி)**

அருணோதயமாய் இருந்தீர் அப்பா
அளப்பல பணிகள் புரிந்தீர் அப்பா
இருளில் எம்மை இங்கே விட்டு
எங்கே மறைந்தீர் இன்பக் கிளியே - அப்பா
ஆண்டு 3 சென்றாலும் உயிர்
உள்ளவரை மறவோம் உங்களை

6/1,புகையிரத ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (6521)

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூறு வருடங்கள் பழைமை வாய்ந்த நுணாவில் மத்தி கந்தசுவாமி ஆலயம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

நுணாவில் மத்தியில் நூறு வருடங்களுக்கு முன்னர் சிறிய குடிலாக உருவாக்கப்பட்ட கந்தசுவாமி ஆலயத்தை சபாரத்தினம் ஐயர் குடும்பம் பராமரித்து வந்தது. அவரது மூத்த மகனான நாகேஸ்வர ஐயர் தெய்வ நம்பிக்கை கொண்டவர்.

நாகேஸ்வர ஐயர் பொருளா தார வளம் படைத்த குடும்பஸ்தர். எனினும் யாவும் இறைவன் பாரமே என் கின்ற ஒரே நோக்குடையவர். அவரது பக்தி யும் முருகன் மீது கொண்ட அசைக்க முடியாத நம்பிக்கையும் கஷ்ட நிலையில் இருந்த அவரது வாழ்க்கையை வளப்படுத்தின. கண்டி கதிரேசன் ஆலயத்தின் முருகனைப் பக்தியோடு வழிபட்டு அவன் பால் வந்த தர்மப்பொருள்களைக் கொண்டு நுணாவிலில் உள்ள முருகன் ஆலயத்தைப் புனரமைப்புச் செய்யத் தொடங்கினார். தமது மூதாதையர் ஆரம்பித்து வைத்த பணியை தாம் செய்து முடிக்க வேண்டும் என்கின்ற திருவருள் உந்துதல் ஏற்பட்டது.

அதன்படி வடக்கு வாயில் கொண்டிருந்த பிள்ளையார், முருகன் ஆலயங்களை கிழக்கு நோக்கிய ஆலயங்களாக அமைத்தார். புதிதாக அமைத்த ஆலயங்களில் பிள்ளையாரையும் முருகப் பெருமானையும் பிரதிட்டை செய்து 1962 ஆம் ஆண்டு பங்குனி 22 ஆம் திகதி அத்த நட்சத் திரத்தன்று மட்டுவில் சிவஸ்ரீ ந.கிருஷ்ணசாமிக் குருக்கள் தலைமையில் மகா கும்பாபிஷேகத்தை நடத்தினார்.



அன்று தொடக்கம் வைரவர் ஆலயமாகத் திகழ்ந்த இந்த ஆலயம் முருகன் ஆலயமாக மாறியது. எனினும் வைரவர் கோயிலுக்கான விசேடங்களும் வைபவங்களும் அன்று தொடக்கம் இன்று வரை சிறப்பாகவே நடைபெற்று வருகின்றன. அத்துடன் திருப்பணி வேலைகள் நின்று விடவில்லை. நுணாவிலூர் மக்கள் வைரவர் மீதும் முருகன் மீதும் வைத் துள்ள பக்தி மேலும் வளர்ந்து சந்தன ஐயரின் திருவருள் வசம் தொடங்கிய திருப் பணி அவரது மனதில் மூன்றாவது தலை முறையில் தான் இந்தக் கோயில் என்ற வாக்குப்படி திருப்பணிகள் நிறைவு பெற்றன.

ஆலயத்துக்கு கும்பாபிஷேகம் நடைபெற்ற நாள் தொடக்கம் ஆலயத்துக்கு வரும் அடியார்களின் கூட்டமும் அதிகரிக்கத் தொடங்கின. பத்து வருட கால இடைவெளிக்குள் வைரவர் ஆலயம், அம்பாள் ஆலயம் ஆகியவை புனரமைப்புச் செய்யப்பட்டன.

1972 ஆனி மாதம் அனுஷ நட்சத்திரத்தன்று வைரவர் ஆலயம் மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து நித்திய, நைமித்திய பூசைகள் நடந்த காலங்களில் வைரவப் பெருமானுக்கு இலட்சார்ச்சனைகள் நடை பெற்று வருகின்றன. இந்தக் காலங்களில் நுணாவிலூர் மக்களின் ஒத்துழைப்புடன் வள்ளி, தெய்வயானை சமேதராகச் சிவசுப்பிரமணியப் பெரு மான் உற்சவ நாயகர் பிரதிட்டை செய்யப்பட்டு பங்குனி மாதம் அத்த நட்சத்திரத்தை இறுதியாகக் கொண்டு அலங்கார உற்சவம் நடைபெறுகின்றது. 1972 ஆம் ஆண்டில் நாகேஸ்வர ஐயர் சிவபதம் அடைய அவரின் மூத்த புதல்வர் இராமச்சந்திர ஐயர் பொறுப்பேற்று தந்தையின் பணியை நிறை வேற்றி வருகிறார். இவருக்குப் பக்கபலமாக அவரது சகோதரன் சண்முகராஜ ஐயர் நித்திய பூஜைகளை நடத்தி வருகிறார்.

1976 ஆம் ஆண்டு ஆலய வளாகத்தில் மகா விஷ்ணு ஆலயம், நவக்கிரக நாயகர்கள் கோயில் ஆகியவை புதிதாக அமைக்கப்பட்டன.

1988 ஆம் ஆண்டு பிற்பகுதியில் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு

ஐயந்தன்

திருப்பணி வேலைகள் நடைபெற்றன. நுணாவிலூர் மக்கள் பொருளை வாரி வழங்கினார்கள். இந்த நிதியின் மூலம் ஆலயக் கட்டடங்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டு 1985 ஆம் ஆண்டு பங்குனி உத்தரத்தினத்தன்று இரண்டா வது மகா கும்பாபிஷேகம் வெகு சிறப் பாக நடத்தப்பட்டது.

ஆலய தர்மகர்த்தா இராமச்சந்திர ஐயர் காலமாகியதையடுத்து அவரின் ஏக புத்திரனான சோமஸ்கந்த ஐயர் ஆலய நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இவர் ஒரு பொறியியலாளராக இருந்த போதிலும் தந்தையின் சொற்படி கண்டி கதிரேசன் ஆலய பிரதம குருவாகவும் நுணாவில் முருகன் ஆலய பரம்பரை தர்மகர்த்தாவாகவும் இருந்து அனைத் தையும் கவனித்துக் கொண்டு வருகிறார்.

கிராம மக்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் முருகப்பெருமானின் ஆலய வீதியில் தேர் ஓடவேண்டும் என்ற எண்ணம் மேலோங்கவே அனைத்து மக்களும் ஒன்று சேர்ந்து ஆலய தர்ம கர்த்தாவிடம் தமது எண்ணத்தைத் தெரிவித்தனர்.

(தொடரும்)





இரண்டாம் திருவிழா

நல்வழி காட்டுவாயே?

முன்னைப் பெருமைமிகு நல்லையிலே கோயில் கொண்ட
முருகனே..! முக்கண்ணன் திருமகனே..! அன்று
உன்னைத் துணையாகக் கொண்டதனால் தேவர்களும்
உற்றதுயர் நீங்கியே விடிவுதனைப் பெற்றனரே
இன்னும் ஏனய்யா துணையாகத் தயக்கமோ?
இன்னருள் தந்திடவே திருவுள்ளம் கொள்ளாயோ?
நின்னையே தொழுமெமக்கு நல்லதாம் வாழ்வுதர
நீயெழுந்து வருவாயே வெற்றிதரும் வேலுடனே!

.- நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்

வேல், வள்ளி, தெய்வானை வீதிவலம்
மாலை 5 மணி

விழாச் சிறப்புற வாழ்த்துவோர்:

வள்ளி மணாளனே முருகா சரணம்!

**V.S.P. லஞ் ஒயில்**

பரிமளா ஸ்ரோர்ஸ்

தொ.பே: 021 222 4135, 021 222 9165

26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.



**வருடாந்த மகோற்சவம் 2011**

யா/சங்கானை செங்கற்படை பிள்ளையார்

2ஆம் திருவிழா

இரு நான்கு அவதானம் இரு நான்கு சித்திகள்
பெருக அருளும் மகாதேவ பிள்ளையாரே
இரண்டாம் தினத்து இன்று உன்னை
வரம் பல வேண்டி திரண்டு நின்று
திருத்தாள் தொழுதோம் திடம் தா நீ!!

சிறப்புற வாழ்த்துவோர்

நிற்சாமம் ஞான வைரவர் ஆலய பரிபாலன சபையினர்.

வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் தரும்

**சோ- கூ-றே குபேர மணிமேக்கர்ஸ்**

கடன் தொல்லை, கல்வியில் முன்னேற்றமின்மை, வேலையின்மையும் பணக் கஷ்டமும், திருமணத் தடை, கொடிய நோய்களின் அவஸ்தை போன்ற வாழ்வின் மிக முக்கிய 5 பிரச்சினைகளுக்கு ஒரே தீர்வு - வாகனம், மனை, கடை மற்றும் சகல வியாபார ஸ்தாபனங்களிலும் வைக்க உன்னத பலன் கிடைக்கும்.

விலை ரூபா 5100/= மட்டும்

(இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டது)

உங்கள் இருப்பிடங்களுக்குத் தருவிப்பதற்கு அழையுங்கள்:

0771399950

**ஓம் சக்தி ஜோதிட நிலையம்**

ஜோதிடர் - நரேந்திரன் சுவாமி

தொ.பே.: 0779759393, 0756794959



இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள சுவாமி அவர்கள் ஜாதகம், கைரேகை, கம்பியூட்டர், ஜோதிடம் என்பன நல்ல முறையில் கூறுவார்.

சந்திக்கும் நேரம்: காலை 7 மணி பி.ப 7மணி

தொடர்பு: அமுல் கிறீம் ஹவுஸ் அன் பேக்கரி, இல.452, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (6145)

இலங்கையின் முதற்தரப்பாடசாலை ஆசிரியர்களால் நடத்தப்படும்

தரம் - 5 மாணவர்களுக்கான

**மாபெரும் கல்விக் கருத்தரங்கு - 2011**

(பல்லூடக திரையில் - விளக்கங்களும் காட்சிகளும்)

காலம்: 09.08.2011, 10.08.2011

நேரம்: காலை 8.30 - பி.ப. 2 மணிவரை

இடம்: SCIENCE HALL

(பதிவுகளுக்கு) கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 0716424246, 0776688421

ஆசிரியர்கள்:

திரு.S.B.சுதன் (கொழும்பு இந்துக் கல்லூரி)

திரு.M.அருள் (கொழும்பு இந்துக் கல்லூரி)

தரம் 4 மாணவர்களும் பங்குபற்றிப் பயன்பெறலாம்.

(குறிப்பிட்ட தொகை ஆசனங்கள் இருப்பதால் பதிவுகளுக்கு முந்துங்கள்)

தொடர்புகளுக்கு: துர்க்கா புத்தகசாலை, சுன்னாகம்.

**விற்பனைக்கு!**

ஐந்து பரப்பு சதுரக்காணி கொக்குவில் மேற்கில் விற்பனைக்குண்டு. காணி அமைந்துள்ள இடம் குளப்பிட்டிச் சந்தியிலிருந்து 1km இற்குள் ஆனைக்கோட்டை றோட்டிலிருந்து 50 மீற்றரில் மண்டைதின்னி நோக்கி போகும் றோட்டில் அமைந்துள்ளது.

தொடர்பு: கு.நவராஜசிங்கம் (குலம்), நித்தியலட்சுமி மரக்காலை, தட்டாதெருச் சந்தி, 481 கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்.

T.P.0214925537

**மனோதத்துவ வைத்தியர்**

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

**Dr. P. ஆறுமுகம்**

T.P-0719315664,0777569205

யாழில் 05.08.2011-10.08.2011 வரை

பதிவுக் கட்டணம் ரூபா: 300/=

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், வெள்ளை படுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றி பெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P. ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

கமால் குரிஸ் இன் (சிவதர்சன் எலெக்ரிக்கல்ஸ் அருகில்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டைவேலி- நெல்லியடி ப.நோ.கூ.சங்கம். (வ-து)

### பார ஊர்திகள் விற்பனைக்கான கூறுவிலை கோரல்

எமது சங்கத்தின் கீழ்வரும் விவரப்படியான 02 (இரண்டு) பாரஊர்திகள் விற்பனை செய்யப்பட உள்ளன. இவற்றினை கொள்வனவு செய்ய விரும்புவோர் கூறுவிலையின் இரகசியத் தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் அடையாளமிட்டு தமது கூறுவிலைகளை 25.08.2011 ஆம் திகதிக்கு முன்னதாக தலைவர்,கட்டைவேலி- நெல்லியடி ப.நோ.கூ. சங்கம், கரவெட்டி என்னும் முகவரிக்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்''கூறுவிலை கோரல்- பார ஊர்தி விற்பனை'' என எழுதப்பட்டு நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

| பார ஊர்தி இலக்கம்- | மாதிரி |
|---|---|
| ✱ 24/4865 | இசுசு ரி எக்ஸ் டி 30 |
| ✱ என்.பி.எச்.கியூ 7375 | லங்கா அசோக் லேலன்ட் |

குறிப்பு:-

01)பார ஊர்தியின் செயற்படு தன்மையினை காரியாலய நேரத்தில் பொதுமுகாமையாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

02) நேரடியாக ஒப்படைக்கப்படும் கூறுவிலைகள் பொதுமுகாமையாளரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

03)கூறுவிலை திறக்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

03.08.2011 - பொதுமுகாமையாளர்

## 'தீண்டாமை கொடுமைகளும் தீ மூண்ட நாள்களும்' வெளியீடு

யோகரட்ணத்தின் 'தீண்டாமை கொடுமைகளும் தீ மூண்ட நாள்களும்' என்னும் நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல நோக்கு கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ்ப்பாண இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகா சபையின் ஏற்பாட்டில் தெணியானின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நூலுக்கான வெளியீட்டுரையை பிரான்ஸைச் சேர்ந்த அசுரா நிகழ்த்தவுள்ளார். மதிப்பீட்டுரையை ஓய்வுபெற்ற ஆசிரியர் க.தங்கவடிவேல், ஓய்வுபெற்ற ஆசிரியர் ஆ. கந்தையா, யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் இ. இராஜேஸ் கண்ணா, இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் இணைச் செயலாளர் ந. தமிழ் அழகன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

ஈ.பி.ஆர்.எல்.எப் பத்மநாபா அணியின் ரீ. சிறீதரன், ஊடகவியாளர் எஸ். மனோரஞ்சன், சட்டத்தரணி தெ. ரெங்கன் ஆகியோர் கருத்துரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

இந்த நூலை எஸ்.ஐயாத்துரை வெளியிட்டு வைக்கவுள்ளார். (த-14)

## விற்பனைக்கு (For sale)

உறுதியான செங்கற்கள், அரிந்த சிமெந்துக் கற்கள், ஓடுகள் என்பன குறைந்த விலையில் உங்கள் இருப்பிடம் தேடிக் கொடுக்கப்படும்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா போன்ற இடங்களுக்கு மட்டும்.

தொடர்புகளுக்கு: 0778818799
இல-365, முத்திரைச் சந்தி, நல்லூர்.

## அதிபரை பாராட்டி வாழ்த்துகின்றோம்



**உயர்திரு. எல். ஓங்காரமூர்த்தி**
(அதிபர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி)

எமது கூடைப்பந்தாட்ட அணியினர் மின்னொளியில் பயிற்சி பெறுவதற்குரிய வசதிகளை ஏற்படுத்தித் தந்துதவிய ஓய்வு பெறும் அதிபரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட அணியினர்.**

(6522)

## மணி விழா நாயகனை வாழ்த்துகின்றோம்



இடம்: இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி
**காலம்: 14.08.2011 பி.ப. 2 மணி**
(ஞாயிற்றுக்கிழமை)

பேராசிரியர் க.தேவராஜா அவர்கள்
பேராசிரியரின் அன்புள்ளங்கள் இதனைத்
தனிப்பட்ட அழைப்பாகக் கருதி சமுகம் தரவும்

பல்கலைக்கழகம் சென்று பயில்பவர் தங்கள் தங்கள்
சொத்து சேர் சுகங்களென்ற சிந்தனை வட்டத்தோடு
தங்களை மறந்தாரென்றூர் தவித்திடும் நிலைமையின்றி
எங்களின் பிள்ளையானீர் இணைந்த நம் மூரின் வாழ்த்து

வாழ்த்துவோர்: ATC இணுவில் தேவா மணிவிழாச் சபை

ISUZU
Global Leader

# உலகின் முன்னணி ISUZU நிறுவனம் மற்றும் NDB லீசிங் இணைந்து வழங்கும்

# ஓர் வியப்பூட்டும் சலுகை!



ஜப்பானிய தயாரிப்பு

மாதாந்த தவணைக் கட்டணம் VAT அடங்கலாக ரூ.1,985/- முதல் (ரூ.100,000/-,க்கு)

**NDB வங்கி சதொச மோட்டர்ஸ் உடன் இணைந்து, ISUZU ட்ரக் ஒன்றினை விசேட லீசிங் மூலம் கொள்வனவு செய்வதற்கான ஓர் அரிய வாய்ப்பினை வழங்குகின்றது!***

- ரூ. 50,000/- வரையான விலைக் கழிவு
- விசேட குறைந்த வட்டி வீதம் மற்றும் முன்னதாக பணத்தை செலுத்தி முடிக்கும்பொழுது மேலதிக அனுகூலங்கள்
- 2 வருடங்கள் அல்லது 40,000 Km க்கான உத்தரவாதம்
- காப்புறுதி தொடர்பாக விசேட விலைக் கழிவு
- என்ஜின் மீது 100,000 Km வரையான உத்தரவாதம் (சதொச மோட்டர்ஸ் மூலம் பராமரிக்கப்படல் வேண்டும்)
- 6 கூலியற்ற இலவச சேவை (தேவையான உதிரிப்பாகங்கள் தொடர்பாக மட்டுமே கட்டணம் அறவிடப்படும்)
- இலவச NDB வங்கி கடனட்டை

**6 வருடங்கள் வரையான மீள் செலுத்தும் காலம்**

**இந்தச் சலுகை
2011 ஜுலை 1 முதல் ஆகஸ்ட் 31 வரை மட்டுமே!**

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

PHOENIX O&M

தலைமைக் காரியாலயம்: கொழும்பு 02.
011 2 32 73 60, 011 4 71 40 77

SML
Sathosa Motors PLC

விநியோகஸ்தர்கள்:
யாழ்ப்பாணம்: தொலைபேசி: 0213 207042
அம்பாறை: தொலைபேசி: 0773 314548

அழையுங்கள்:
கபில 0779 419 000, சம்பத் 0777 420 442
ரஞ்சித் 0777 354 155, சந்தன 0777 420 491

NDB வங்கி:
011 2 44 88 88

வாழ்க்கையை நிதமும் மாற்றும்
NDB வங்கி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org